சைவமும் தமிழும்

செந்தமிழ்வாரிதி,

முனைவர் இரா. செல்வக்கணபதி

வெளியீடு

தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை

சென்னை 90

நண்பரவர்களுக்கு
அன்புடன்
இரா. செல்வக்கணபதி
7.3.06

சைவமும் தமிழும்

செந்தமிழ்வாரிதி

முனைவர் **இரா. செல்வக்கணபதி**

வெளியீடு :

தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை

சென்னை -90

நூலைப் பற்றி ...
(BIBLIOGRAPHICAL DATA)

நூல் பெயர்	:	**சைவமும் தமிழும்**
ஆசிரியர்	:	முனைவர் **இரா. செல்வக்கணபதி** H15/2. கரிகாலன் தெரு கலாசேத்திரா காலனி பெசண்ட் நகர், சென்னை-600 090 தமிழ் நாடு, இந்தியா. தொலைபேசி: 0091-44-24916888
பொருள்	:	இலக்கியம்
பதிப்பு	:	முதற்பதிப்பு, நவம்பர், 2005
உரிமை	:	ஆசிரியருக்கே
தாள்	:	J.K., M.L., 16.6 கி.கி.
எழுத்து	:	11 புள்ளிகள்
நூல் அளவு	:	கிரௌன்
பக்கம்	:	187
விலை	:	ரூபாய் 50.00
வெளியீடு	:	தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை, H15/2. கரிகாலன் தெரு கலாசேத்திரா காலனி பெசண்ட் நகர், சென்னை-600 090 தமிழ் நாடு, இந்தியா.
ஒளியச்சு	:	பரணி ஆப்செட் பிரிண்டர்ஸ் நாராயணபிள்ளைத் தெரு மயிலாடுதுறை -609 001.
அச்சிட்டோர்	:	எஸ்.பி.எஸ். பிரிண்டர்ஸ் இராயப்பேட்டை, சென்னை-600 014

தொடர்புக்கு : nayanmar_63@yahoo.co.in
web: www.nayanmar.com

அணிந்துரை

நீதியரசர். திரு.**எஸ்.நடராஜன்** அவர்கள்
மேனாள் உச்சநீதிமன்ற நீதிபதி
தலைவர், சென்னை, சேக்கிழார் ஆராய்ச்சி மையம்.

தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !

என்ற மாணிக்கவாசகரின் அருள்வாக்கும்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்ற மகாகவி பாரதியின் வாக்கும், சைவ சமயத்தின் உயர்வையும், தமிழ் மொழியின் சிறப்பையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் இடையே நிலவிய இணை பிரியாத் தொடர்பினை நமது சைவத் திருமுறைகளும், தமிழ் இலக்கிய நூல்களும் பறைசாற்றுகின்றன.

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன், புல்லும் பரிமளப் பூங்கொடியே என்று அபிராமி அந்தாதி கூறியது போல், சைவமும் தமிழும் ஒன்றில் ஒன்று கலந்து நிற்கின்றன.

இறைவனை வழிபடும் அறுவகை முறைகளை ஷண்மதங்கள் என்று கூறுவர். சைவம், வைணவம், சாக்தம், சௌரம், கௌமாரம், காணாபத்தியம் என்பன அவை. அறுவகையாகப் பிரிக்கப்பட்டு இருப்பினும், சௌரம், வைணவம் என்ற இரண்டு வகை நெறிகளைத் தவிர்த்து, மற்றைய நான்கு வகை நெறிகளும், சைவ நெறியாகவே கருதப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வந்துள்ளன.

செம்மொழியாகிய தமிழ்மொழி, உலகத்திலுள்ள

அனைத்து மொழிகளிலும், தொன்மை வாய்ந்த மொழியாக, உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியாகும். இந்தச் சிறப்புடைய தமிழ்மொழி, பெருமளவில், சமய இலக்கியங்கள் நிறைந்த மொழியாகவே மிளிர்கிறது.

சங்க கால இலக்கியங்களிலும், திருமுருகாற்றுப் படையிலும், தொல்காப்பியத்திலும், விரிவாகச் சைவ சமயக் கடவுளர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதற்குப் பின்னிட்ட நூற்றாண்டுகளிலே, தமிழ் இலக்கியத் தொகுதிகளில், சைவ சமய இலக்கியங்களே பெரிதும் காணப்படுகின்றன. அவை, திருமுறைகளாகவும், சைவத் தமிழ் இலக்கியங்களாகவும், புராணத் தமிழ் இலக்கியங்களாகவும் அமைந்து போற்றப்பட்டு வருகின்றன.

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் வழங்கிய தேவாரப் பாடல்களை நான்கு முதல் ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பாடல்களை ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தை எட்டாம் திருமுறையாகவும்,திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், பன்னிரு ஆசிரியர்களால் பாடப்பட்ட சிற்றிலக்கியங்களையும், மற்றும் வேறு சில திருப்பதிகங்களையும் பதினொன்றாம் திருமுறையாகவும், தெய்வச் சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகவும் சைவர்கள் தொகுத்து வைத்துப் போற்றி வருகின்றனர்.

பன்னிரு திருமுறைகள் தவிர, சைவச் சார்புடைய தமிழ் இலக்கியங்கள் பலவற்றை ஔவையார், ஒட்டக்கூத்தர், கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரிநாதர், குமரகுருபர சுவாமிகள்,

சிவப்பிரகாச சுவாமிகள், தாயுமான சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் முதலிய அருளாளர்கள் அருளிச்செய்துள்ளார்கள்.

மற்ற சமயங்களிலும், மொழிகளிலும் காணப்படாத அளவிற்குப் பல்வகைச் சிறப்புகளைச் சைவ சமயமும், தமிழ் மொழியும் பெற்றிருந்தாலும், நம்மில் பெரும்பாலானோர், அந்தச் சிறப்புகளின் அருமை, பெருமைகளை அறியாமல், உணராமல் விழியற்றவர்களாகவும், அஞ்ஞானிகளாகவுமே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இந்த நிலைமையை மனத்தில் கொண்டு, பேராசிரியர் முனைவர்.இரா. செல்வக்கணபதி அவர்கள், சைவமும் தமிழும் என்ற தலைப்பில், எளிய, இனிய நடையில், ஒரு நூலை உருவாக்கியுள்ளார்.

அவருடைய நூல் மூலம், எக்காலத்திலும் பொலிவு குறையாத தமிழ் மொழியின் சிறப்புகளையும், என்றும் உய்வளிக்கும் சைவ சமயத்தின் அளப்பிலா உயர்வுகளையும், நம் நாட்டில் மட்டுமன்றி, உலகெங்கும் வாழும் தமிழர்கள் படித்துப் பெரும்பயன் பெறும் வகையில் நூலை எழுதியுள்ளார். சங்க காலத்திலிருந்து, அண்மை காலம் வரை, தோன்றி வளர்ந்த சிறந்த தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள, சமயக் கருத்துகளையும், கோட்பாடுகளையும் ஒரு சிறு நூலில் வெளிக்கொணர்வது எளிய காரியம் அன்று.

அந்தப் பெரும்பணியை, நூலாசிரியர் முனைவர். இரா.செல்வக்கணபதி அவர்களைவிட வேறு எவரும் திறமையாகச் செய்திருக்க முடியாது. முனைவர்.இரா. செல்வக்கணபதி அவர்களின் சிறப்பைத் தமிழ்நாட்டில் வாழும் மக்கள் மட்டுமல்ல; இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற நாடுகளிலும் வாழும், தமிழர்களும் நன்கு அறிவார்கள். அவர்கள், தமிழுக்கும் சைவ சமயத்திற்கும் ஆற்றியிருக்கும் பணிகளை, இந்த அணிந்துரையில் முழுமையாகச் சொல்ல முடியாது.

முனைவர் இரா. செல்வக்கணபதி அவர்கள் தமிழ் இலக்கியங்களையும், சைவ சமயத்தையும் ஆழ்ந்து படித்தவர்; சிறந்த சிந்தனையாளர்; சொற்பொழிவுச் செம்மல்; சிறந்த எழுத்தாளர்; தருமையாதீனம் தமிழ்க் கல்லூரியின் தலைவராகப் பல்லாண்டு பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்; நிறைய நூல்கள் எழுதியுள்ளார்; பல்வேறு மேடைகளிலே இலக்கிய, சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்; தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளிலும், விரும்பி வரவேற்கப்படும் சொற்பொழிவாளர் ஆவார். அறுபத்து மூன்று நாயன்மார்கள் அற்புத வரலாறுகளை ஒலிப்பேழைகளாகவும், ஒலிக்குறுந்தகடுகளாகவும்(சி.டி.க்களாகவும்) தமிழ் மக்களுக்கு அருளியுள்ளார்.

அனைத்து வகையிலும் தகுதியும், சிறப்பும் பெற்ற முனைவர் இரா.செல்வக்கணபதி அவர்கள், இப்போது அளித்துள்ள சைவமும் தமிழும் என்ற நூலில், சங்க காலம் தொடங்கி, தல புராணம் வரை, மிக அருமையாக வரலாறுகளைத் திரட்டித் தந்துள்ளார். ஆங்கிலத்தில் சொல்வது போல், A bird's eye view என்றுசொல்லும் வகையில், இந்த நூலின் ஆய்வு, அமைந்துள்ளது. இந்தப் பெரும் பணிக்காக, உலகம் வாழ் தமிழர்கள் அனைவரும் அவருக்கு நன்றி கூற வேண்டும். இந்த நூலைப் படிப்போர் மிக்க பயனை அடைவார்கள் என்று ஆணித்தரமாகக் கூறலாம். இவ்வளவு சிறந்த நூலுக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பினையும், பேற்றினையும் எனக்குக் கொடுத்துள்ள நூலாசிரியர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. முனைவர் இரா. செல்வக்கணபதி அவர்களின் சமய இலக்கியப் பணிகள் மென்மேலும் தொடரத் தென்னாடுடைய சிவன் அருள புரிவாராக.

....

தெய்வச் சேக்கிழார்
மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை

செ. அருண், பி.இ., எம்.பி.ஏ.,
(அறக்கட்டளைச் செயலாளர்)

நூல் வெளியீடுகள்

'சைவமும் தமிழும்'' என்ற இந்நூல், 'தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை' யின் முதல் வெளியீடாக வெளிவருவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதனைத் தொடர்ந்து, 'தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்' என்ற நூல் இதே ஆண்டில் இரண்டாவதாக வெளி வருகிறது.

சேக்கிழார் அறக்கட்டளை

தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை, எம் தந்தையார், செந்தமிழ் வாரிதி, பேராசிரியர், முனைவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்களின் அரிய முயற்சியால் 2004-இல் தொடங்கப்பட்டு, உரியவாறு பதிவு செய்யப் பெற்றது. அறக்கட்டளைக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, வருமான வரித்துறையின் 80G வரி விலக்கும் பெறப்பட்டது. அறக்கட்டளை H15/2, கரிகாலன் தெரு, கலாசேத்திரா காலனி, பெசன்ட் நகர், சென்னை - 600 090, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரியில் இயங்கி வருகிறது. அறக்கட்டளையின் ஒலிக்களஞ்சிய வெளியீடுகளை, 'அருண் ஆடியோஸ்' ஏற்றுப் போற்றி வெளியிட்டு வருகிறது.

பெரிய புராண ஒலிக்களஞ்சியம்

தெய்வச் சேக்கிழார் அருளிய, திருத்தொண்டர் புராணம் என்ற பெரியபுராண - 63 நாயன்மார் அருள் வரலாறுகளை உலகெங்கும் பரப்புவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டு அறக்கட்டளை நடையிட்டு வருகிறது. இவ்வகையில், 2005-இல் அறக்கட்டளைச் சார்பில், 'பெரிய புராண ஒலிக் களஞ்சியம்' அருண் ஆடியோஸ் வழி மிகச் சிறப்பாகத் தயாரித்து வெளிக் கொணரப்பட்டது. இதன் வழி, சாதி பேதமற்ற, ஒரு மனித குலத்தை உருவாக்க இயலும் என்ற நம்பிக்கை விதைக்கப்பட்டது. பெரிய புராண ஒலிக்களஞ்சியம், 63 நாயன்மார் அருள் வரலாறுகளையும் 40 ஒலிக் குறுந்தகடுகளாகவும் (C.D.), 40 ஒலிப்பேழைகளாகவும் (ஆடியோ கேசட்), 52 மணி நேரம் ஒலிக்கும் MP3 CDக்களாகவும், ஆங்கில வரலாற்றுச் சுருக்கம் இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலும், இந்திய நாடெங்கும், உலக நாடுகளிலும், சைவத் தமிழ் மக்களிடையே, ஒலிக்களஞ்சியம் சிறந்த வரவேற்பைப் பெற்று வருகிறது.

திருமந்திரப் பேருரை

பெரியபுராண ஒலிக்களஞ்சியத்தைத் தொடர்ந்து அறக்கட்டளையின் சார்பில், 'திருமந்திரப் பேருரை' ஒலிக்களஞ்சியம் வெளிக் கொணரப்பட்டது. 'தமிழ் ஆகமம்' என்றும், 'சைவ சமயக் கலைக் களஞ்சியம்' என்றும் போற்றப்படுவது திருமூல நாயனாரின் திருமந்திரம். திருமந்திரம் குறித்துப் பதினொரு விரிவுரைகள் நிகழ்த்தி, ஒலிப்பதிவு செய்யப் பெற்று, ஒலிக்களஞ்சியமாக உருவாக்கப்பட்டது. திருமந்திரப் பாடல்களை, இசைவாணர் நால்வர் பாடியுள்ளனர். முனைவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்களின் திருமந்திரப் பேருரை, 20 மணி நேரம் ஒலிக்கும் MP3 CDக்களாகவும், தலா 90 நிமிடம் ஒலிக்கும் 12 ஒலிப்பேழைகளாகவும் வெளியிடப் பெற்றன.

அருண் ஆடியோஸ் வெளியீடுகள்

முனைவர். திரு. இரா.செல்வக்கணபதி அவர்கள் உரையில், இவற்றுக்கு முன்னாக, உலகெங்கும் வாழும் தமிழர்களின் பொருள் உதவியோடு, அருண் ஆடியோஸ் வழி, 15 நாயன்மார்களின் அருள் வரலாறுகளும் ஒலிப்பேழைகளாக வெளியிடப்பட்டுள்ளன. மேலும், மாணிக்கவாசகர், அருணகிரி நாதர், பெருமைமிகு பிள்ளையார், கனக துர்க்கை, அன்னை அபிராமி, தெய்வச் சேக்கிழார் ஒலிப்பேழைகளும் வெளிக்கொணரப்பட்டன. இலங்கை, இந்து சமயக் கலாசாரத் திணைக்களத்தின் வேண்டுகோளை ஏற்று, ***ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் அருள் வரலாற்றை*** *மூன்று ஒலிப்பேழைகள் வாயிலாக அருண் ஆடியோஸ் வெளியிட்டு வழங்கியது. முனைவர். திரு. இரா.செல்வக்கணபதி அவர்களின் விரிவுரையுடன், பாடல்களும் இணைத்து, சென்னை ஆன்மிக இலக்கிய வட்டம்,* ***கோளறு திருப்பதிகத்தை*** *இரண்டு ஒலிப்பேழைகளாக வெளியிட்டது.*

எதிர்காலத் திட்டங்கள்

தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை, எதிர்வரும் காலங்களில், மனித குலத்திற்கு, ஒல்லும் வகையில் உதவப் பல திட்டங்களை முன் வைத்துள்ளது. அறக்கட்டளை சார்பில், தமிழ்நாட்டில் நிலவும், சைவ சமயம் குறித்த கலைக்களஞ்சியம் ஒன்றைத் தயாரித்து, நூல் வடிவிலும், குறுந்தகடுகளாகவும் வெளியிட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரியபுராணத்திற்கு, அதன் உள்ளீட்டைத் தொகுத்து, அகர வரிசைப்படுத்தி, ஒளி நெறிக்கட்டுரைத் தொகுதி வெளிக்கொணர்வது; பெரியபுராணம் குறித்து, இதுநாள் வரை வெளிவந்துள்ள, பல்வகை நூல்களின் ஆய்வடங்கல் ஒன்றைத் தயாரித்து வழங்குவது என்பன வருங்காலத் திட்டங்களுள் சிலவாகும்.

தொடர்பு கொள்ள வாயில்கள்

உலக மக்கள் அனைவரும் பெரியபுராணத்தையும், 63 நாயன்மார் அருள் வரலாறுகளையும் அறியுமாறு, அறக்கட்டளையின்

சார்பில் ஆங்கிலத்தில், நாயன்மார் ஒளிப்படங்களுடன், வெப்சைட் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. www.nayanmar.com, கணினி வழித் தொடர்புக்காக, nayanmar_63@yahoo.co.in என்ற மெயில் இணைப்பும் அமைக்கப்பட்டுள்ளது.

முனைவர் இரா. செல்வக்கணபதி

நூலாசிரியரும், அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் அறங்காவலருமாகிய எம் தந்தை முனைவர். திரு. இரா.செல்வக்கணபதி அவர்கள் சேக்கிழாரிடம் பேரீடுபாடு கொண்டவர்கள். பெரிய புராணத்தில் தோய்வும், ஆழ்ந்த புலமையும் மிக்கவர்கள். அப்பூதி அடிகள் நாயனாரின் ஆயுள் தொண்டர். கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகவும், முதல்வராகவும் பணியாற்றியவர்கள். நாடறிந்த நல்ல தமிழ் அறிஞர். தமிழ் சமய இலக்கியப் பேருரையாளர். பன்னிரண்டு நூல்களின் ஆசிரியர். பல்வேறு அமைப்புக்களால் பதினைந்துக்கும் மேற்பட்ட விருதுகளும், பட்டங்களும் வழங்கப் பெற்று கௌரவிக்கப்பட்டவர்கள். இலங்கை, சிங்கப்பூர், இலண்டன் முதலிய நாடுகளின், தமிழ் மற்றும் சமய அமைப்புகளின் அழைப்புகளை ஏற்றுப் பலமுறை சென்று உரையாற்றி மகிழ்ந்தவர்கள். தமிழ்நாடு அரசின் பல்வேறு - தமிழ் வளர்ச்சி முயற்சிகளில் உயரிய பங்காற்றி வருபவர்கள்.

நேசக்கரம் நீட்டுங்கள்

தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளையின் நிறுவனத் தலைவராக எம் தந்தையார் விளங்குகிறார்கள். திருமதி. சந்திரா செல்வக்கணபதி பொருளாளராகவும், திரு. செ.அருண் செயலாளராகவும், திருமதி. காயத்ரி அருண் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

உலகெங்கும் வாழும் சைவத் தமிழ்ப் பெருமக்கள், இயன்றவாறு அறக்கட்டளைப் பணிகளுக்கு நேசக்கரம் நீட்டி ஆதரவு நல்கவும், பணிகளை ஊக்குவிக்கவும் அன்புடன் வேண்டுகின்றோம்.

முன்னுரை

செந்தமிழ்வாரிதி
முனைவர் **இரா.செல்வக்கணபதி**

தாய்மொழி பற்றியும், தங்கள் தாய்ச் சமயம் பற்றியும், ஒவ்வொரு மனிதனும் ஓரளவேனும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். என்றாலும், தமிழ் மக்களில் பெரும்பாலனவர்களுக்கு இவற்றைப் பற்றி ஒன்றுமே தெரிந்திருக்கவில்லை. ஆனால், உணர்ச்சிபூர்வமாகத் தமிழ் மொழி உன்னதமானது என்றும், சைவம் தொன்மையானது என்றும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. உணர்வு நிலை கடந்து, அறிவு நிலை நின்று, இவை பற்றி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை சைவத் தமிழ் அறிஞர்களுக்கு உள்ளது.

தமிழகத்திலும், புலம் பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாற்பதற்கும் மேலான நாடுகளிலும் வாழும் தமிழர்கள், தாய்மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் அறிந்திருக்கவில்லை. தாய்மொழியாகவும், வீட்டில், பேச்சு மொழியாகவும் தமிழ் இருந்த போதிலும், தமிழர்கள் தமிழை நன்கு அறிந்து போற்ற முன் வருவதில்லை. காலப் போக்கில் இந்த நிலை, ஒரு தொன்மொழியின் வீழ்ச்சிக்கு வாயிலாக அமைந்துவிடும். ஆங்கில மோகம், தமிழை, வடமொழி போல, உலக வழக்கு அழிந்து சிதைந்து போகும் நிலை நோக்கி நடத்திச் செல்கிறது. தமிழ் இனத்தின் இந்த மெத்தனப் போக்கு, ஒரு வரலாற்றுப் பிழையாக அமைந்து, பிற்காலத்தாருக்கு நகையைத் தரும்.

தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களின் தாய்ச்சமயம்

சைவம். திருநீறு பூசுவது, உருத்திராக்கம் அணிவது, சிவாலயங்களுக்குச் சென்று வருவது, சடங்காசாரங்களை நிகழ்த்துவது என்பனவற்றிற்கு மேலாக, அவர்களில் பலருக்குச் சைவத்தின் உன்னதங்கள் பற்றியோ, சைவ நூல்கள் பற்றியோ, சைவ தத்துவங்கள் குறித்தோ அதிகமாக ஒன்றும் தெரியாது. கற்கோயில்களும், அச்சுப் போட்ட சமய நூல்களுமே சைவத்தை வாழ்வித்து விட முடியாது. அவற்றைப் புரிந்து போற்றும் அறிவு தழைத்தாக வேண்டும். வழிபாடு அச்சத் தடத்திலிருந்து அன்புத் தடத்திற்கு மாறியாக வேண்டும்.

சைவம் ஒரு சடங்குச் சமயம் அன்று. வாழ்க்கையோடு இயைந்து ஒட்டி உறவாடக் கற்பிக்கும் தன்மை உடையது. சமயம் வாழ்வோடு கலந்து நடையிட வேண்டும். சமய உண்மைகளும், உன்னதங்களும், இளமைக்காலம் முதல், சைவர்களின் குருதி ஓட்டத்தோடு கலக்குமாறு செய்தல் வேண்டும். சமணமும், பௌத்தமும் இதனைச் செய்தன. அவை தமிழகத்தில் வெற்றி பெறாமைக்கு வேறு காரணங்கள் உண்டு. இஸ்லாம், கிறித்தவ சமயங்கள் வாழ்க்கையோடு பிணைந்து நடையிடுகின்றன. வைணவம் கூட, இவ்வகையில் சைவத்தைவிட நன்கு வாழ்வியலில் கலந்து நிற்கிறது.

எந்த ஒரு சைவ சமயிக்கும், உன் தாய்ச் சமயம் பற்றிச் சிலவற்றைச் சொல் என்றால் சொல்லத் தெரிந்திருக்கவில்லை. தம் சமயத்தின் கடவுள் யார்? தோற்றம் கொண்ட காலம் எது? தாய்ச் சமயத்தின் உயர் கொள்கைகள் எவை? தத்துவக் கோட்பாடுகள் எவை எவை? அருளாளர்கள் யார்? அவர்கள் படைப்புக்கள் யாவை? இலக்கியப் பரப்பு எத்தகையது? வழிபடும் நெறிகள் எவை? சமயம், சார்ந்திருப்போருக்கு விதிக்கும் தலையாய கடமைகள் எவை? இவை பற்றி எல்லாம் நூற்றுக்குத் தொண்ணூறு சைவர்களுக்கு ஏதும் தெரியாது. இதை எடுத்துரைக்க நமக்கு வருத்தமும் நாணமும் மிகுகிறது.

ஏராளமான திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்குகள் நிகழ்த்தப்படுகின்றனவே. மக்கள் கோயில் திருப்பணிகளுக்கு ஏராளமான நன்கொடைகள் வழங்குகின்றார்களே. பிரதோஷத்தன்று கூடும் பக்தர்கள் கூட்டம் மிகப் பெரிதாக இருக்கிறதே. மலைவலம் வருவதில் எவ்வளவு பெரிய ஆர்வம் மிகுந்திருக்கிறது. பார்த்தீர்களா? பாதயாத்திரையாக ஆயிரக்கணக்கானவர்கள் பலகாத தூரம் சென்று, நேர்த்திக் கடன் செலுத்துவது சமய வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கவில்லையா? ஐயப்பன் வழிபாட்டில் பாமரர்களும், ஆதிபராசக்தி வழிபாட்டில் மகளிர்களும் காட்டும் பேரார்வம் சமய வளர்ச்சியில் புதிய அத்தியாயங்கள் அல்லவா? என்றெல்லாம் முன்வைக்கும் வாதங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவைதாம். ஐயமில்லை.

நாத்திக வாதங்களால், ஐம்பது ஆண்டுகளாகத் தேக்கம் கொண்டிருந்த சமய வளர்ச்சியில், மேற்குறித்த யாவும் நம்பிக்கையூட்டும் புதுவரவுகளே! ஆயின், இந்த எழுச்சியின் பின்புலத்தில், வெறும் எதிர்பார்ப்புகளும், வாழ்வு குறித்த அச்சங்களும் கலந்திருப்பதை மறுத்தல் இயலாது. இந்த எழுச்சியை அறிவுபூர்வமானதாக ஆக்குதல் சைவ சமயத்தவர்களின் கடமையாகிறது. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை, ஆண்டில் ஒரு மாதம், ஒரு நாள் என்று கிளைக்கும் இந்த எழுச்சியை, வாழ்வோடு சரிவிகிதத்தில் கலந்து, நாள் வழிபாடாக மலர்வித்ததாக வேண்டும். செய்யும் வழிபாட்டின், பொருள் உணரப்பட வேண்டும். உணர்த்தப்படவும் வேண்டும். பிராயச்சித்தங்களுக்காக வழிபாடு என்ற நிலை மாற வேண்டும். சமயம், நாள்தோறும் வேறு தெரியாது, வாழ்வியலோடு கலந்து நடையிட வேண்டும்.

சைவத்தில் பல தெய்வ வழிபாடு இருந்தபோதும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற அரிய கோட்பாடு உள்ளது

என்பதைத் திருமந்திரத்தைக் கற்பிக்காது, சைவர்களை எவ்வாறு அறியவைக்க முடியும்? பிற சமயங்கள் பலவும், அவற்றை உருவாக்கிய அருளாளர்கள் பெயரால், ஒரு கால எல்லையில் தோற்றம் கொண்டுள்ளனவே. சைவம், சிவன் என்ற இறைவன் பெயரால், கால எல்லை தெரியாத காலத்தே தோற்றம் கொண்ட சிறப்புடையது என்பது, திருமுறைக்கல்வி இல்லாது எப்படி அறிய வரும். சாதி பேதமும், குல கோத்திர பேதங்களும், சிவன் சந்நிதியில் இல்லை என்பதைத் திருநாவுக்கரசரைக் கற்காது அறிவது எப்படி? கடவுள் என்பவன் எஜமான். நாம் அடிமை என்பது உண்மை இல்லை. அவன் தோளில் கைபோட்டு நட்புப் பாராட்டலாம் என்பதைச் சுந்தரர் வரலாறு எடுத்துரைப்பது, நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

ஆணும் பெண்ணும் கூடி வாழும் இல்லறமே, உன்னத உயர் நெறி என்று வள்ளுவரை வழிமொழிந்து, சைவம் எடுத்துரைப்பதைத் திருமுறைகள் பேசிக் காட்டுகின்றன. பெண்ணின் வாழ்வில், தொடக்கத்திலேயே இழப்பு ஏற்படுமானால், திலகவதியாரைப் போல் தொண்டு செய்து பெருமித வாழ்வு வாழ முடியும். இடையில், வாழ்வில் சோதனை மிகுந்தால், கணவனைத் தவிர்த்து, இறைமை வாழ்வு வாழ்ந்து, வணங்கத்தக்கவராக உயர முடியும் என்பதை நிறுவிக்காட்டிப் பெண்மைக்கு நம்பிக்கையூட்டிய காரைக்கால் அம்மையார் வரலாறு சைவத்தில் உள்ளதே. கணவன் புறம் சென்றபோது, அருளாளர் துணையும், இறைவன் துணையும் கொண்டு, அவனையும், நாட்டையும் வாழ்வித்த மங்கையர்க்கரசியாரைச் சைவர்கள் குல தெய்வமாகப் போற்றி நிற்கின்றார்களே.

வேத வேள்விகளில் நிகழ்த்தப்பட்ட உயிர்க்கொலைகளை மறுத்துச் சைவம், உயிர் இரக்கம் கொண்ட சமயமாகப் புதுத்தடம் கண்ட பதிவுகள், சைவ நூல்களில்தான் உள்ளன. ஒரு பசுவின் கன்று இறந்ததற்காகப் பிராயச்சித்தம் செய்தால் போதும் என்று,

அமைச்சர்கள் மனு தரும நெறி காட்டியபோது, அது பசுவின் துயரத்திற்கு எவ்வாறு தீர்வாகும் என வினா எழுப்பித் தன் மகனைத் தேர்க்காலில் இட்டுத் தேர் ஊர்ந்த வரலாறு வெறும் வைச சமய வரலாறு அல்லவே. தமிழர் உயிர் இரக்கக் கோட்பாட்டின் உன்னத வரலாறு அல்லவா? புல்லாங்குழல் ஊதி, ஆனிரைகளை மேய்த்த ஆனாய நாயனாரும், பசுக்களைத் துன்புறுத்தியதற்காக ஒரு பிராமணச் சிறுவர், மாடு மேய்ப்பானை விலக்கித் தாமே அவற்றை மேய்க்க முனைந்த, மடைமாற்ற வரலாறுகளும் எல்லாம் கற்பிக்காமல், கூட்டம் கூட்டுவதால் என்ன பயன் பெரிதாக விளையப் போகிறது?

தமிழ் மொழி வளர்ச்சியில், சைவ சமயம் ஆற்றியிருக்கும் பங்கு மகத்தானவை. இறையனார் களவியல் என்ற அகப்பொருள் இலக்கண நூல் ஒன்று உண்டு. அது, மதுரைச் சொக்கநாதன் இயற்றித் தந்தது என்கிறது நூல் வரலாறு. இந்நூலுக்கு எழிலார்ந்த தமிழ் மொழி நடையில், ஓர் அருமையான உரை செய்தார் நக்கீரர். அவர் உரையில், ஓர் இடத்தில், இந்நூல் என்ன பொருள் பற்றி எழுந்தது என்று வினா ஒன்றை எழுப்பிக் கொண்டு விடையும் தருகிறார் நக்கீரர். இந்நூல் என் நுதலிற்றோ எனின், தமிழ் நுதலிற்று என்கிறது அவ்வுரை. அகப்பொருள் உரைத்தது. காதல் உரைத்தது என்று எழுதாமல், தமிழ் நுதலிற்று என்பது பெரிதும் சிறப்புடையது. தமிழர் காதல் நெறி, பிறமொழிகளில் இல்லை. தமிழுக்கே உரிய தனிநெறி அது. அதன் தனிச்சிறப்புக் கருதி நக்கீரர், அகத்தைத் தமிழ் என்றே குறித்தார். இதைப்போல், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், இசையால் தமிழ் வளர்த்த திருஞானசம்பந்தரை, 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று குறித்து மகிழ்கிறார்.

எனவே, அகம் தமிழானாற்போல், சைவமும் தமிழாயிற்று என்பது உறுதியாகிறது. 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்' என்பதும் பிறிதோர் சுந்தரரின் பதிவு. திருஞானசம்பந்தரும்,

திருநாவுக்கரசரும், சமண பௌத்த மதங்களுக்கு எதிராக நிகழ்த்திய போராட்டங்கள் வெறும் சமயப் போராட்டங்கள் அன்று. சமண பௌத்தர்கள் தமிழ் இடத்தில் பாலி மொழியையும் சமஸ்கிருதத்தையும் அமர வைத்தனர். தமிழ்ப் பெண்மையை இகழ்ந்தனர். தமிழர் பெரிதாகப் போற்றிய இசையையும், கூத்தையும், காமத்தைத் தூண்டுவன என அழித்தொழிக்க முயன்றனர். எனவே, இவற்றைக் காக்கும் பொருட்டு நிகழ்த்திய போராட்டம் சைவத்தைக் காத்தது என்பதைவிட, தமிழை, தமிழ்க் கலைகளை, தமிழ்ப் பெண்மையைக் காக்கவென்றே நிகழ்ந்தது புலனாகிறது. சேக்கிழார் இதுபற்றி, திருஞானசம்பந்தரைத் 'தமிழ் ஞானசம்பந்தர்' எனக் குறித்தார்.

தமிழ் யாப்பியல் வளர்ச்சியில், இருபதற்கும் மேற்பட்ட புத்திலக்கிய வடிவங்களைத் தமிழ் மொழிக்கு வழங்கியது சைவமே. அந்தாதித் தொடையில் அமைந்த முதல் நூறு பாடல்களின் தொகுதி, மணிவாசகர் அருளிய திருச்சதகம். தேவார மூவருக்கு முற்பட்டவர் என்பது உறுதி செய்யப் பெற்றால், பாண்டிக் கோவைக்கும் முற்பட்ட, முதல் கோவை இலக்கியம் மணிவாசகரின் திருச்சிற்றம்பலக்கோவை. இயல் தமிழ் வளர்ச்சியில் திருவாசகம் பெரும்பங்காற்றியுள்ளது. பத்துப் பத்துப் பாடல்கள் கொண்ட பதிக அமைப்பை உருவாக்கியவர் காரைக்கால் அம்மையார். அவர் பதிகங்கள், மூத்த திருப்பதிகங்கள் எனப்பட்டன. முதல் அந்தாதியும், இரட்டை மணிமாலையும் அவர் தந்த கொடைகளே.

நாவுக்கரசர் திருத்தாண்டகம் என்ற பாவகை கண்டார். சேக்கிழார் அவரைத் 'தாண்டகச் சதுரர்' எனக் குறித்தார். திரு எழு கூற்றிருக்கை முதலாய பத்துக்கும் மேற்பட்ட புத்திலக்கிய வடிவங்கள், திருஞானசம்பந்தரால் வழங்கப் பெற்றவை. சேரமான் பெருமாள் நாயனார், முதல் உலா படைத்தார். அது ஆதியுலா எனப்படுகிறது. திருக்கயிலாய ஞான உலா என்பது

மற்றொரு பெயர். மும்மணிக் கோவை, நான்மணிமாலைகளும் சைவ சமய யாப்பியல் கொடைகளே. தேவார மூவர்களுக்கு, இது குறித்துச் சேக்கிழார், தமிழோடு இணைத்துப் பல பட்டங்களைச் சூட்டி மகிழ்வதைப் பெரியபுராணத்தில் காண முடியும்.

சிலப்பதிகாரக் காலம் வரை நிலவியிருந்த, நூற்றுக்கும் மேற்பட்ட, இசைவடிவங்களாகிய பண்கள், இருண்ட காலத்தில் மறைந்தன; அல்லது மறைக்கப்பட்டன. ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின், தமிழ் இசைக்கு உயிர் தந்தார் திருஞானசம்பந்தர். இவரால் 22 தமிழ்ப் பண்கள் புத்துயிர் பெற்றன. திருநாவுக்கரசர் நான்காம் திருமுறையில், பத்து பண்களை எடுத்தாண்டார். இயல் தமிழ் வடிவங்களாகக் கொள்ளத்தக்க, நாவரசர் அருளிய திருக் குறுந்தொகை, ஐந்தாம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்று, இந்தளம் என்ற பண்ணில் பாடப்பெற்று வருகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் 17 பண்களைக் கையாண்டு தமிழ் இசைக்கு உயிர் ஊட்டினார்.

யாழ்மூரி எனப்படும் புத்திசை வடிவம் ஒன்றும், திருஞானசம்பந்தரால் இசைக் கொடையாகத் தமிழ் மொழிக்குக் கிடைத்தது. ஓதுவாமூர்த்திகள் இதனை மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் பாடி வருகின்றனர். சோழர்கள் எழுச்சி பெற்ற காலை அவர்கள் தந்த ஊக்கத்தால் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றிருக்கும் திருவிசைப்பா தோற்றம் கொண்டது. பழந்தமிழ்ப் பண்கள் ஆறு, திருவிசைப்பாவில் ஆட்சி பெற்றன. தேவாரப் பண்களுள் இடம் பெறாத சாளர பாணி என்ற பண், திருவிசைப்பாவில் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் காலங்களுக்கு முன்னரே, தமிழ் இசை மூவர் என்று குறிக்கப்படும், சீகாழி அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை, முத்துத் தாண்டவர் என்போர் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பில், சைவ சமயத்தின் கடவுளர் மீது இசைப்பாடல்களை வழங்கிச் சென்றனர். இம்மூவரைச் சங்கீத

உலகம், இன்னும் சரியாக இனங்கண்டு கொள்ளாதது தமிழ் இசை உலகின் தவக்குறைவேயாகும்.

திருப்புகழ், சந்த இசை வளர்த்த உன்னதமானது. வேறுவேறு வடிவில் சைவம் பல்வேறு இசை இலக்கியங்களைத் தமிழுக்கு அளித்தது. இசையொடு இணைந்த நாடகக் கலை வடிவங்களும் சைவம் தமிழுக்குத் தந்த கொடைகளே. குற்றாலக் குறவஞ்சி உள்ளிட்ட ஏராளமான குறவஞ்சி நாடகங்கள், பள்ளு இலக்கியங்கள், நொண்டி நாடகங்கள், அம்மானைப் பாடல்கள், ஊஞ்சல் பாடல்களாகிய ஊசல் இலக்கியங்கள், கணக்கிலடங்காத இசை இலக்கியங்கள், தனிப்பாடல்கள் யாவும் சைவத்தின் இசைக் கொடைகள். முருகன் பெயரால், அண்ணாமலை ரெட்டியார் வழங்கிய காவடிச் சிந்து அற்புத இசைக்கொடை. சைவத்தின் இசை, நாடகக் கொடைகள் தனியாக ஆராயத்தக்க பரப்புமிக்கன.

தமிழர் வரலாறு உரைக்கும் கருவூலம், சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம். கோச்செங்கட்சோழன் காலம் தொடங்கி, கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை, தமிழ்நாட்டின் வரலாற்றுக் கூறுகளைப் பதிவு செய்த நூல் வேறு ஒன்றும் இல்லை. ஆட்சியாளர்கள், நதிகள், நகரங்கள், மலைகள், பூகோள அமைப்புக்கள், ஆலயங்கள், பழக்க வழக்கங்கள், வாழ்வியல், கலை, பல்வேறு வகையான குல மரபுகள், தனித்த பண்பாட்டுக் கூறுகள் யாவற்றையும் பெரியபுராணம் நிறைவாக எடுத்துக்காட்டி, வரலாற்றுப் பெட்டமாகத் திகழ்கிறது. ஏனைய திருமுறைகளும், சைவ இலக்கியங்களும் முத்தமிழ் வளர்ச்சிக்கு அரிய கொடைகள் பலவற்றை வழங்கியுள்ளதை, முறையான ஆய்வுகள் மேற்கொண்டால் அறிய முடியும்.

எனவே, சைவ சமயக் கல்வி என்பது, தமிழ் மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது என்பது, மேலைப் பதிவுகளால் உறுதி செய்யப்பட்டது. ஆனால், சமய மறுப்பு

இயக்கங்களாலும், ஆங்கில மோகத்தாலும், தடம் மாறிய தமிழர்கள், கடந்த ஐம்பது ஆண்டுகளில், சைவத்தையும் தமிழையும் விட்டு நெடுந்தூரம் விலகிவிட்டனர். சமயத்தை விடுத்து, சங்க நூல்களையும், அற நூல்களையும் முன்வைத்துத் தமிழ் மொழிக்கு வடிவம் கொடுக்க முயன்றனர். அறங்கள் யாவும் இறைமையோடு இணைந்து நடையிடுவன என்பதை அவர்கள் மறுத்தனர்;அல்லது மறைத்தனர். சைவ மரபில் வந்த இளைஞர் சமுதாயம், தாய்ச் சமயமாகிய சைவத்தைப் பற்றிய அடிப்படைகள் ஏதும் தெரியாது, தமிழ் ஆர்வம் ஊட்டப்பட்டு ஏமாற்றப்பட்டனர். அவர்களுக்கு, முறையாகச் சைவக் கல்வி கற்பிக்கப்படும்போது, சைவம் இன்றித் தமிழ் மொழிக்கு பெரிய சிறப்பில்லை என்பது புலப்படவே செய்யும். அண்டை நாடாகிய இலங்கை வாழ் தமிழர்களும், புலம் பெயர்ந்து வாழும் கோடிக்கணக்கான தமிழர்களும், சைவத்தின் பெருமிதம் உணர்ந்துள்ளனர். சைவம் தழைத்துத் தமிழைத் தழைக்கச் செய்த தமிழ் மண்ணில், சைவம், தமிழர்களோடு அன்னியப்பட்டுத் தனித்து நிற்பது பெரிதும் வருத்தம் தருவது.

மொழி ஆர்வம் கொண்டு, சமயம் பற்றி ஒன்றும் தெரியாதிருக்கும் சைவத்தமிழ் மக்களுக்குச் சைவத்தின் உன்னதமான, பரந்துபட்ட இலக்கியப் பரப்பை எடுத்துரைக்கவும், தமிழ் மொழி வளர்ச்சியில் சைவம் ஆற்றி வந்திருக்கும், அளப்பரிய தொண்டுகளை உணர வைக்கவும், எளிய இனிய தமிழில் **சைவமும் தமிழும்** என்ற தலைப்பில் அறிமுக நூல் ஒன்றை எழுதி வெளியிடும் இன்றியமையாமை ஏற்பட்டது. இதன் வெளிப்பாடாகவே **சைவமும் தமிழும்** என்ற இந்த இனிய நூல் உங்கள் கைகளில் தவழ்கிறது. நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ள இந்நூலில், கடைச்சங்க காலம் முதல், கி.பி.19 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை, சைவ சமயம் சார்ந்து படைக்கப்பட்ட உயரிய அருள் நூல்கள் பற்றிய செய்திகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

சைவமும் தமிழும்

சைவமும் தமிழும் , சைவம் குறித்த எல்லாக் கூறுகளையும் எடுத்துரைப்பது அன்று. சைவத்தின் இரண்டாயிரம் ஆண்டுக்கால இலக்கியப் பரப்பை இனம் காட்டுவதே இந்நூலின் தலையாய நோக்கம். சைவ தத்துவ ஆய்வுகள் குறித்த, சித்தாந்தம் குறித்து ஏதும் இந்நூலில் குறிக்கப்படவில்லை. திருமுறைகள் முதலிய உயரிய சைவ இலக்கியங்கள் மட்டுமே அளவுபட விரித்துரை செய்யப் பெற்றுள்ளன. இந்நூலைப் படிப்பதன் வழி, சைவத்தின் பெரிய பரப்பை உணர முடியும். தமிழ் என்பது சைவத்தோடு பிரித்துப் பார்க்க இயலாதது என்ற தெளிவு பிறக்கும். சைவர்கள், தம் தாய்ச் சமயத்தின் உயர்ச்சியை உணர்ந்து பெருமிதம் கொள்ள முடியும். குறைந்த தமிழ்க் கல்வி உடையவர்களும் புரிந்துகொள்ளும் வகையில், எளிய நடையில் சைவமும் தமிழும் எழுதப்பட்டுள்ளது.

தெய்வச் சேக்கிழார் பெயரால், மனித குலத்திற்கு நல்லறப் பண்புகளை எடுத்துரைக்க வேண்டும் என்ற விருப்பத்தால், 2004 இல் எம்மால் நிறுவப்பெற்ற 'தெய்வச் சேக்கிழார் மனித வள மேம்பாட்டு அறக்கட்டளையின்' ஆதரவில், முதன் முதலாக இந்நூல் வெளியிடப்படுகிறது. முன்னரே அறக்கட்டளை, நாயன்மார் அருள் வரலாறுகளை, ஒலிக்களஞ்சியங்களாக வெளியிட்டுச் சாதி பேதமற்ற ஒரு சமூகம் உருவாக முயன்றுள்ளது. தமிழ் ஆகமமாகிய, திருமூல நாயனாரின் திருமந்திரத்தையும் பேருரையாக ஒலி வடிவத்தில் வெளியிட்டு, தமிழ் மக்களின் அறிவியல் கண்ணோட்டத்தை உலகறியச் செய்துள்ளது.

அமைதியிழந்து, செய்வதறியாது, குறிக்கோள் ஏதுமின்றி பொருள்நாட்டம் ஒன்று மட்டுமே கொண்டு அலைந்து திரியும் உலகச் சமுதாயத்திற்கும், குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயத்திற்கும், நல்வழிகாட்டி நெறிப்படுத்தவல்ல சைவத்தமிழ் இலக்கியங்களுள், கி.பி.12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த தெய்வச் சேக்கிழார் அருளிய பெரியபுராணம் முதன்மையானது.

உலக சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் சாதி, சமய வேறுபாடுகள், ஒருவருக்கு ஒருவர் உதவ மறுக்கும் சுயநலப் போக்குகள், தன்னம்பிக்கை இழந்து, குறிக்கோள் ஏதுமின்றி வாழும் மானுடக் கீழ்மைகள் முதலியவற்றைக் களைந்து, உலக ஒருமைப்பாட்டையும், சகோதரத்துவத்தையும், அமைதியையும் போதிக்க வல்லது பெரியபுராணமே ஆகும்.

இத்தகு மாபெரும் அருள்நூலை இயற்றிய தெய்வச் சேக்கிழாருக்கு ஆண்டுதோறும் விழா எடுக்கவும், சேக்கிழார் செந்நெறியை உலகெங்கும் பரப்பவும், கடந்த பதினான்கு ஆண்டுகளுக்கு முன், மேனாள் உச்சநீதிமன்ற நீதியரசர் திரு.எஸ்.நடராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்டு நிறுவப் பெற்றது சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம்.

பெரியபுராணத்திற்கு, மிகச் சிறந்த புதிய பதிப்பு ஒன்றை வெளியிட்டும், ஆண்டுதோறும் சேக்கிழாருக்கு, மூன்று நாள்கள் பெருவிழா எடுத்தும், பல்துறை அறிஞர்களுக்கு விருதுகளும், பணமுடிப்புகளும் வழங்கியும், இளைய சமுதாயம் சேக்கிழார் செந்நெறி அறிந்து சிறக்கப் போட்டிகள் பல நிகழ்த்திப் பரிசுகள் வழங்கியும், சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம் அரும்பணி ஆற்றி வருகிறது.

தெய்வச் சேக்கிழாரின் பெரியபுராண அறுபத்துமூன்று நாயன்மார் அருள் வரலாறுகளையும், காலத்தின் தேவை கருதி, ஒலிக்குறுந்தகடுகளாகவும், ஒலிப்பேழைகளாகவும் ஆங்கில வரலாற்றுச் சுருக்கத்துடன் வெளிக்கொணரும் வாய்ப்பு எளியேனுக்குச் சிவனருளால் வாய்த்தது. இந்த முயற்சியைப் போற்றிச் சென்னை சேக்கிழார் மையம், 2005 ஜூலை நடைபெற்ற பதிமூன்றாம் ஆண்டு சேக்கிழார் விழாவில் எனக்குச் சிறந்த தமிழ்ப் பேராசிரியருக்கான சேக்கிழார் விருதும், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்-இராசம்மாள் அறக்கட்டளை வழங்கிய

ரூபாய் ஐயாயிரம் பண முடிப்பும் வழங்கிக் கௌரவித்தது. சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து, சேக்கிழார் விழாக்களில் தொடர்ந்து பங்கேற்றுவரும் எனக்கு, இம் மையம், நூல் வெளியீட்டு முயற்சியிலும் உதவ முன்வந்துள்ளது பெரிதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையத்தின் தலைவர், நீதியரசர் திரு. எஸ். நடராஜன் அவர்கள், என் வேண்டுகோளை ஏற்று, சைவமும் தமிழும் நூலுக்கு அணிந்துரை ஒன்றை வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்கள். மேலாக, இந்நூல் வெளியீட்டுச் செலவினங்களில் ஒரு பகுதியை, ஆராய்ச்சி மையத்தின் அருட்கொடையாக வழங்கி ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள். நீதியரசர் அவர்களுக்கும், என்பால் மிக்க அன்பு பூண்டு ஒழுகும், மன்றத்தின் துணைத்தலைவரும், பணிநிறைவு பெற்ற, தமிழக அரசு நிதிச் செயலாளருமாகிய, சித்தாந்த இரத்தினம், முனைவர். திரு. ஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப., அவர்களுக்கும், மன்றத்தின் செயலாளர் திரு. டி.எஸ். தியாகராஜன் அவர்களுக்கும், ஆராய்ச்சி மையத்தின் ஏனைய பொறுப்பாளர்களுக்கும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.

இந்நூலைத் தட்டச்சுச் செய்து உதவிய மயிலாடுதுறை பரணி ஆப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. எஸ். கந்தசாமி அவர்களுக்கும், முகப்போவியம் வடிவமைத்து அச்சிட்டு வழங்கிய சென்னை - 14, எஸ்.பி.எஸ். அச்சக உரிமையாளர் களுக்கும் என் நன்றி உரியது.

சைவமும் தமிழும் என்ற இந்த அறிமுக நூல், உலகெங்கும் வாழும் தமிழர்கள் இல்லங்களில் படித்தறியப்பட வேண்டும் என்பது அறக்கட்டளையின் விருப்பம். சைவத்தமிழ் மக்கள், இந்நூலை ஏற்றுப் போற்றுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு நிறைவாக உள்ளது. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் இதனைப் பாடநூலாகக் கொள்வது பெரும் பயன் விளைக்கும். சிவநெறியும், செந்தமிழும் ஓங்கவும், மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கவும், மனித குலம் பசியும் பிணியும் நீங்கி ஒற்றுமை உணர்வோடு உலக சமூகத்தில் உயர்ந்து சிறக்கவும் நெஞ்சார விரும்பி வாழ்த்துகிறோம்.

பொருளடக்கம்

இயல்-1: சைவமும் தமிழும் ப.எ. 27

சைவ சமயம், பழந்தமிழ் நூல்களில் சைவம், சைவ சமய விளக்கம் , சைவ மரபுகள், சிவன் அடையாளங்கள், சைவம், வாழ்வியல், சைவத்தின் உட்பிரிவுகள், சைவக் கடவுளர்கள், தொல்காப்பியத்தில் சைவம், சங்க நூல்களில் சிவன், சங்க நூல்களில் உமை, சங்க நூல்களில் முருகன் , காப்பியங்களில் சிவன், பிற காப்பியங்களில் சிவன், கல்லாடம், அரிய கொடைகள்.

இயல்-2: திருமுறைத் தமிழ் ப.எ. 49

திருமுறைத் தமிழ், சைவத் திருமுறைகள், திருமுறை விளக்கம், திருமுறை கண்டமை, திருமுறைகளின் பெருமை, திருமுறை ஓதப்படும் முறை , பன்னிரு திருமுறைகள், தல முறை , தேவாரப் பண்கள், திருஞானசம்பந்தர், முதல் திருமுறை, இரண்டாம் திருமுறை, மூன்றாம் திருமுறை , புதிய யாப்பு வகை, திருநாவுக்கரசர், நான்காம் திருமுறை , ஐந்தாம் திருமுறை, ஆறாம் திருமுறை, பொதுத் திருத்தாண்டகங்கள், அரிய திருத்தாண்டகங்கள், போற்றித் திருத்தாண்டகங்கள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருத்தொண்டத் தொகை, ஏழாம் திருமுறை, அரிய தொடர்கள், மாணிக்கவாசகர், திருவாசகம், அநுபவ வெளிப்பாடுகள், அருட்பனுவல்கள், திருச்சிற்றம்பலக் கோவையார்.

திருமுறைகள் ஒன்பது முதல் பன்னிரண்டு வரை, ஒன்பதாம் திருமுறை, திருவிசைப்பா, திருவிசைப்பாவில் முருகன், திருப்பல்லாண்டு, திருமந்திரம், விநாயகர் காப்பு, வேத ஆகமச் சிறப்பு, திருமூலர் வரலாறு, தந்திரங்கள், உள்ளீட்டுச் செய்திகள், திருமந்திரம் அரிய தொடர்கள் - திருமந்திரத்தில் அன்பு - மரமும்

யானையும், மனிதநேயப் பதிவு, வாழ்வியல் உண்மைகள், பதினொராம் திருமுறை, திருமுகப் பாசுரம், காரைக்கால் அம்மையார், மூத்த திருப்பதிகங்கள், மணிமாலை, அந்தாதி, சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவநாயனார், கபிலதேவர், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பிகள், நம்பி நூல்கள்.

பன்னிரண்டாம் திருமுறை, நூலாசிரியர், சேக்கிழார், தொண்டர்சீர் பரவுவார் , சேக்கிழார் புராணம், பெரியபுராணம் , காப்பியத் தொகுப்பு, யாப்பமைதி, திருமலைச் சருக்கம், திருமலைச் சிறப்பு, திருநகரச் சிறப்பு , திருக்கூட்டச் சிறப்பு , தடுத்தாட்கொண்ட புராணம் , பரவையார் திருமணம், முதல் நூல், திருத்தொண்டத் தொகை அமைப்பு, தொகை அடியார்கள், தனியடியார்கள், நாயன்மார் குலமரபு , தனி அடியவர்கள் அட்டவணை , காப்பிய உள்ளீடு, நூல் செய்தோர், சிவபெருமான் அருள்திறம் , வரலாற்றுக் காப்பியம், காப்பிய எழில் , உவமை அழகு, கற்பனைப் புனைவு, பெரிய புராணம், சமூக நோக்கு , ஆட்சியாளர் திறம் , பல்வகைச் சிறப்புக்கள்.

இயல்-3 : சைவத் தமிழ் இலக்கியங்கள் ப.எ. 123

சைவத் தமிழ் இலக்கியங்கள், சைவச் சிற்றிலக்கியங்கள், ஔவையார் , ஔவை ஞானக் குறள்,ஒட்டக்கூத்தர் , பல்வகை நூல்கள் , நூலாசிரியர்கள் , அதிவீரராமபாண்டியர் , அருணகிரிநாதர், திருப்புகழ், தனி நூல்கள் , கந்தர் அநுபூதி, பிற நூல்கள், சிறு அறிமுகம், காளமேகப் புலவர் முதலியோர், இரட்டையர்கள், குமரகுருபர சுவாமிகள் , குமரகுரபரர் நூல்கள் , மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதிநெறி விளக்கம், முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத் தமிழ், குமரகுருபரர் பிறநூல்கள், சிவப்பிரகாச சுவாமிகள், நால்வர் நாண்மணி மாலை, சிவப்பிரகாசர் பிற நூல்கள், படிக்காசுப் புலவர், தாயுமான சுவாமிகள், குறவஞ்சி, பள்ளு, ஆதின அருளாளர்கள்,

இராமலிங்க சுவாமிகள், வள்ளலார் பாடல்கள்- மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தமிழுக்கும் அணி.

இயல்-4 : புராணத் தமிழ் இலக்கியங்கள் ப.எ.149

புராணத் தமிழ் இலக்கியங்கள், தல புராணங்கள், தலங்களின் சிறப்புகள், முப்பெரும் புராணங்கள், திருவிளையாடற்புராணம் வாழ்த்து, நூற்பயன் கூறல், மாணிக்கவாசகர் அருள் வரலாறு , தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம், ஆசிரியரின் தமிழ்க் காதல், ஓர் அற்புதக் கற்பனை, கந்தபுராணம்,சமூக நல நாட்டம், சிறந்த வாழ்த்து, சிவ, முருக வழிபாடுகளின் ஒருங்கிணைப்பு, கச்சியப்பர் கூற்று, சிவபெருமான் விடை, வீரவாகு தேவர் விளக்கம், பெருங்காப்பியம், தமிழுக்குக் கொடை, கோயிற்புராணம், பாயிரப் பகுதி, தில்லைத் தல வரலாறு , நடராசர் அபிடேக நாள்கள் , காஞ்சிப் புராணம் , நூல் அமைப்பும் அழகும், ஆசிரியர் பன்முகப் பார்வை, நால்வர் துதி, ஒழுக்க விதிகள் கூறல், சிவபுண்ணியச் செயல்கள், தணிகைப் புராணம், புராணக் கட்டமைப்பு, நாட்டு நகரப் படலங்கள் , வாழ்த்துரைத்தல், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பெருமித வாழ்வு ,மாயூரப் புராணம் , மாயூரத் தலச் சிறப்புக்கள், அவையடக்கம், ஆசிரியர் புலமை நலம் , தொன்னூல் பயிற்சி , வேறு சில தல புராணங்கள், சைவமும் தமிழும்.

1. சைவமும் தமிழும்

சைவ சமயம்

தமிழ் , இலக்கிய வளம் நிறைந்த மொழி. இலக்கியம் தோன்றுவதற்குப் பல அடிப்படைகள் உள்ளன. அவற்றுள் சமயமும் ஒன்று. தமிழில் சமயம் சார்ந்தே இலக்கியங்கள் பலவும் எழுந்துள்ளன. தமிழ்நாட்டில் பல சமயங்கள் நிலவி வருகின்றன. என்றாலும், பெரும்பாலான இலக்கியங்கள் சைவ சமயத்தைச் சார்ந்தே படைக்கப்பட்டுள்ளன.

ஒரு மொழிக்கு இலக்கியம் இலக்கணம் என இரு கூறுகள் உண்டு. அதுபோல் சமயம் சார்ந்த நூல்களிலும் தோத்திரம், சாத்திரம் என இரு பகுப்புகள் உள்ளன.

சைவ சமயக் கடவுளர்கள் மேல் பாடப்பெற்ற வழிபாட்டுப் பாடல்களைத் தோத்திரம் என்று கூறுவது வழக்கம். வழிபாட்டுப் பாடல்களின் தொகுப்புக்களையே சைவத் தமிழ் இலக்கியங்கள் என்று வகுத்துள்ளனர். பிற்காலத்தில் சைவ சமயம் சார்ந்து வாழ்ந்த அடியார்கள் மீதும் பாடல்கள் பாடப்பட்டன.

சைவத்தமிழ் இலக்கியங்களைப் பலவகையாகப் பகுத்துள்ளனர். திருமுறைகள், சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் முதலியன குறிக்கத்தக்கன.

சைவம் என்பது சிவனை வழிபடும் நெறி.முருக வழிபாடு, கொற்றவை வழிபாடு, விநாயகர் வழிபாடு முதலியன ஒரு காலத்தில் தனித்தனியே நிகழ்ந்துள்ளன.காலப்போக்கில் கடவுளர்களுக்கு .இடையே உறவுமுறை கற்பிக்கப்பட்டன. சிவன் துணைவியாக உமையும், பிள்ளைகளாக முருகன், விநாயகர் இருவரும் கொள்ளப்பட்டனர். கி.பி.ஏழாம் நூற்றாண்டு தொடங்கி சிவன், உமை, முருகன், விநாயகர் வழிபாடுகள் ஒன்றாய்க் கலந்தன.

சைவத்தமிழ் இலக்கியங்கள்,. தமிழ் மொழியில் புதிய இலக்கிய வகைகள் தோன்றுவதற்கு உதவின. தமிழ் யாப்பியல் வளர்ச்சியில் இவை பெரும்பங்காற்றியுள்ளன. தமிழ் இசை வளர்ச்சிக்கும் இவ்விலக்கியங்கள் துணைநின்றன. தமிழ்நாட்டின் இரண்டாயிரம் ஆண்டுக்கால சமய வரலாற்றையும், சமூக வரலாற்றையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பை இவை வழங்கின.

சைவத்தமிழ் இலக்கியங்கள் நிறைவாக உள்ளன. அவை எல்லாவற்றையும் பற்றி இங்கே விளக்கம் தரப்படவில்லை.

பழந்தமிழ் நூல்களில் சைவம்

பழந்தமிழ் நூல்களில் சைவ சமயக் குறிப்புகள் மிகச் சிலவே கிடைத்துள்ளன. இக்காலப்பகுதியில் அகம், புறம் பற்றியே பாடல்கள் எழுந்தன. திருமுருகாற்றுப்படையைத் தவிர குறிப்பிடத்தக்க சமய நூல் இக்காலப் பகுதியில் தோன்றவில்லை. தொல்காப்பியத்தில், ஒரு சில கடவுளரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பிற்காலச் சைவ சமய இலக்கியங்களில், சைவ சமயக் கடவுளர் குறித்து வரும் செய்திகளோடு பொருந்தி வரும் சில அரிய தொடர்கள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் கொற்றவை, முருகன் குறித்த இசைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.பிற்காலத்தில் சைவ சமய இலக்கியங்கள் பல தோன்றுவதற்குப் பழந்தமிழ் நூல்கள் துணை செய்தன.

சைவ சமயம் - விளக்கம்

இந்திய நாட்டுச் சமயங்கள் பலவற்றுக்கும் மூல நூல்கள் வேதங்கள் ஆகும். வேதங்களை ஏற்றுக்கொண்ட சமயங்கள், வைதிக சமயங்கள் எனப்பட்டன. அவற்றுள் தலையாய சிறப்புடையன சைவமும், வைணவமும் ஆகும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு தோன்றிய சமயம் சைவம். இது காலப் பழமைமிக்கது. வேதங்களோடு, சிவ ஆகமங்களும் சைவத்தின் முதல் நூல்களாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. வேத ஆகமங்களை இறைவன் நூல் என்று முன்னோர் குறித்துள்ளனர்.

சைவ மரபுகள்

சைவ சமயத்தில், மூன்று பொருள்கள் முதன்மையாகக் கொள்ளப்படுகின்றன. அவை முறையே இறை, உயிர், தளை என்பன. சாத்திர நூலாசிரியர்கள் இவற்றை வடமொழியில் பதி, பசு, பாசம் எனக் குறித்துள்ளனர். சிவ வழிபாடு மூன்று நிலைகளைக் கொண்டது. அவை உருவமற்றநிலை. உருவ நிலை, இரண்டும் கலந்த நிலை என்பன. இவற்றை முறையே அருவம், உருவம், அருவுருவம் என்பர் சாத்திர நூலாசிரியர். சிவலிங்க வழிபாடு அருவுருவ நிலையே என்று கூறப்படுகிறது. சைவத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்பு நிலைகள் பேசப்பட்டுள்ளன. இறைவன் சிறப்புற்றிருக்கும் நிலை மூர்த்தி வழிபாடு எனப்படும். நீர் நிலை சிறப்புற்றிருக்கும் இடங்களில் நீராடி வழிபடுவது தீர்த்த வழிபாடு என்று பேசப்படும். இறைவன் எழுந்தருளி இருக்கும் ஊர் சிறந்திருக்கும் நிலையில் அங்கே சென்று வழிபடுவது தல வழிபாடு என்று கூறப்படும்.

சிவன் அடையாளங்கள்

சிவபெருமான் கொண்ட திருமேனி வடிவங்களைச் சிவமூர்த்தங்கள் என இருபத்து ஐந்தாகக் குறிப்பர். சிவன்

நிகழ்த்திய வீரச் செயல்கள் எட்டு என்பர். இத்தகு வீரம் நிகழ்த்திய தலங்கள் அட்டவீரட்டத் தலங்கள் எனப்படும். சிவபெருமானின் வடிவத் திருமேனி பற்றி ஆகமங்களும் வேதமந்திரங்களும் பல குறிப்புகளைத் தருகின்றன. அவன் சடாமுடி உடையவன். அதன் மீது பாம்பு, பிறைச்சந்திரன், கங்கை நதி மூன்றும் நிலைபெற்றுள்ளன. அவன் மூன்று கண்களை உடையவன். அவன் கழுத்து நீலநிறம் உடையது. அவன் எட்டுத் தோள்களை உடையவன். இடப்பாகத்தில் உமையைக் கொண்டுள்ளான். பாம்புகளைஅணிகலன்களாகக் கொண்டவன். புலித்தோல் ஆடை உடையவன். கையில் சூலாயுதம் தாங்கியவன். கொன்றை மலர் அவனுக்கு விருப்பமானது. சுடுகாட்டுச் சாம்பலை அவன் உடலெங்கும் பூசி மகிழ்பவன். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் அவனே முதல்வன். பூதகணங்களைப் படையாகக் கொண்டவன். மேற்குறித்த செய்திகள் யாவும் சைவத் தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே சுட்டப்பெற்றுள்ளன.

சைவம் - வாழ்வியல்

சைவ சமயத்தைப் பின்பற்றி வாழ்பவர்களுக்குச் சில கடமைகளைச் சைவ நூல்கள் வரையறுத்துள்ளன. இறைவனுக்கு மலர் தூவி வழிபடுதல், இது சமயம் சார்ந்த சடங்கைக் குறித்து நிற்கிறது. இரண்டாவது, சிற்றுயிர்களிடம் கருணை கொண்டு வாழ்வது. இதனை உயிர் இரக்கம் என்பர். பிற்காலத்தார் வடமொழியில் இதனையே ஜீவகாருண்யம் என்றனர். மூன்றாவது, அடுத்த மனிதன் பசித்திருக்கும்போது அவனை உண்பித்து அறந்தலை நிற்பது. நான்காவதாகப் பேதம் இல்லாது எல்லாரிடமும் இன்சொல்பேசி, பண்பாடு காத்து வாழ்வது. இவற்றை முறையே, வழிபாடு, உயிர் இரக்கம், மனித நேயம், பண்பாடு என்று கொள்ளுதல் பொருத்தமாகும். இவற்றை உள்ளடக்கி நிற்கும் அரிய பாடல் ஒன்று திருமூலரின் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

யாவர்க்கும் ஆம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தாமே

இவ்வழகிய பாடல், சமயம் என்பது சடங்குகளைக் கடந்த, வேறு உயரிய வாழ்க்கை முறைகளையும் கற்பிக்கும் பெருநெறி என்பதை அறிவித்து நிற்கிறது.

சைவத்தின் உட்பிரிவுகள்

சிவனை வழிபடும் நெறி சைவம் என்பது முன்னரே கூறப்பட்டது. சங்ககாலத்தில் தமிழ் மக்கள் சிவன், உமை, கொற்றவை, முருகன், திருமால், இந்திரன்,வருணன் முதலிய கடவுளர்களை வழிபட்டு வந்துள்ளனர். விநாயகர் வழிபாடு அக்காலத்தில் இருந்திருக்கவில்லை. சூரியனை வழிபடும் வழக்கமும் நிலவியிருந்தது. ஆதிசங்கரர் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் மேற்குறித்த வழிபாட்டு நெறிகளை எல்லாம் தொகுத்து அறுவகைச் சமயங்களை முன்நிறுத்தினார். அவை சிவனை வழிபடும் சைவம், திருமாலை வழிபடும் வைணவம், சக்தியை வழிபடும் சாக்தம், சூரியனை வழிபடும் சௌரம், முருகனை வழிபடும் கௌமாரம், கணபதியை வழிபடும் காணாபத்தியம் என்பன. இவற்றுள் சூரிய வழிபாடு தமிழகத்தில் தனிநெறியாக வளரவில்லை. எனவே, இந்நெறி குறித்த இலக்கியங்களும் தமிழில் உருவாகவில்லை. வைணவம் தனி நெறியாக இலக்கிய வளத்துடன் சிறந்துள்ளது.

சைவக் கடவுளர்கள்

சௌரம், வைணவம் என்ற இரண்டையும் தவிர்த்து ஏனைய நான்கு நெறிகளும், பிற்காலத்தில் ஒன்றாக இணைந்து சைவநெறியாகவே போற்றப்பட்டன. உமை சிவனின் துணைவியாகவும், முருகன் மகனாகவும், விநாயகர் மூத்த

பிள்ளையாகவும் உறவு முறை கற்பிக்கப்பட்டனர். சிவனின் அருளைச் சக்தியாகவும், ஆற்றலை முருகனாகவும், விரைந்து அருளும் திறத்தை விநாயகனாகவும் முன்னோர் உருவகித்து உரைத்தனர். இந்நான்கு கடவுளர்கள் மீதும் தனித்தனி இலக்கியங்களும் தனிப்பாடல்களும் தோன்றின. ஒருவரோடு ஒருவருக்கு உறவுமுறை கற்பித்தும் இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. ஆயினும், சைவமும் தமிழும் என்ற தலைப்பில் இந்நான்கு தெய்வங்கள் குறித்து எழுந்த இலக்கியங்கள் பலவும் ஒன்றாகவே கருதப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தில் சைவம்

இடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூல் கி.மு. 700 க்கு முற்பட்டது என்பர் ஆய்வாளர். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. மூன்றாவதாகிய பொருளதிகாரத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களுக்கும் உரிய கடவுளரைக் குறித்த நூற்பா ஒன்று உள்ளது.அது வருமாறு.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே

இதில் மலையும், மலை சார்ந்த பகுதிகளுமாகிய குறிஞ்சி நிலத் தெய்வமாகச் சேயோன் என்ற சொல்லால் முருகன் குறிக்கப்பட்டுள்ளான். சிவன் பற்றிய நேரடியான பதிவு இதில் இல்லை. நிலத் தெய்வங்களுக்கு மேலான தெய்வம் சிவன் என்பதால், சிவன் பெயர் இங்கே இடம்பெறவில்லை என்று சைவ

நூல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தொல்காப்பியத்தில் வேதக் குறிப்புகள்

சைவம்- சிவன் பற்றிய நேரடியான குறிப்புகள் தொல்காப்பியத்தில் இல்லை. என்றாலும், சைவ சமயத்தின் முதல் நூல்களாகிய வேதங்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலுள் உள்ளன. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் எழுத்துக்கள் பிறத்தல் தொடர்பான புற நடைகளில், எல்லா எழுத்தும் என்று தொடங்கும் நூற்பாவில்,

அளவில் கோடல் அந்தணர் மறைத்தே

என்ற தொடர் வருகிறது. இதில் வரும் அந்தணர் மறை என்பது வேதத்தைக் குறிப்பதேயாகும். மேலும் பொருளதிகாரத்தில் காமப்புணர்ச்சி இலக்கணக் குறியீடு உணர்த்தும், இன்பமும் பொருளும் என்று தொடங்கும் நூற்பாவில்,

மறையோர் தேஎத்து மன்றல் எட்டு

என்ற தொடர் இடம் பெற்றுள்ளது. இங்கேயும் மறை என்ற சொல்லால் வேதமே குறிக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்தில் சிவன்-சக்தி

தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணை இயலுள் பாடாண் திணைக்கு உரிய மரபு கூறும் ஒரு நூற்பா அமைந்துள்ளது. அது,

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே

என அமைந்துள்ளது. இதில் இடம் பெற்றுள்ள கந்தழி என்றசொல் சிவனைக் குறித்து வந்துள்ளது என்பர் சில ஆய்வாளர்கள்.

மேலும், புறத்திணை இயலுள் வெட்சித்துறை உணர்த்தும் ஒரு நூற்பாவில், கொற்றவை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே

கொற்றவை நிலை, என்ற தொடரில் சிவசக்தி பேதங்களில் ஒன்றாகிய கொற்றவை குறிக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

சங்கநூல்களில் சிவன்

கடைச் சங்க நூல்கள் என்பன பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய பதினெட்டு நூல்களையே குறித்து நிற்கும்.முன் குறித்தவாறு சிவன் என்ற சொல்லாட்சி இந்நூல்களில் இல்லை. ஆயினும், பிற்காலச் சைவ இலக்கியங்களுள், சிவனுக்கு உரியனவாகக் குறிக்கப்படும் பலவகை இலக்கணங்களோடு ஒத்த தொடர்கள், இந்நூல்களுள் இடம் பெற்றுள்ளன. சில கடவுள் வாழ்த்துப் பாடல்களும் உள்ளன.இவை சங்க காலத்தில் நிலவியிருந்த சிவவழிபாட்டிற்குச் சான்றாக அமைகின்றன. அவற்றுள் ஒரு சில பாடல்களையும் தொடர்களையும் காணலாம்.அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து எட்டுத்தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைக் குறித்து அமைந்துள்ளன. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவரால் பாடப் பெற்றுள்ளது.

நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே

உமையோடு சிவன்ஆடிய கொடு கொட்டி, பாண்டரங்கம்,கபாலம் எனப்படும் மூவகைக் கூத்துக்களைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்து விரித்துரைக்கிறது. சிவன் அடையாளங்கள்

பலவற்றையும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து விளக்கி நிறைகிறது. அகநானூற்று வாழ்த்து,

மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொல்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்

என, எவராலும் முற்றாக அறியப்படாத சிவன் சிறப்பை எடுத்துரைக்கிறது.

சிவன் அடையாளங்களும் ஆற்றல்களும்

சிவனை அருந்தவத்தோன் என்றும், ஆதிரை நாளில் பிறந்தவன் என்றும் தொகை நூல்கள் குறிக்கின்றன. சிவன் தலையில் கங்கை தங்கியருத்தல், அவன் கழுத்தில் நீல நிறம் இடம் பெற்றிருத்தல் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. சிவனுக்கு உரிய ஆயுதம், ஊர்தி, கொடி முதலியன பற்றியும் செய்திகள் உள்ளன. சிவன் திருமுடியில் பிறை சூடியிருப்பதும், அவன் புலித் தோல் ஆடை அணிந்திருப்பதும், கையில் மழுப்படை ஏந்தியிருப்பதும், சிவன் முப்புரம் எரித்ததும் முதலாய பல அரிய செய்திகளைச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. பிற்காலத்தே சைவத் தமிழ் இலக்கியங்கள் பலவும் தோன்றுவதற்கு இத்தகு குறிப்புகள் உந்துதலாக இருந்திருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

சங்க நூல்களில் உமை

பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்தாகக் கருதத்தக்கது திருமுருகாற்றுப்படை. இந்நூலுள், உமையை ஆசிரியர் பல்வேறு பெயர்களில் அடையாளப்படுத்தியுள்ளார். முருகனை உமையவள் மகன் என்று குறித்துக்காட்டும் நக்கீரர்,

மால்வரை
மலைமகள் மகனே: மாற்றோர் கூற்றே;
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ:
இழையணி சிறப்பின் பழையோள் குழவி

எனவரும் தொடர்களில் உமையை மலைமகள், கொற்றவை, பழையோள் என்ற பெயர்களால் குறித்துச் சென்றுள்ளார். கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் உமை, கொடிபுரை நுசுப்பினாள்; வண்டரற்றும் கூந்தலாள்; முலையணிந்த முறுவலாள் என வருணிக்கப்பட்டுள்ளாள்.

உமை இலக்கணம்

பரிபாடலில் எழுபது பாடல்கள் தொகுக்கப்பட்டதாகவும், தற்போது இருபத்திரண்டு பாடல்கள் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் குறித்துள்ளனர். இதில் காடுகிழாள் எனக் குறிக்கப்படும் உமைக்கு ஒரு இசைப்பாடல் இருந்ததாகவும், அப்பாடல் இன்று கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிகிறது. பெண் உரு ஒரு திறம் ஆகின்று. என்ற புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தில், உமை, சிவனின் இடப்பாகத்தில் இருத்தல் குறிக்கப்பட்டுள்ளது. ஊர்ந்தது ஏறே; சேர்ந்தோள் உமையே என்று அகநானூற்றுக் கடவுள் வாழ்த்தில் ஒரு தொடர் வருகிறது. சிவனோடு இணைந்து உலகத்தைக் காப்பவள் உமையே என்பதை கலித்தொகைக் கடவுள் வாழ்த்து,

பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப
வாணமில் பொருள் எமக்கு அமர்ந்தனை ஆடி

எனக் கூறி நிறைவிக்கிறது.

சங்க நூல்களில் முருகன்

கடைச்சங்க இலக்கியங்களுள் முருகன் பற்றிய குறிப்புகளே அதிகமாகக் காணப்படுகின்றன. திருமுருகாற்றுப் படை தரும் முருகன் பற்றிய செய்திகள், சங்க காலத்தில் சிறந்திருந்த முருக வழிபாட்டிற்குச் சான்று கூறி நிற்கின்றன. திருமுருகாற்றுப்படை முருகன் எழுந்தருளியிருந்த இடங்களை அறுபடை வீடு என்று குறித்துக் காட்டுகிறது. அவை, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), ஏரகம்(சுவாமிமலை), குன்றுதோராடல்(பலமலைத் தலங்கள்), பழமுதிர்சோலை என்பன. திருமுருகாற்றுப்படை 317 வரிகளைக் கொண்டுள்ளது. இந்நூலின் நிறைவில் முருகனை வாழ்த்தும் நோக்கில் அமைந்த பத்து அழகிய வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றைத் தமிழில் எழுந்த முருகன் பற்றிய முதல் துதிப் பாடல்கள் என்று கருதலாம். முருகன் அருளும் திறத்தை,

> அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
> வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும்-நெஞ்சில்
> ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
> முருகா என்று ஓதுவார் முன்

என்ற பாடலும், முருக அடியார்களின் உறுதிமிக்க பத்திமைச் சிறப்பை,

> உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
> பின்னை ஒருவரை யான்பின் செல்லேன்-பன்னிருகைக்
> கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
> வேலப்பா செந்தி வாழ்வே

என்ற பாடலும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

பரிபாடலில் முருகன்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலில் முருகன் குறித்துப் பாடப்பெற்ற அழகிய, நீண்ட எட்டு இசைப்பாடல்களைக் கடுவன் இளவெயினனார், ஆரியன் நல்லந்துவனார், குன்றம்பூதனார், நல்லழிசியார், நப்பண்ணனார், நல்லச்சுதனார் ஆகியோர் பாடியுள்ளனர். இப்பாடல்களுக்கு அக்காலத்திலேயே தக்க இசைவாணர்களால் இசையமைக்கப்பட்டுள்ளது. பாடல்களுக்கு உரிய பண் அடைவுகளும் குறிக்கப்பட்டுள்ளன. சைவ-இலக்கிய இசைப்பாடல்களில், தேவாரப் பாடல்களுக்கு இவையே முன்னோடிகள் என்பது அறியத்தக்கது. முருகன் பிறப்பு, உருவ அமைப்பு, அவன் நிகழ்த்திய போர்கள், அவன் தேவியர், அவன் அருளும் திறம் யாவும் இப்பாடல்களுள் நிறைவாக இடம் பெற்றுள்ளன.

யாஅம் இரப்பவை
பொன்னும் பொருளும் போகமும் அல்ல! நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே

என்ற பரிபாடல் வரிகள், சங்க காலத் தமிழர் வழிபாடு, பொருள் நாட்டம் இல்லாது, பண்புகளை நாடும் சிறப்புடையதாய்த் திகழ்ந்தமையை அடையாளம் காட்டி நிற்கிறது.

குறுந்தொகை - கடவுள் வாழ்த்து

கடைச்சங்க இலக்கியங்களுள் முருகன் தொடர்பான குறிப்புகள் நிறைவாக இடம் பெற்றுள்ளன. அரிய பல தொடர்களும் காணப்படுகின்றன. குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து முருகனைச் சிறப்பித்துக் கூறுவது, பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியது. இப்பாடலில், முருகன் திருமேனி

அழகு, அவன் தன் கை வேலால் குன்றைத் துளைத்தமை, அவனது சேவல் கொடி முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

தாமரை புரையும் காமர் சேவடி
பவழத்து அன்ன மேனி, திகழ்ஒளி
குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்
நெஞ்சு பக எறிந்த அம்சுடர் நெடுவேல்
சேவல் அம் கொடியோன் காப்ப,.
ஏம வைகல் எய்தின்றால் உலகே

என்பது அவ்வழகிய பாடல்.

பதிற்றுப்பத்துள் முருகன்

முருகன் அசுரரை அழித்தமை, கிரவுஞ்ச மலையைப் பிளந்தமை, சேவல் கொடியைப் பெற்றமை, சூரனை வென்றமை, தேவர்கள் சேனைத் தலைவனாகத் திகழ்ந்தமை, தேவர் துயர் தீர்த்தமை, முருகன் பிறப்பு வரலாறு, மயில் ஊர்தியை அடைந்தமை, மாமரம் தடிந்தமை, வள்ளியை மணம் முடித்தமை முதலிய பல செய்திகளைச் சங்க நூல்கள் பதிவு செய்துள்ளன. முருகன் கடல் நடுவே சென்று சூரனை வெற்றி கொண்ட திறத்தை,

நளி இரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேர் இசை
கடுஞ்சின விறல் வேள்

என்று பதிற்றுப்பத்துள் ஒரு பாடல் எடுத்துக் காட்டுகிறது. பிற்காலத்தில் எழுந்த முருக இலக்கியங்களுக்கு இத்தகு பதிவுகள் பெரிதும் ஊற்றமாக அமைந்தன. கடைச் சங்க காலக் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு. இவை பெரும்பாலும் அறம் உரைப்பன. சமண ஆசிரியர்களால் பாடப்பெற்றன. சைவசமயம் சார்ந்த தனிப்பாடல்களோ, அரிய தொடர்களோ இவற்றுள் காணப்படவில்லை.

காப்பியங்களில் சிவன்

தமிழின் முதல் காப்பியம் சிலப்பதிகாரம். சமணசமயத் துறவி இளங்கோவடிகளால் இந்நூல் இயற்றப்பட்டது. என்றாலும், வேத வழிப்பட்ட வைதிக சமயங்களைப் பற்றிய அரிய குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்குள் சமய பேதங்கள் ஏதுமின்றி, அவரவர் போக்கில் வழிபாடுகளை நிகழ்த்தி வந்துள்ளமையை இந்நூலால் உணர முடிகிறது. சிவன், கொற்றவை, முருகன் தொடர்பான பல குறிப்புகளும், அரிய இலக்கியத் தரம் மிகுந்த பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. கோவலன், கண்ணகி அழகைப் புகழ்ந்து பேசும், மனையறம் படுத்த காதையில்,

குழவித் திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்
உரிதின் நின்னோடு உடன்பிறப்பு உண்மையின்
பெரியோன் தருக திருநுதல் ஆக

எனவரும் பகுதியில், சிவனை இளங்கோவடிகள் பெரியோன் எனச் சுட்டுகிறார். பூம்புகாரில்,

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்

இருந்ததாகவும் அவர் பதிவு செய்கிறார். சிவனைப் பிறவா யாக்கைப் பெரியோன் என்று சுட்டுவது கருதத்தக்கது.

சிலம்பில் கொற்றவை

சிலப்பதிகாரத்தின், வேட்டுவ வரி என்ற பகுதியில் கொற்றவை வழிபாடு பற்றிய பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. அம்மை, கலையமர் செல்வி என்று குறிக்கப்படுகிறாள். அம்மைக்குச் செய்யப்படும் அலங்காரங்களும், கொற்றவைக்குப்

படையல் இடப்படும் உணவு வகைகளும் இங்கே தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. சிவனுக்கு உரிய அடையாளங்கள் பலவும் கொண்டவளாகக் கொற்றவை திகழ்கிறாள். அதனை,

மதியின் வெண்தோடு சூடும் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை எயிற்று உரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை போர்த்து அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலை ஆட்டி
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை

என்று விரிவாக இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார்.

உமை - பல பெயர்கள்

சிவன், உமை, முருகன் முதலியோருக்குப் பலபெயர்கள் உண்டு. பிற்காலச் சமய நூல்கள் இப்பெயர்களை எடுத்துரைத்து, வழிபாட்டுக்கு உரிய போற்றிப் பாடல்களை வகுத்துத் தந்தன. பதினெட்டு, நூற்றி எட்டு, ஆயிரத்து எட்டு என்று இப்போற்றிகள் தொகுக்கப்பட்டன. இவ்வகையில், உமை பற்றிய போற்றிப் பாடல்கள் உருவாவதற்குச் சிலப்பதிகார வேட்டுவ வரியில் பல குறிப்புகள் துணை நின்றமையை அறிய முடிகிறது.

அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற்கு இளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை

ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை
தமர் தொழ வந்த குமரிக் கோலத்து
அமரிளம் குமரி...

என்று அடுக்கப்படும் உமையம்மையின் பல்வேறு திருப்பெயர்கள் பிற்காலத்தே அர்ச்சனைக்கு உரிய மந்திரங்களில் இடம் பெற்றிருத்தலைக் காண முடிகிறது.

கொற்றவை இசைப் பாடல்கள்

முல்லையும் குறிஞ்சியும் வளங்குறைந்தபோது, பாலை நிலமாகத் தோற்றம் தரும். அத்தகு பாலை நிலத் தெய்வம் கொற்றவை. இந்நிலத்து வாழும் எயினர் என்ற மக்கள், கூட்டமாகக் கூடி நின்று, கொற்றவையை முன்னிலைப்படுத்தி பாடியும் ஆடியும் வழிபடுதல் உண்டு என்பது வேட்டுவவரி என்ற பகுதியில் தெரிய வருகிறது. உரைப்பாட்டு மடை, வள்ளிக்கூத்து, முன்னிலைப் பரவல், வென்றிக் கூத்து, கூத்துட்படுதல்,அவிப்பலி என்ற உட்தலைப்புகளில், கொற்றவை புகழ்பாடும் இசை மற்றும் கூத்துக்கு உரிய 21 இசைப்பாடல்கள் இங்கே காணப்படுகின்றன. உமை தொடர்பான முதல் இலக்கியப் பதிவாக இப்பகுதி அமைந்துள்ளது. முன்னிலைப் பரவல் என்ற பகுதியில்,

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுகின்றியே நிற்பாய்

என்ற அழகிய, கொற்றவையைப் புகழ்ந்து பாடும் பாடல் அமைந்துள்ளது.

உமை- திருமால் உறவு முறை

உமை பற்றிய புராண வரலாறுகளும், பிற

தெய்வங்களுடைய உறவு முறைகளும், அவள் பகை அழித்த திறமும், உமையின் கருணைத் திறமும் பல பாடல்களில் விளக்கப்பெற்றுள்ளன. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்யும் இறையவர்களுக்கும் மேலானவளாக, அன்னோர் நெஞ்சில் உமை ஒளிமிக்க தீபமாக நின்று ஒளி செய்கிறாள் என்று இளங்கோவடிகள் சிவசக்தியின் சிறப்பு உரைக்கிறார்.

அரி அரன் பூமேலான் அகமலர்மேல் மன்னும்
விரிகதிர் அம்சோதி விளக்காகியே நிற்பாய்

என்பது எயினர்கள் பாடிய தோத்திரங்களுள் ஒன்றாக அமைந்துள்ளது. உமையை, திருமாலின் தங்கை என்று கூறுவது சமய மரபு. சிலம்பு இச்செய்தியை உரைக்கும்போது உமையைத், திருவ மாற்கு இளையாள் என்று உறவுமுறை காட்டுகிறது. சிவன், திருமால் என்ற இரு கடவுளர்களோடும், உமையைத்தொடர்பு படுத்திச் சமய சமரசம் காட்டுகிறார் இளங்கோவடிகள்

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய்

திருமால் கையில் நிற்கும் சங்கு சக்கரங்கள், உமையின் கைகளிலும் இடம்பெற்றிருப்பதாகக் கூறுவது அரிய செய்தியாக உள்ளது.

உமை- பகையழித்த திறம்

சிலம்பில் இடம் பெற்றுள்ள வழக்குரை காதையில், உமை பகை அழிக்க எடுத்த பல வடிவங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சினத்துடன் ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி, தலைவிரிகோலமாய் அரண்மனை வாசலில் வந்து நின்ற கண்ணகியைக் கண்டு நடுக்கம் உற்ற வாயிற்காவலன்,

உரைப்பதாக அமைந்தள்ள ஒருபகுதியில், உமையின் வீரச் செயல்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க்கு இளைய நங்கை; இறைவனை
ஆடல் கண்டு அருளிய அணங்கு; சூருடைக்
கானகம் உகந்த காளி; தாருகன்
பேருரம் கிழித்த பெண்...

என்று தொடரும் வழக்குரை காதைப் பகுதியில், உமை பற்றிய பழைய வீர வரலாறுகள் இனங்காட்டடப்பட்டுள்ளன. இப்பகுதியில் உமை, மகிடாசுரமர்த்தினி,பிடாரி, பத்திரகாளி, துர்க்கை என எடுத்த வீரம் செறிந்த கோலங்கள் இனங்காட்டடப்பட்டுள்ளன. 1800 ஆண்டுகளுக்கு முன்னரே உமை தொடர்பான, புராணச் செய்திகள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிலம்பில் முருகன்

சிலப்பதிகாரத்தின் மூன்றாவது பகுதி, வஞ்சிக் காண்டம் என்று பெயர் பெறும். இக்காண்டத்தின் முதல் காதை, குன்றக் குரவை என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில், குறிஞ்சி நில மக்களாகிய குன்றக்குறவர் மேற்கொண்ட தெய்வ வழிபாட்டு முறைமைகளும், முருகனை அவர்கள் புகழ்ந்து பாடிய இசைப்பாடல்களும் நிறைவாக இடம் பெற்றுள்ளன. முருகன் மாமர வடிவில் நின்ற சூரனைத் தடிந்த செய்தி, உரவு நீர் மா கொன்ற வேல் ஏந்தி என்ற தொடரால் குறிக்கப்பட்டுள்ளது. அவன் கை வேல்,

பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டு ஒருநாள்
சூர் மா தடிந்த சுடர் இலைய வெள்வேல்

என்று குறிக்கப்பட்டுள்ளது. குருகு பெயர் குன்றம் என்று குறிக்கப்படும், கிரவுஞ்ச மலையை முருகன் அழித்த திறம்

வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேல்

என்பதால் விளக்கப் பெற்றுள்ளது.

புராண வரலாறுகள்

பாட்டுமடை என்ற பகுதியில், முருகன் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் செய்யும் தலங்கள் பற்றிய குறிப்பும், அவன், ஆறு முகங்களும், பன்னிரு கைகளும் கொண்டவன் என்ற செய்தியும், அவன் கார்த்திகைப் பெண்டிரிடம் பாலுண்டவன் என்ற புராண வரலாறும் காணப்படுகின்றன.

**சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்**

என்றும்,

**அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான்**

என்றும்

**சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான்**

என்றும் வரும் பகுதிகள், முருகன் அருள் வரலாற்றின் அரிய பதிவுகளாக அமைந்துள்ளன.

பிற காப்பியங்களில் சிவன்

சிலப்பதிகாரத்துடன் தொடர்புடையது மணிமேகலை. இந்நூல், சீத்தலைச் சாத்தனார் என்பவரால் இயற்றப்பட்டது.

பௌத்தம் சார்ந்து வாழ்ந்த, மாதவிமகள் மணிமேகலை என்பாளின் வரலாறு கூறுவது. சிலப்பதிகாரத்தைப் போல் சமயம் சார்ந்த செய்திகள் இலைமறை காயாக இந்நூலுள் கூறப்பட்டிருக்கவில்லை. நேரடியாகவே இந்நூல், பௌத்த மதச் சிறப்புரைக்கும் போக்கில் அமைந்துள்ளது. அக்காலத்தே பூம்புகாரில் வாழ்ந்திருந்த, பல்வேறு சமயவாதிகளையும், அவர்தம் சமயக் கொள்கைகளையும், அவர்கள் தம்முள் நிகழ்த்திக் கொண்ட சமயம் சார்ந்த வாக்கு வாதங்களையும் இந்நூல் எடுத்துரைக்கிறது. மணிமேகலை தோன்றிய காலப் பகுதியிலேயே, வழிபாட்டுச் சமயமாக இருந்த சைவம், தத்துவச்சமயமாக உருப்பெற்றுவிட்டமையை இந்நூல் வழி அறிய முடிகிறது. சீவக சிந்தாமணியில், வேதவழிப்பட்ட சமயங்கள் குறித்த, சில குறிப்புகள் மட்டுமே காணப்படுகின்றன. வளையாபதி, குண்டலகேசி என்பவை முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, சைவம் பற்றிய ஆய்வுக்கு இக்காப்பியங்கள் இடம் தரவில்லை.

கல்லாடம்

சைவத் தமிழ் இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்க பழமையான நூல் கல்லாடம். 'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' என்பது, இந்நூலைக் கற்றாரின் ஆற்றலை விளக்கும் ஒரு பழமொழி. கல்லாடர் என்பார் இந்நூலை இயற்றினார். இந்நூல் கடைச்சங்க காலத்திற்கும், தேவார ஆசிரியர்கள் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியைச் சார்ந்தது. பிற்காலத்தில், சைவசமயம் சார்ந்த, கோவை நூல்கள் தோன்றுவதற்குக் கல்லாடம் வழி வகுத்தது. நூறு அகப்பொருள் துறைகளை விளக்கும் போக்கில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், மதுரையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களையும், நகரச் சிறப்புக்களையும்

விரித்துரைக்கிறது. திருமுருகாற்றுப் படையை முதல் முருக இலக்கியமாகக் கொள்வது போல், சிவன் சிறப்புரைக்கும் முதல் இலக்கியமாக இதனைக் கருதலாம். இந்நூல் அரங்கேற்றம் நிகழும்போது, சிவன், இந்நூலைக் கேட்டுத் தம் முடியை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் என்று ஒரு வெண்பா எடுத்துரைக்கிறது.

கல்லாடத்தில் விநாயகர்

சங்க இலக்கியங்களில் காணப்படாத விநாயகர் துதி முதன்முதல் இந்நூலுள் காணப்படுகிறது. திங்கள் முடிபொறுத்த என்று தொடங்கி இப்பாடல் 40 வரிகளுடன் நிறைகிறது. விநாயகன் திருமேனி அமைப்பும், அவன் சிவன் மகன் என்பதுவும், அவன் ஆற்றல்களும், அருளிப்பாடுகளும், மாங்கனி பெற வேண்டிப் பெற்றோரை வலம் வந்த வரலாறும் பிறவும் இப்பாடலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இதுபோல முருகனுக்கும் ஒரு வாழ்த்துப் பாடல் இந்நூலுள் இடம் பெற்றுள்ளது. பாய்திரை உடுத்த ஞாலம் என்று தொடங்கும் இப்பாடல் 65 வரிகளைக் கொண்டது. முருகன் அழகும், ஆற்றலும், அருளிப்பாடும் இதனுள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

கல்லாடத்தில் சிவன் வரலாறுகள்

சிவன் பெருமை பேசும் இந்நூலுள், சிவன் தொடர்பான பல புராணச் செய்திகள் பதிவு செய்யப்பெற்றுள்ளன. தருமிக்கு மதுரை இறைவன் பொற்கிழி அளித்த வரலாறு,

> கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
> பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி
> என் உளம் குடிகொண்டு.இருபயன் அளிக்கும்
> கள் அவிழ குழல்சேர் கருணை எம்பெருமான்

எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிவனே, மதுரையில் சவுந்தரபாண்டியன் என்ற பெயரில், முடிபுனைந்து ஆட்சி செய்தான் என்பதை,

பெருநீர் வையை வளைநீர்க் கூடல்
உடல்உயிர் என்ன உறைதரு நாயகன்
கடுக்கை மலர் மாற்றி வேப்பு அலர் சூடி
ஐவாய்க் காப்புவிட்டு அணிபூண் அணிந்து
விரிசடை மறைத்து மணிமுடி கவித்து
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எடுத்து
வழுதி யாகி முழுது உலகு அளிக்கும்
பேரருள் நாயகன்

என்ற வரிகளால், கல்லாடர் பதிவு செய்கிறார். சைவத்தமிழ் இலக்கிய வரலாற்றில், இந்நூல், காலப்பழமையும் சாலப் பெருமையும் கொண்டு விளங்குகின்றது.

அரிய கொடைகள்

சைவமும் தமிழும் என்ற இத்தலைப்பில், தொல்காப்பியம் தொடங்கிக் கல்லாடம் வரையிலான நூல்களில் காணப்படும் சைவம் பற்றிய அரிய குறிப்புகள் திரட்டி வழங்கப்பட்டுள்ளன. பிற்காலத்தே, சைவத் திருமுறைகளும், சிற்றிலக்கியங்களும் தோற்றம் கொள்வதற்கு உரிய ஊற்றத்தை, இவை வழங்கியுள்ளமை கண்டு காட்டப்பட்டது. சைவமும் தமிழும் என்ற பகுப்பில் சிவன், உமை, முருகன், விநாயகர் முதலிய கடவுளர்கள் தொடர்பாக எழுந்த தனிப்பாடல்களும், நூல்களும், ஒன்றாகவே ஆராயப்பட்டுள்ளன. முருக வழிபாடு முதன்மை பெற்றிருந்தமை நன்கு புலனாயிற்று. சக்தி வழிபாடும் சிறந்திருந்தது. விநாயகர் வழிபாடு மிகப் பிற்காலத்தில்தான் தமிழகத்திற்கு அறிமுகமாயிற்று. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சைவம் வழங்கியிருக்கும் அரிய கொடைகளை, இப்பகுதி உறுதி செய்து நிற்கிறது.

2. திருமுறைத் தமிழ்

திருமுறைத் தமிழ்

தமிழ்நாட்டில் நிலவும், சைவசமயத்தின் முதன்மை நூல்களைச் சைவத் திருமுறைகள் என்று கூறுவது மரபு. அவற்றை பன்னிரண்டாகப் பகுத்துள்ளனர். சைவ சமயம் சார்ந்து எழுந்த இலக்கியப் பரப்பை அறிமுகப்படுத்தும் முதல்பகுதியில், பழந்தமிழ் நூல்களில் காணப்படும் சைவம் தொடர்பான செய்திகள் திரட்டி வழங்கப்பட்டன. திருமுறைத்தமிழ் என்ற இப்பகுதியில் கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்கும், பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய, சைவ சமய இலக்கியங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. திருமுறைப் பகுப்பு, அவற்றின் ஆசிரியர்கள், நூல் எழுந்த காலம், நூலின் கட்டமைப்பு, உள்ளீடு, இலக்கிய வரலாற்றில் அந்நூல்கள் வகிக்கும் இடம், சைவ சமய வளர்ச்சியில் அவற்றின் பங்கு முதலியன இனங்காட்டப் பட்டுள்ளன.

சைவத் திருமுறைகள்

வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் சங்கப்புலவர்கள் பாடிய தனிப் பாடல்களை எல்லாம் பிறகாலத்தார்

தொகுத்து, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பெயர் சூட்டி, எண்ணிக்கை காட்டிப் பாதுகாவல் செய்தனர். அவற்றைப் போல், சைவ சமயம் குறித்து அருளாளர்கள் பலர், வெவ்வேறு இடங்களில் சென்று, சைவ இறையவர்கள் குறித்துப் பாடிய அருட்பனுவல்கள், ஆங்காங்கே பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன. ஒரு காலத்தில் இவற்றை எல்லாம் திரட்டி, அருளாளர் சிலர் வகுத்து வைத்தனர். அவ்வாறான பல, சைவ சமய நூல்களின் தொகுப்பினையே, சைவத் திருமுறைகள் என்று பெயரிட்டு வழங்கினர். இவை சமயம் சார்ந்த பாடல்களும் அழிந்துபடாது காக்கும் ஒருவகைப் பாதுகாவல் ஆயின.

திருமுறை, விளக்கம்

திருமுறைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பனுவல்களுக்கும், நூல்களுக்கும் தனித்தனியே பெயர்கள் அமைந்துள்ளன. ஆயினும், இவை அனைத்தையும் உள்ளடக்கி நிற்கும் ஒரு பொதுக் குறியீடாகத் திருமுறைஎன்ற சொல் வழங்கப்பட்டு வருகிறது. திருமுறை என்ற சொற்றொடரை திரு+ முறை என்று பகுக்கலாம். முன்னே அமைந்துள்ள திரு என்ற சொல்லுக்குத் தெய்வத்தன்மை என்பது பொருள். முறை என்ற சொல்லுக்குப் பல பொருள்களை நிகண்டுகளும், தமிழ் அகராதிகளும் கூறுகின்றன. முறை என்ற சொல்லுக்கு நூல் என்ற பொருள் உண்டு. கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் என்பவர் தம் நூலுள், அவையடக்கம் கூறும்போது,

இறை நிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறை வரைவேன் என முயல்வது ஒக்குமால்

என்று பாடியுள்ளார். இத்தொடர்களுள், முறை என்பது நூல் என்ற பொருள் தருதலைக் காணலாம். எனவே, திருமுறை என்ற சொல் தெய்வநூல் அல்லது, தெய்வத்தன்மை உடைய நூல் என்று

பொருள்தரும். முறை என்பதற்கு ஒழுங்கு, வரிசை, உறவு, முறையீடு என்ற வேறு பொருள்களும் உள்ளன.

திருமுறை கண்டமை

தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருந்த பிற்காலச் சோழர்களில் ஒருவன் அபயகுலசேகரன் என்பான். இவன் முயற்சியால், நம்பியாண்டார் நம்பிகள் என்ற சிவவேதியர், திருமுறைகளைத் தொகுத்துஅளித்தார் என்று கூறப்படுகிறது. தில்லைத் திருக்கோயிலில் திருமுறை ஏட்டுச் சுவடிகள் இருந்தன. அவற்றுள் கறையானால் அழிக்கப்பட்ட ஏடுகள் போக, மீதமுள்ள ஏடுகளே தொகுத்து வைக்கப்பட்டன. ஒன்று முதல் பதினொன்று வரையிலான திருமுறைகளை நம்பி தொகுத்தார் என்றும், அவர் காலத்துக்குப்பின், சேக்கிழாரின் பெரியபுராணம், பன்னிரண்டாம் திருமுறையாக இணைத்துக் கொள்ளப்பட்டது என்றும் தெரிகிறது. இவற்றுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண் ஒருத்தி, பண்முறை கண்டு இசை அமைத்தார். சோழர்கள் திருமுறைகள் அழியாது இருக்க அவற்றைச் செப்புப் பட்டயங்களில் பொறித்துப் பாதுகாத்தனர் என்று தெரிகிறது. முன்குறித்தவாறு, திருமுறைகளின் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்கும் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாகும். திருமுருகாற்றுப்படை கடைச் சங்க காலத்தது. காரைக்காலம்மையார் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவர். மாணிக்கவாசகர், திருமூலர் காலம் குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

திருமுறைகளின் பெருமை

திருமுறைகளுக்குப் பெருஞ்சிறப்பு உண்டு. சைவர்கள் இவற்றை, இறைவன் நூல் என்றும், தமிழ்வேதம் என்றும் கருதிப் போற்றி வருகின்றனர். வேதம் மற்றும் சைவ ஆகமங்களின்

சாரமாகவே திருமுறைகள் அமைந்தன. .இவை சிவனின் அடையாளங்கள், ஆற்றல்கள், அருளிப்பாடுகளை விளக்கி நிற்கின்றன. சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுவதற்கு அடிப்படையான இறை, உயிர், தளை இயல்புகள், திருமுறைகளுள் விரித்துரைக்கப் பட்டுள்ளன. சில பதிகங்கள், அற்புத நிகழ்வுகளோடு இணைந்தவை. அவற்றைப் பக்தியோடு ஓதினால், உரிய நன்மையை அவை தரும் என்ற நம்பிக்கை, சைவர்களிடையே நிலவி வருகிறது. தமிழ்நாட்டின் 500 ஆண்டுக்கால சமய- சமூக வரலாற்றை அறியத் திருமுறைகள் துணையாகின்றன. தமிழ் இசை, கலை, தமிழகப் பெண்மை உயர்ச்சிபெறத் திருமுறைகள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன. சிவன் சந்நிதிகளில், பூசைக் காலங்களில், திருமுறை ஓதி வழிபடும் வழக்கம் நிலவுகிறது. திருமுறை விண்ணப்பம் செய்வாரை ஓதுவார் என்று கூறுவர். கல்வெட்டுகள் இவர்களைப் பிடாரர்கள் என்று குறிக்கிறது.

திருமுறை ஓதப்படும் முறை

திருமுறைகளை ஓதுவதில் சில நெறிமுறைகளைச் சைவம் வகுத்துள்ளது. சிவதீட்சை பெற்றவர்களே, நீராடி தூய ஆடை உடுத்து, வெண்ணீறு அணிந்து, உரிய பண் அடைவோடு இறைவன் முன்பு திருமுறை ஓதுதல் வேண்டும். ஒவ்வொரு காலப் பூசையிலும் திருமுறை ஓதப்பட வேண்டும். அந்தந்தத் தலத்துக்கு உரிய பனுவல்களைப் பாடுவது சிறப்பு. திருமுறை விண்ணப்பிக்கத் தொடங்கும் முன்பும், நிறைவு செய்த பின்பும் திருச்சிற்றம்பலம் என உச்சரித்தல் வேண்டும். தேவாரமாயின் பதிகம் முழுவதையும் பாட வேண்டும். காலம் கருதி இயலாதபோது பதிகத்தின் முதற் பாடலையும், நிறைவுப் பாடலையும் பாடலாம். ஒவ்வோர் திருமுறையிலிருந்தும் குறைந்தது ஒவ்வொரு பாடலையாவது பாடுவது நலம். .இயலாத

நிலையில் ஒரு தேவாரப் பாடல், ஒரு திருவாசகப் பாடல், ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பாவிலிருந்து ஒரு பாடல், திருப்பல்லாண்டிலிருந்து ஒன்று, பெரியபுராணப் பாடல் ஒன்று என்று ஐந்து பாடல்களைப் பாடும் மரபு உண்டு. இதற்குப் பஞ்சபுராணம் பாடுதல் என்று பெயர். சிவன் எழுந்தருளுகையில் திருமுறைகள் முன்னாகவும், வேதங்கள் பின்னாகவும் ஓதப்படும் மரபு நிலவி வருகிறது. சிவ பூசையின் நிறைவில், முதல் மரியாதை ஓதுவார்களுக்கே வழங்கப்பட்டு வருதல் திருமுறைகளின் பெருமைக்குச் சான்றாக உள்ளது.

பன்னிரு திருமுறைகள்

திருஞானசம்பந்தர் பாடிய இசைப்பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகளும் திருநாவுக்கரசர் பாடியன. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இவ்வேழு திருமுறைகளையும் தேவாரம் என்று கூறுதல் மரபு. திருஞானசம்பந்தர் தேவாரத்தைத் திருக்கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசர் பாடல்களை மட்டும் தேவாரம் என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பனுவல்களைத் திருப்பாட்டு என்றும் கூறும் மரபும் நிலவி வருகிறது. ஏழு திருமுறைகள் பண்முறையில் அமைந்தன. தல வரிசையில் ஒரு தேவாரத் தொகுப்பும் உண்டு. அதனை அடங்கன்முறை என்பர். மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாத் தொகுக்கப்பட்டுள்ளன.

தேவாரத் திருவாசகங்கள்

பன்னிரு திருமுறைகளுள் முதல் எட்டுத் திருமுறைகளைத் தேவாரத் திருவாசகங்கள் என்று கூறுவது சைவ மரபு: முதல் ஏழு திருமுறைகளைப் பாடியவர் மூவர். காலவரிசைப்படி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என அவர்களைக் குறிப்பர். இவர்களைத் தேவார மூவர் என்றும், மூவர் முதலிகள் என்றும் குறித்தல் வழக்கு. இவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பை மூவர் தேவாரம் எனப் போற்றுவர். தேவாரத் திருவாசக ஆசிரியர்களை நால்வர் என்றும், நால்வர் பெருமக்கள் என்றும் சைவசமயத்தினர் குறிப்பிடுவர்.

தேவாரம் தொகுக்கப்பட்டமை

தேவாரத் திருமுறைகளைத் தொகுத்து முறைப்படுத்தியவர் நம்பியாண்டார் நம்பிகள் என்பவர். இவர் தில்லை (சிதம்பரம்)யை அடுத்த திருநாரையூரில் வாழ்ந்தவர். தேவார ஆசிரியர்கள் சைவத் தலங்களுக்கெல்லாம் சென்று பாடிய இசைப் பாடல்கள் வெவ்வேறு இடங்களில் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன. அபயகுலசேகரன் என்ற சோழமன்னன் வேண்டுகோளை ஏற்று, விநாயகர் வழிகாட்ட, தில்லையில் இருந்த தேவார ஏடுகளைக் கண்டெடுத்து, நம்பியாண்டார் நம்பிகள் முதல் ஏழு திருமுறைகளைத் தொகுத்து வழங்கினார். திருஎருக்கத்தம்புலியூரில் வாழ்ந்து வந்த, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த, இறையருள் பெற்ற பெண் ஒருத்தி தேவாரப் பாடல்களுக்குப் பண்களை வகுத்து வழங்கினார். தேவாரப் பண்களின் பெயர்களும், அவற்றின் சந்த வேறுபாடுகள் குறித்த கட்டளைகளையும், உமாபதி சிவாசாரியார் இயற்றிய திருமுறை கண்ட புராணம் விரித்து உரைக்கிறது. மூவர் தேவாரச் சிறப்பை,

> *எரியினிடை வேகாது ஆற்றெதிரே ஓடும்*
> *என்புக்கும் உயிர் கொடுக்கும் - இடுநஞ்சு ஆற்றும்*
> *கரியை வளைவிக்கும்; கல்மிதக்கப் பண்ணும்;*
> *கராம்மதலை கரையில்உறக் காற்றும் காணே* (17)

எனத் திருமுறைகண்ட புராணம் சிறப்பிக்கிறது.

தேவாரம்- பண்முறை - தலமுறை

பத்துப்பாடல்கள் கொண்ட தொகுப்பைப் பதிகம் என்று கூறுவர். இது முன்னரே விளக்கப்பட்டது. மூவர் தேவாரங்கள் பதிக அமைப்பை உடையன. திருஞானசம்பந்தர் பதிகங்களில், பதிகத்தை ஓதுவதால் விளையும் பயன் கூறும் ஒரு பாடலும், பதிக இறுதியில் இடம் பெறச் செய்யப்பட்டுள்ளது. இதனைத் **திருக்கடைக்காப்பு** என்று கூறுவர். மற்றைய இருவர் பதிகங்களில் சிலவற்றைத் தவிர ஏனைய பதிகங்கள் பத்துப் பாடல்கள் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. தேவார மூவரும் பல சிவத் தலங்களில் சென்று பாடியிருந்தாலும், அவற்றை எல்லாம் தொகுத்துப் பண்முறையில் ஒழுங்கு செய்துள்ளனர். இதனைப் பண்முறை என்று கூறுவர். ஏழு திருமுறைகள் என்ற தொகுப்பும் பண்முறையிலேயே அமைந்தது. அதாவது, ஒரு ஆசிரியர் வெவ்வேறு தலங்களில் பாடியிருந்தாலும், ஒரே பண்ணில் அமைந்த பதிகங்கள் தொகுக்கப்பட்டு திருமுறைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தேவாரப் பண்கள்

தேவாரத்தில் இடம்பெற்றுள்ள பண்கள் இருபத்து ஒன்று. இதனைப் பந்தத்தால் என்று தொடங்கும் திருக்கழுமலம் (சீகாழி) பதிகத்தில் திருஞானசம்பந்தர் குறித்துள்ளார். பின்வந்தோர் பண்களை இருபத்து நான்கு என்றும், இருபத்து ஏழு என்றும் பிரித்துக் கூறினர். இவற்றைப் பகற் பண்கள், இராப் பண்கள், பொதுப் பண்கள் என மூன்றாகப் பிரிப்பர். பகற்பண்கள் பத்து, இராப் பண்கள் எட்டு, பொதுப் பண்கள் மூன்று. இவற்றைக் கீழே உள்ள அட்டவணையில் விரிவாகக் காணலாம்.

பகற்பண்கள்-10	இராப்பண்கள்-8	பொதுப்பண்கள் -3
1. புறநீர்மை	1. தக்கராகம்	1.செவ்வழி
1. காந்தாரம் - (பியந்தைக் காந்தாரம்)	2. பழந்தக்கராகம்	2.செந்துருத்தி
3. கௌசிகம்	3. சீகாமரம்	3. திருத்தாண்டகம்
4. இந்தளம்	4. கொல்லி	
திருக்குறுந்தொகை	கொல்லிக் கௌவாணம்	
	திருநேரிசை திருவிருத்தம்	
5. தக்கேசி	5. வியாழக்குறிஞ்சி	
6. நட்டராகம்	6. மேகராகக்குறிஞ்சி	
7. நட்டபாடை	7. குறிஞ்சி	
8. பழம் பஞ்சுரம்	8. அந்தாளிக்குறிஞ்சி	
9. காந்தார பஞ்சமம்		
10. பஞ்சமம்		

இவற்றுள் செவ்வழிப்பண் திருஞான சம்பந்தரால் மட்டுமே பாடப்பட்டுள்ளது. செந்துருத்தியைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மட்டுமே பாடியுள்ளார். திரு நேரிசை, திருவிருத்தம், திருக் குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பன திருநாவுக்கரசரால் மட்டுமே பாடப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர்

தேவார மூவருள் திருஞானசம்பந்தரே முதலாமவர். இவர் சீகாழிப் பதியில் சிவபாத இருதயர் என்பவருக்கும், பகவதி அம்மையாருக்கும் மகவாக அவதரித்தவர். அந்தணர் குலத்தில் கௌணியர் கோத்திரத்தில் உதித்தவர். மூன்றாவது வயதில் உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப்பெற்று ஞானசம்பந்தரானவர். அக்காலை இவர் பாடிய பதிகமே தோடுடைய செவியன் என்று தொடங்குவது. இவர் அழுகையால் வேதநெறி தழைத்தது. சைவத்துறைகள் விளக்கமுற்றன. அடியார்

மரபு உய்தி பெற்றது. இவர் வாழ்வில் சிவன் அருளால் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. இறந்த வணிகனைச் சடையாய் என்று தொடங்கும் பதிகம் பாடி உயிர்பெறச் செய்தார். திருவீழிமிழலையில் படிக்காசுப் பெற்றார். திருமறைக்காட்டில் மறைக்கதவை மீண்டும் மூடச் செய்தார். கோள்களால் சிவன் அடியார்களுக்குத் தீங்கு வாராது என்று வேயுறு தோளிபங்கன் என்ற பதிகம் பாடி நம்பிக்கை ஊட்டினார். மதுரையில் அனல் புனல் வாதங்கள் செய்து சமணர்களை வெற்றி கொண்டார். மட்டிட்ட புன்னையம் கானல் என்ற பதிகம் பாடி இறந்த பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பை மீண்டும் பெண் உருவம் கொள்ளச் செய்தார். பதினாறு வயதில் தம் திருமணநாளில், நல்லூர்ப் பெருமணம் என்ற பதிகம் பாடித் துணைவியாரோடு ஆச்சாள்புரத்தில் சிவசோதியில் கலந்து மறைந்தார். இவர் மறைந்த நாள் ஒரு வைகாசி மூலம் என்பர். இவர் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

முதல் திருமுறை

திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்களுள் இன்று நமக்குக் கிடைத்துள்ளவை 384 பதிகங்கள். பாடல்தொகை 4158. இவற்றுள் முதல் திருமுறையுள் 136 பதிகங்களும், 1469 பாடல்களும் இடம் பெற்றுள்ளன. 96 தலங்கள் இத்திருமுறையில் தேவாரப் பாடல் பெற்றுச் சிறந்துள்ளன. 1.நட்டபாடை(22), 2. தக்கராகம்(24), 3. பழந்தக்கராகம்(8), 4.தக்கேசி(12), 5.குறிஞ்சி(24), 6.வியாழக்குறிஞ்சி(25), 7.மேகராகக் குறிஞ்சி(7) ஆகிய 7 பண்களும், யாழ்மூரி என்ற ஒருபதிகமும் முதல் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. ஒருவகையில் யாழ்மூரி மேகராகக் குறிஞ்சியுள் அடங்கும். இத்திருமுறையுள் ,

விளையாததோர் பரிசில்வரு
பசு,பாச வேதனை ஒண்
தளையாயின தவிர அருள் தலைவன் ***(121)***

என்ற திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலம்) பாடிய பதிகத்தில், சைவ சித்தாந்தக் குறிப்புகளை ஞானசம்பந்தர் பதிவு செய்துள்ளார். திருவீழிமிழலைப் பதிகத்தில்,

ஈறாய் முதல் ஒன்றாய் இரு
பெண் ஆண் குணம் மூன்றாய்
மாறா மறை நான்காய் வரு
பூதம் அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழ் ஓசையொடு
எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன்ஆனான் இடம்
வீழிம் மிழலையே (109)

என எண் அலங்காரம் அமைய, சிவபெருமானின் குண இயல்புகளைப் பதிவு செய்கிறார்.

இரண்டாம் திருமுறை

இரண்டாம் திருமுறையுள் 122 பதிகங்களும், 1331 தேவாரப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இவை 90 சிவத்தலங்களுள் பாடப் பெற்றுள்ளன. 1.இந்தளம் (39), 2.சீகாமரம்(14), 3.காந்தாரம்(29), 4.பியந்தைக் காந்தாரம் (14), 5. நட்டராகம்(16),6.செவ்வழி(10) என ஆறு பண்கள் இரண்டாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன, பல தலங்களின் பெயர்களையும் இணைத்துப் பாடிய திரு சேத்திரக்கோவை, இராமாயணக் குறிப்புடைய, கள்ளார்ந்த பூங்கொன்றை என்று தொடங்கும் புள்ளிருக்கு வேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்) பதிகம், மந்திரமாவது நீறு என்று தொடங்கும் திருநீற்றுப் பதிகம் முதலிய, அரிய பெரிய பதிகங்கள் இரண்டாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. பாம்பு கடித்து இறந்த வணிகனை உயிர் பெறச் செய்து திருஞானசம்பந்தர் பாடிய திருமருகல் பதிகத்தின் முதற்பாடல்,

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே *(1655)*

என அகப்பொருள் குறிப்புடையதாய், செவிலி கூற்றாகப் பாடப்பட்டுள்ளது. உலக நிலையாமையை விளக்கி அவர் திருவாரூரில் பாடிய,

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
  தாமும் போவார்
கொந்தவேல் கொண்டுஒரு கூற்றத்தார் பார்க்கின்றார்
  கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்
  ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு
  அஞ்சல் நெஞ்சே (2325)

என்னும் பாடல் அரிய பொருள் நுட்பம் கொண்டது.

மூன்றாம் திருமுறை

திருஞானசம்பந்தரின் மூன்றாம் திருமுறையுள் 126 பதிகங்களும், 1358 தேவாரப் பனுவல்களும் இடம் பெற்றுள்ளன. மூன்றாம் திருமுறையுள் பாடல்பெற்ற சிவத்தலங்கள் 84 ஆகும்.

இத்திருமுறையுள், 1. காந்தார பஞ்சமம்(23), 2. கொல்லி(18), 3.கொல்லிக் கௌவாணம்(1), 4.கௌசிகம்(15), 5. பஞ்சமம்(10), 6.சாதாரி(33), 7.பழம்பஞ்சுரம்(17), 8.புறநீர்மை(6), 9.அந்தாளிக் குறிஞ்சி(12) முதலிய ஒன்பது பண்களில் பதிகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. திருவாவடுதுறையில், சிவ்பெருமான் ஆயிரம் பொன் வழங்கியபோது திருஞானசம்பந்தர் பாடிய, இடரினும் தளரினும்

என்று தொடங்கும் பதிகமும், நமசிவாய என்ற ஐந்தெழுத்தின் பெருமை பேசும்,

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செ ழுத்துமே

என்ற அரிய பாடலை முதலாகக் கொண்ட பஞ்சாக்கரத் திருப்பதிகமும் இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ளன.

புதிய யாப்பு வகை

மதுரையில் மங்கையர்க்கரசியாருக்கு நம்பிக்கை ஊட்டிப் பாடிய பதிகம், மானினேர் வாழி மாதராய் என்ற தொடக்கம் கொண்டது. நமச்சிவாயத் திருப்பதிகம், வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் என்ற தொடக்கம் கொண்ட திருப்பாசுரம். திருமுறைகள் தொகுக்கப்பட்டபோது அவற்றுள் இடம்பெறாது திருவிடைவாய் என்ற தலத்துக் கல்வெட்டிலிருந்து, மறியார் கரத்து எந்தை என்ற பதிகம் கண்டெடுத்து இணைக்கப்பெற்றது. இவையாவும் மூன்றாம் திருமுறைக்கு அணிசேர்ப்பன. திரு இருக்குக் குறள், திருவிராகம், திருமுக்கால், நாலடிமேல் வைப்பு, கூடற்சதுக்கம், ஈரடி, திருஇயமகம், மாலைமாற்று முதலாய புதிய யாப்பமைந்த பதிகங்களும் திருஞானசம்பந்தரால் இத்திருமுறையுள் பாடப்பெற்றுள்ளன.

திருநாவுக்கரசர்

தேவார மூவருள் இரண்டாமவர் திருநாவுக்கரசர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் அவதரித்தார். வேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில் வந்த புகழனார் மாதினியார் என்ற பெற்றோரின் மகவாகத் திலகவதியாருக்குப் பின்வந்தவர். இளமைப் பெயர் மருள்நீக்கியார். சமண சமயத்தில்

தலைமை பெற்றபோது அமைந்தது தருமசேனர் என்பது. திருவதிகையில் சிவபெருமான் வழங்கியது நாவுக்கரசு என்பது. திருஞானசம்பந்தர் முறையிட்டு அழைத்தது அப்பர் என்பது. சமணம் சென்று சைவம் மீண்டபோது திருநாவுக்கரசர் பாடிய முதல் திருப்பதிகம், கூற்றாயினவாறு என்று தொடங்குவது. பல்லவ வேந்தன் அழைப்பை மறுத்துப் பாடியது, நாமார்க்கும் குடியல்லோம் என்று அமைந்தது. அப்பூதியடிகளின் மகனை உயிர்பெறச் செய்தது. திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றது. திருமறைக்காட்டில் மறைக்கதவம் திறந்தது. கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டு மகிழ்ந்தது. திருப்புகலூரில் இறைவன் திருவடிகளில் ஒரு சித்திரைச் சதய நாளில் கலந்தருளியது என்பன இவரது வரலாற்றில் குறிக்கத்தக்க நிகழ்வுகள். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரோடு ஒரு காலத்தில் வாழ்ந்தவர். இவர் காலம் கி.பி.7ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

நான்காம் திருமுறை

திருநாவுக்கரசர் அருளியனவாக இன்று கிடைத்துள்ள பதிகங்கள் 312. தேவாரப்பாடல்களின் எண்ணிக்கை 3066. திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையில் இடம்பெற்றுள்ள பதிகங்களைத் திருநேரிசை என்று குறிப்பர். இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ள பதிகங்கள் 113. பாடல்கள் 1070. நான்காம் திருமுறையுள் 50 சிவதலங்களுக்கு உரிய பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. 1.கொல்லி(1), 2.திருநேரிசை(58), திருவிருத்தம்(34)(இவ்விருவகைப் பாடல்களும் கொல்லிப் பண்ணில் சேர்க்கப்பட்டுள்ளன). 3.காந்தாரம்(6), 4. பியந்தைக்காந்தாரம்(1), 5.சாதாரி(1), 6.காந்தார பஞ்சமம்(2), 7.பழந்தக்கராகம்(2), 8. பழம் பஞ்சுரம்(21),9.சீகாமரம்(2), 10.குறிஞ்சி(1) என நான்காம் திருமுறையுள் 10 பண்கள் இடம் பெற்றுள்ளன. இத்திருமுறையில் அற்புதத் திருப்பதிகங்கள்

ஒன்பது இடம் பெற்றுள்ளன. சைவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் இத்திருப்பதிகங்கள் குறித்த விளக்கங்களைக் கீழே உள்ள அட்டவணை விளக்கி நிற்கிறது.

அற்புதப்பதிகம்	தலம்	பதிகத்தொடக்கம்
சூலைநோய் நீக்கியது	திருவதிகை	கூற்றாயினவாறு
நீற்றறையில் பிழைத்தது	திருப்பாதிரிப்புலியூர்	மாசில் வீணையும்
யானை இடறவந்த போது பாடியது	திருப்பாதிரிப்புலியூர்	சுண்ணவெண்சந்தன.
கல் மிதக்கப்பாடியது	திருப்பாதிரிப்புலியூர்	சொற்றுணைவேதியன்
மறைக்கதவம் திறப்பித்தது	திருமறைக்காடு	பண்ணின் நேர்மொழி
அப்பூதி மகனை உயிர்ப்பித்தது	திங்களூர்	ஒன்றுகொலாம்
சூல-இடபக்குறி பாடிப்பெற்றது	திருச்சத்திமுற்றம்	கோவாய்முடுகி
திருவடி சூட்டப்பெற்றது	திருநல்லூர்	நினைந்து உருகும்
கயிலைக்காட்சி கண்டது	திருவையாறு	மாதர் பிறைக்கண்ணி

நான்காம் திருமுறை சிலகாட்டுகள்

திருநாவுக்கரசர் பாடல்களில் பத்திமையும், அனுபவ முதிர்வும், தன்னிலை இரக்கக் குறிப்பும் மிகுந்திருக்கும். எடுத்துக்காட்டுக்களாகச் சில தொடர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் (4164)

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை (4169)

கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயில்ஆலும் ஆருரரைக்
கையினால் தொழாது ஒழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே (4200)

உற்றார் ஆருளரோ உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்து உறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆருளரோ? (4249)

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே (4269)

சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்து இருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே (5041)

நான்காம் திருமுறையில், தலங்களில் பாடிய பதிகங்களோடு, திருநாவுக்கரசர் பாடிய பொதுப்பதிகங்கள் பலவும் இடம் பெற்றுள்ளன.

ஐந்தாம் திருமுறை

திருநாவுக்கரசரின் ஐந்தாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ள பதிகங்களைத் திருக்குறுந்தொகை எனக் குறித்துள்ளனர். இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ள பதிகங்கள் 100. பனுவல்கள் 1015. பாடப்பெற்ற சிவத்தலங்கள் 76. இத்திருமுறைப் பாடல்களை இயல்தமிழ் பாடல்களாகவே கொள்ள வேண்டும். ஆயினும், நடைமுறையில் இவை இந்தளப் பண்ணில்

பாடப்பெற்று வருகின்றன. எளிய இனிய சொற்களால் இத்திருமுறைப் பாடல்கள் அமைந்துள்ளன. சைவப் பெருமக்கள் பெரிதும் போற்றும் அரிய பல தொடர்களும், பாடல்களும், பதிகங்களும் இத்திருமுறையுள் அமைந்துள்ளன.

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல்பாவை நல்லாரினும்
தனிமுடிகவித்து ஆளும் அரசினும்
இனியன் தன் அடைந்தார்க்கு இடைமருதனே (5372)

எனச் சிவபெருமானின் அருள்பாலிக்கும் கருணையும்,

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே (5440)

என இறையடிவர்களைப் பகுத்து ஆய்ந்து அருளும் திறமும்,

பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரம்ஆயதோர் ஆனந்தம்
மருகலான்அடி வாழ்த்தி வணங்கவே (6092)

என இறைவன் திருவடியை வணங்கினால் பெறும் சிறப்புக்களையும்,

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே (6118)

இறைவனை வாழ்த்தி வணங்காது நாள்களைக் கடத்துவார் மீது பரிவுகொண்டு, தன்மேல் வைத்துப்பாடும் கருணையும்,

விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே **(6121)**

எனச் சிவபரம்பொருளை அடைதற்கு உரிய நெறிமுறைகளை உணர்த்தும் பனுவல்களும் என, ஐந்தாம் திருமுறை அரிய சைவ சமயக் களஞ்சியமாக அமைந்துள்ளது.

ஆறாம் திருமுறை

திருநாவுக்கரசரின் ஆறாம் திருமுறையைத் திருத்தாண்டகம் எனக்கூறுதல் வழக்கு. இவரைத் தாண்டக வேந்தர், தாண்டகச் சதுரர் எனப் பின்வந்தோர் போற்றினர். இதில் 99 பதிகங்களும் 981 திருத்தாண்டகங்களும் இடம்பெற்றுள்ளன. 65 சிவத்தலங்களில் பாடப்பட்ட பதிகங்களும், பல பொதுப் பதிகங்களும் இதனுள் இடம் பெற்றுள்ளன. தாண்டகம் என்பது ஒவ்வோர் அடியிலும் அறுசீர்களோ அல்லது எட்டுச் சீர்களோ அமையக் கடவுளையோ அல்லது ஆண்மக்களையோ நான்கு அடிகள் அமையப் பாடும் அமைப்புடையது. அறுசீரான் அமைவது குறுந்தாண்டகம் எண்சீரான் அமைவது நெடுந்தாண்டகம். தாண்டக இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் என்ற இலக்கண நூல்,

மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளரைப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர் குறியது; நெடியது எண்சீராம்

என விளக்கி உரைக்கிறது. முதல்முதலில் தமிழில் இந்தயாப்பினைக் கையாண்டவர் திருநாவுக்கரசரே.

தலைவராம் பிள்ளை யாரும்
தாண்டகச் சதுரராகும்
அவர்புகழ் அரசும் கூட
அங்கு எழுந்து அருளக் கண்டு

எனச் சேக்கிழாரும்,

வெள்ளேறு உடையான் தனக்கு அன்புசெய்
திருத்தாண்டக வேந்த

எனச் சிவப்பிரகாசரும் நாவுக்கரசரைத் தாண்டக யாப்புடன் இணைத்துப் போற்றியுள்ளனர்.

பொதுத் திருத்தாண்டகங்கள்

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் பெருஞ்சிறப்பு மிக்கது. தமிழ்நாட்டுச் சைவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படுவது. எளிய இனிய சொற்களால் இயற்றப் பட்டுள்ளது. வடமொழி வேதமந்திரங்களுக்கு இணையாகத் தமிழில் போற்றிப் பனுவல்கள் பலவற்றைக் கொண்டு இயங்குவது. நெஞ்சத்தை விட்டு அகலாத பல அரிய தொடர்களை உள்ளடக்கியது. தலங்களுக்கு உரியன அல்லாது பல பொதுத் தாண்டகப் பதிகங்களும் ஆறாந் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. கீழ்க்கண்ட அட்டவணையில் பொதுத் திருத்தாண்டகங்கள் குறித்த செய்திகள் திரட்டித் தரப்பட்டுள்ளன.

பொதுத்திருத்தாண்டகப் பெயர்	தொடக்கம்	பதிக எண்.
பலவகைத் திருத்தாண்டகம்	நேர்ந்து ஒருத்தி	1
நின்ற திருத்தாண்டகம்	இருநிலனாய்	1
தனித் திருத்தாண்டகம்	அப்பன் நீ	
	ஆமயந்தீர்	2
திருவினாத் திருத்தாண்டகம்	அண்டங்கடந்த	1
மறுமாற்றத் திருத்தாண்டகம்	நாமார்க்கும்	1

திருத்தாண்டகத்தில், தமிழ்நாட்டுச் சைவர்களால் தலைமேல் வைத்துப் போற்றப்படும் அரிய தொடர்கள் பல இடம் பெற்றுள்ளன. ஒரு சிலவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே (6244)

நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தார் (6380)

மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் (6791)

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழி தருமிக்கு அருளி னோன்காண் (7000)

வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண் (7104)

எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்று எழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே
(7162)

அங்கமெலாம் குறைந்து அழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்று உழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே (7182)

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் (7205)

இவைபோன்ற மேலும் பல அரிய தொடர்கள் ஆறாம் திருமுறையுள் இடம்பெற்றுள்ளன.

அரிய திருத்தாண்டகங்கள்

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகத்தில் அகத்துறைத் தழுவி அமைந்த பதிகங்களும் இடம் பெற்றுள்ளன.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவன்இருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே (6501)

இதனைப் போல், சரியை நெறி குறித்த பாடல்களும் திருத்தாண்டகத்துள் இடம் பெற்றுள்ளன. இறைவனை அடைவதற்கு உரிய நால்நெறிகளுள் ஒன்று தொண்டு நெறி. சிவனுக்கும், சிவன் அடியார்களுக்கும் செய்யும் அன்புப் பணிகளை வடமொழியில் சரியை என்பர். நால்வருள் சரியை நெறி நின்றவர் திருநாவுக்கரசர். திருவாரூர்த் திருத்தாண்டகம் ஒன்றில் நெஞ்சுக்கு உரைப்பதுபோல், திருக்கோயிலுக்குச் செய்ய வேண்டிய தொண்டுகளை நாவுக்கரசர் பட்டியல் இட்டுள்ளார்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலவர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலை ஆரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா செயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே (6555)

போற்றித் திருத்தாண்டகங்கள்

இறைவன் திருமுன்பு நீரும் பூவும் கொண்டு சென்று, தாமே அடியார் இறைவனை நீராட்டி, பூப்பெய்து, ஆரத்தழுவி வழிபடும் உரிமை முற்காலத்தில் தமிழ்நாட்டில் நிலவியிருந்துள்ளது.

மலர்தூவி வழிபடும்போது, இறைவனைப் புகழ்ந்து போற்றும் அரிய பாடல்களைத் திருநாவுக்கரசர் ஆக்கி அளித்துள்ளார். வடமொழி மந்திரங்களுக்கு இணையான, இவற்றைச் சிவபெருமான் திருமுன்பு ஓதி வழிபடும் முறைமை மீண்டும் இன்று தமிழகத் திருக்கோயில்களில் மலர்ந்துள்ளது. அவ்வாறான போற்றித் திருத்தாண்டகங்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லல்அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரம் எரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றிபோற்றி (6563)

எனவரும் திருவாரூர்த் திருத்தாண்டகமும்,

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல்ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும்தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

எனவரும் திருக்கயிலாயத் திருத்தாண்டகமும் மனம் கொண்டு போற்றத்தக்கன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருமுறை ஆசிரியர்களுள் மூன்றாமவர் சுந்தரமூர்த்தி

சுவாமிகள். இவர் அருளிய பனுவல்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவர் திருமுனைப்பாடி நாட்டில், ஆதி சைவர் குலத்தில் சடையனார், இசைஞானியார் அருமகவாக அவதரித்தார். இவர் பிள்ளைத் திருநாமம் ஆரூரர் என்பது. திருமணநாளில் சிவபெருமான் புத்தூரில் தடுத்து ஆட்கொண்டான். இறைவன் விரும்பியவாறு திருவெண்ணெய்நல்லூரில் பித்தா பிறை சூடி என்று சிவபெருமான் அடி எடுத்துக் கொடுக்க இவர் பதிகப் பாமாலைகள் பாடத் தொடங்கினார். திருவதிகையில் திருவடி தீட்சை பெற்றார். திருவாரூரில் இறைவன் தம்மை இவருக்குத் தோழமை தந்தான். திருவாரூரில் பரவையாரையும், திருவொற்றியூரில் சங்கிலியாரையும் மணந்தார். சிவபெருமான் இவருக்காக வீடுகள் தோறும் சென்று பிச்சை ஏற்று உணவு படைத்தார். பரவை பால் ஊடல் தீர்க்கத் தூது சென்றார். சேரமான் பெருமாள் நாயனாரும், கோட்புலியாரும் பிறரும், இவர் காலத்தவர். முதலை வாய்ப் பாலனை இவர் பதிகம் பாடி மீட்டார். வன்தொண்டன் என்பதும் இவர் பெயர்களுள் ஒன்று. திருத்தொண்டத் தொகை இவரால் அருளப்பட்டது. ஆடிச் சுவாதிநாளில் இவர் வெள்ளானை மீது ஏறிக் கயிலை சேர்ந்தார். சகமார்க்கம் என்றும் யோகநெறி என்றும் கூறப்படும் தோழமை நெறியில் வாழ்ந்தவர் இவர். இவர் உலகில் வாழ்ந்திருந்த காலம் 18 ஆண்டுகள் என்பர். இவர் காலம் கி.பி.9 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று கூறப்படுகிறது.

திருத்தொண்டத் தொகை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய ஏழாம் திருமுறையுள் 100 பதிகங்களும் 1026 அருட்பாடல்களும் இடம் பெற்றுள்ளன. 96 திருத்தலங்கள் இவர் பாடல் பெற்றுச் சிறந்துள்ளன. இவர் 17 பண்களில் பாடியுள்ளார். இவர் அவதரித்த நோக்கமே திருத்தொண்டத் தொகை என்ற அடியார் வரலாறு கூறும் பதிகம் பாடுவதற்கென்று சேக்கிழார் குறிக்கிறார்.

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்
போதுவான் (பெரியபுராணம் -35)

சுந்தரர் வருகை அமைந்தது என்பது சேக்கிழார் எண்ணம்.

திருத்தொண்டத்தொகையின் சிறப்பினைப் பெரியபுராணம் பலவாறு விரித்துரைக்கிறது.

ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை

(பெரியபுராணம் 1270)

ஞாலம் உய்ய நாம் உய்ய
நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகை

(பெரியபுராணம் 499)

தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத்தொகை

(பெரியபுராணம்.48)

இதில் 60 தனியடியார்களும் 9 தொகையடியார்களும் குறிக்கப்பட்டுள்ளனர். பெரியபுராணத் தோற்றத்திற்கு இதுவே முதல் நூலாக அமைந்தது. இதில் தில்லை வாழ் அந்தணர் என்று தொடங்கி 11 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

ஏழாம் திருமுறை

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஏழாம் திருமுறைப் பாடல்கள் இலக்கிய எழிலும், கற்பனை வளமும், பக்திக் கனிவும் மிக்கன. இறைவன் ஒருவனே, போற்றிப் புகழத் தக்கவன் என்பதனை,

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
 சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தைப்
 புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
 ஏத்தலம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
 யாதும் ஐயுறவு இல்லையே *(7564)*

என்று பாடுகிறார். குற்றம் செய்யினும் மன்னித்துச் சிவபெருமான் அருள்செய்வான் எனத் தாம்கொண்ட நம்பிக்கையை,

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
 நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்தி
 கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்
குற்றஞ் செய்யினும் குணம் எனக் கருதும்
 கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
 பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே *(7786)*

என்ற பாடலாலும் சுந்தரர் பதிவு செய்கிறார்.

அரிய தொடர்கள்

சைவப் பெருமக்கள் போற்றித் துதிக்கும் பல அரிய பாடல்களும், தொடர்களும் ஏழாந் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. ஒன்றிரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

நற்றவா உன்னை நான் மறக்கிலும்
 சொல்லும்நா நமச்சி வாயவே *(7712)*

வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம் *(7774)*

அன்னம் வைகும் வயற்பழனத்து அணி
ஆரு ரானை மறக்கலும் ஆமே *(7827)*

வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல் *(8016)*

விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன்
விரும்பி ஆட்பட்டேன் *(8189)*

மண்ணுலகில் பிறந்து நும்மை
வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல்
தொண்டனேன் இன்று கண்டு ஒழிந்தேன் *(8245)*

இவ்வாறான அற்புதத் தொடர்களுடன் ஏழாம் திருமுறை நிறைவடைகிறது.

மாணிக்கவாசகர்

பன்னிரு திருமுறைகளுள் எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது மாணிக்கவாசகரின் திருவாசகம். இவரே இயற்றியதாகக் கருதப்படும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் எட்டாம் திருமுறையாகக் கொள்ளப்பட்டு வருகிறது. மாணிக்கவாசகர் பாண்டியநாட்டில் திருவாதவூரில் ஆமாத்திய பிராமண குலத்தில், சம்புதபாதசிரயர், சிவஞானவதி என்னும் பெற்றோர்களுக்கு அருமகவாக அவதரித்தார். இயற்பெயர் திருவாதவூரர். பாண்டியன் அவையில் தென்னவன் பிரமராயன் என்ற பட்டம் வழங்கப் பெற்று முதல் அமைச்சராக விளங்கினார். மன்னன் அளித்த பொருளை இவர் குதிரை வாங்கப் பயன்கொள்ளாது, திருப்பெருந்துறை (ஆவுடையார்கோயில்)

திருக்கோயில் திருப்பணிக்குச் செலவிட்டார். சிவபெருமான் குருவடிவம் காட்டி இவரைக் குருந்த மர நிழலில் ஆட்கொண்டான். அக்காலை இவர் பாடிய பனுவல்களே திருவாசகம். இறைவன் இவருக்கு மாணிக்கவாசகர் என்னும் திருநாமம் சூட்டினான். நரி பரியானது. வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இறைவன் பிரம்படி பட்டது, பௌத்தர்களோடு வாதிட்டது. தில்லைப் பொன்னம்பலத்தில் இறைவன் தாள் மலர்களில் கலந்தது என்பன இவரது வாழ்வியல் அற்புதங்களாகும். ஆனி மகநாளில் இவர் இறையடிகளில் கலந்தார். இவ்வுலகில் இவர் வாழ்ந்த காலம் 32 ஆண்டுகள் என்பர். இவர் காலம் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பிற்பட்டது என்பதே ஆய்வாளர் முடிவு. இவர் தேவார மூவருக்கும் முற்பட்டவர் என்றும் சிலர் கூறியுள்ளனர்.

திருவாசகம்

திருவாசகம் 51 பகுதிகளையும் 649 பாடல்களையும் கொண்டுள்ளது. திருவாசகத்தில் 38 சிவத்தலங்கள் பாடப்பெற்றுள்ளன. முதற்கண் சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் என்னும் நான்கு பெரும் பகுதிகள் அமைந்துள்ளன. அடுத்து வரும் திருச்சதகம் 100 பாடல்களைக் கொண்டுள்ளது. நீத்தல் விண்ணப்பம் 50 பாடல்கள் கொண்டது. திருவெம்பாவையில் 20 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருவம்மானையும் 20 பாடல்களால் நடையிடுகிறது. திருப்பொற்சுண்ணம் முதல் திருவுந்தியார் வரை 6 பகுதிகளும் அவ்வாறே 20 பாடல்களால் நடையிடுகின்றன. எஞ்சிய பகுதிகள் பெரும்பாலும் 10 பாடல்கள் கொண்ட பதிகங்களாகவே அமைந்துள்ளன. திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்தும் உருகார் என்பது இதன் சிறப்புரைக்கும் பழமொழி.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

(பழம் பாடல்)

என்ற வெண்பா, திருவாசகச் சிறப்புரைத்து வந்துள்ளது. மேலை நாட்டுக் கிறித்தவர்களும் இதன் சிறப்பில் நெஞ்சைப் பறிகொடுத்துள்ளனர். இதனை ஒரு அனுபவ நூல் என்பர். திருவாசகச் சிறப்பினைப் பின்வந்த சிவப்பிரகாச சுவாமிகள், வடலூர் இராமலிங்க வள்ளலார் முதலியோர் பெரிதும் போற்றிச் சிறப்பித்துள்ளனர். திருவாசகம் ஒரு சிறந்த பாராயண நூலாகத் திகழ்ந்து வருகிறது.

அனுபவ வெளிப்பாடுகள்

திருவாசகத்தில், பக்தி அனுபவ வெளிப்பாட்டில் வந்த பல அரிய தொடர்கள் இடம் பெற்றுள்ளன.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! (சிவபுராணம்)

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி (சிவ-18)

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் (சிவ-26-31)

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவன் அடிக்கீழ் (சிவ-93-94)

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
(திருவண்டப்பகுதி 1-4)

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
(போற்றித்திருவகவல் 164-65)

இவையும், இவைபோல்வனவுமாகிய அரிய தொடர்கள் பலவற்றைத் திருவாசகத்தில் காணலாம்.

அருட்பனுவல்கள்

திருவாசகத்தில் ஞான அனுபவ வெளிப்பாடாக அமைந்த, உள்ளுருக்கும் அருட்பனுவல்கள் பல உள்ளன. ஒன்றிரண்டைக் காணலாம்.

யானே பொய் என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே· தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந்து உறுமாறே (திருச்சதகம்-90)

என்ற பாடலில் தன்னிலை இரக்கம் நிறைந்துள்ளது.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்

போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால்நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்

(திருவெம்பாவை-20)

என்ற பாடலில், படைத்தல் முதலிய இறைவனின் ஐந்தொழில்களும் ஒருசேரப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாணிக்கவாசகரின் பக்தி வைராக்கியத்தை,

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே

என்ற அரிய பாடல் அளவிட்டுக் காட்டுகிறது.

திருச்சிற்றம்பலக் கோவையார்

எட்டாந் திருமுறையுள் இடம் பெற்றுள்ள திருச்சிற்றம்பலக் கோவையார், 400 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் நடையிடுகிறது. அகப்பொருள் துறைகள் பலவற்றையும், அவை நிகழும் முறையில் நிரல்படக் கோத்துச் செய்யப்படும், அகப்பொருள் நூல் வகையைச் சார்ந்தது கோவை என்பது. திருச்சிற்றம்பலக் கோவையாரே இவ்வகையில் முதல் நூல் என்பர். தில்லைக் கூத்தப் பெருமானைப் பாடல்தோறும், சார்த்து வகையில்

புகழ்ந்துரைக்கும் போக்கில் இந்நூல் நடையிடுகிறது. பேராசிரியர் என்பார் எழுதிய அரிய உரை ஒன்றும் இந்நூலுக்கு உள்ளது. தில்லைச் சிற்றம்பலவனின் அருளிப்பாடுகள் பலவும், மிக்க நயத்துடன் இந்நூலுள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அணியும் அமிழ்தும் ஆவியும் ஆயவன்
தில்லைச் சிந்தாமணி (திருக்கோவையார்-5)

உணர்ந்தார்க்கு உணர்வரியோன் தில்லைச்
சிற்றம்பலத்து ஒருத்தன் (திருக். 9)

பொருளாய் எனைப் புகுந்து ஆண்டு
புரந்தரன் மால் அயன்பால்
இருளாய் இருக்கும் ஒளி (திருக்.73)

அருந்தும் விடம் அணியாம் மணிகண்டன்
மற்று அண்டர்க்கு எல்லாம்
மருந்தும் அமிர்தமும் ஆகும் முன்னோன் (திருக்.272)

மூப்பான் இளையவன் முன்னவன் பின்னவன்
முப்புரங்கள்
வீப்பான் வியன்தில்லையான் அருளால்விரி
நீர் உலகம்
காப்பான் (திருக்.312)

நாய்வயின் உள்ள குணமும் இல்லேனை நல்
தொண்டு கொண்ட
தீவயின் மேனியன் (திருக். 343)

எனவரும் திருக்கோவையார் தொடர்கள் தில்லைச் சிற்றம்பலவன் கருணைக்கும், மாணிக்கவாசகரின் பக்தி வைராக்கியத்திற்கும் சான்று கூறி நிற்கின்றன.

இப்பகுதியில் அரிய தேவாரத் திருவாசகத் தொடர்களும், பெரிதும் போற்றப்படும் அருள் பனுவல்களில் சிலவும், எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் பதிப்புகள், உரைகள், இவை பற்றி எழுந்த ஆய்வுகள், மொழிபெயர்ப்புகள் முதலியன பற்றி எல்லாம் இங்கே விரித்துரைக்க இயலவில்லை. இவற்றை எல்லாம் அறிந்துகொள்ள விரும்புவோர், தேவாரத் திருவாசகங்கள் குறித்து வெளிவந்துள்ள ஆய்வு நூல்களின் உதவியை நாடுவது நலம் பயக்கும். விரிவஞ்சிச் சுருங்கிய முறையிலேயே, இன்றியமையாத சில குறிப்புகள் மட்டுமே இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன.

திருமுறைகள் ஒன்பது முதல் பன்னிரண்டு வரை

எஞ்சிய திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்ற இருநூல்களின் தொகுப்பாகும். திருவிசைப்பாவை, திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈறாக ஒன்பது பேர் பாடியுள்ளனர். ஒரே பதிகமான திருப்பல்லாண்டு, சேந்தனார் என்பவரால் பாடப்பட்டது. பத்தாம் திருமுறையாகத் திருமந்திரம் தொகுக்கப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் திருமூலர் என்பவர். பதினொராம் திருமுறை பாடிய ஆசிரியர் பன்னிருவர். இந்நூலுள் திருவாலவாயுடையார் பாடிய திருமுகப்பாசுரம் முதல், நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருநாவுக்கரசர் திருஏகாதச மாலை உள்பட, நாற்பது நூல்கள் இடம் பெற்றுள்ளன. பன்னிரண்டாம் திருமுறை திருத்தொண்டர் புராணம். இதனைப் பெரிய புராணம் என்று கூறுதலே பெரிதும் வழக்கத்தில் உள்ளது. இதனைப் பாடியவர் சேக்கிழார்.

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறையாகக் கொள்ளப்படுகிறது. திருவிசைப்பாவை திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர்,

பூந்துருத்தி-நம்பி, காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதின்மர் பாடியுள்ளனர். திருப்பல்லாண்டு சேந்தனாரால் பாடப்பட்டுள்ளது. ஒன்பதாம் திருமுறையுள், திருவிசைப்பா 28 பதிகங்களையும், திருப்பல்லாண்டு ஒரு பதிகத்தையும் கொண்டுள்ளது. இந்நூலுள் 14 சிவத்தலங்கள் பாடப்பட்டுள்ளன. 6 பண்களில் இவ்விசைப் பாடல்கள் அமைந்துள்ளன. தேவாரப் பதிகங்களுள் காணப்படாத சாளரபாணி என்ற பண் திருவிசைப்பாவில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருநூல்களும் 301 பாடல்களைக் கொண்டுள்ளன. தேவாரப் பாடல் பெறாத, கங்கை கொண்ட சோழபுரம், திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம், திருவிடைக்கழி ஆகிய எட்டுத் தலங்கள் திருவிசைப்பா ஆசிரியர்களால் பாடப்பெற்றுள்ளன.

திருவிசைப்பா

திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவர் பாடிய பதிகங்கள் நான்கு. இவை அனைத்தும் கோயில் என்று சிறப்பித்துக் கூறப்படும் தில்லைக்கு உரியன. சேந்தனார் பாடிய பதிகங்கள் மூன்று. திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய மூன்று தலத்திற்கு இவரது திருவிசைப்பா அமைந்துள்ளது. கருவூர்த்தேவர் பாடிய பதிகங்கள் பத்து, இவை கோயில், திருக்களந்தை, திருக்கீழ்க் கோட்டூர், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழபுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை, திருவிடைமருதூர் முதலிய பத்துத் தலங்களுக்கும், தலத்துக்கு ஒன்றாக அமைந்துள்ளன. பூந்துருத்தி நம்பி காட நம்பி திருவாரூர், கோயில் எனும் இருதலங்களையும் ஒவ்வோர் பதிகத்தால் பாடிச் சிறப்பித்துள்ளார். கண்டராதித்தரும், வேணாட்டடிகளும் கோயில்

மீது தலா ஒவ்வோர் பதிகம் பாடியுள்ளனர். திருவாலியமுதனார் கோயில் குறித்து நான்கு பதிகங்கள் பாடித் தந்துள்ளார். கோயில் குறித்துப் புருடோத்தமநம்பி இரண்டு பதிகங்களும், சேதிராயர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். சேந்தனார் கோயில் என்னும் தில்லைக்கு ஒரே பதிகமாகத் திருப்பல்லாண்டு பாடியுள்ளார்.

திருவிசைப்பாவில் முருகன்

ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பாப் பதிகங்கள் பலவும், தேவாரப் பனுவல்களைப் போலவே சிவன் பெருமை பேசி நின்றன. இத்திருமுறையுள் புதுவரவாய், சேந்தனார் பாடிய திருவிடைக்கழிப் பதிகம், சிவகுமாரனாகிய முருகன் மீது பாடப்பட்டுள்ளது. பஞ்சமம் என்ற பண்ணில் அமைந்த இப்பதிகத்தில் பதினொரு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்பதாம் திருமுறையில் இப்பதிகம் இணைக்கப்பெற்றமை, பின் வந்த பதினொராம் திருமுறையுள், விநாயகர் மற்றும் சிவன் அடியார்கள் மீது பாடப்பட்ட பாடல்களும், பனுவல்களும் இணைக்கப்படுவதற்கு வழிகோலியதாகக் கொள்ளலாம். செவிலி கூற்றாக, அந்தாதித் தொடை பெற்று அமைந்துள்ள இப்பதிகத்தில், முருகன் சிறப்புகள் பலவாறு விரித்துரைக்கப்பட்டுள்ளன.

மாலுலா மனம்தந்து என்கையில் சங்கம்
வெளவினான் மலைமகள் மதலை
சேல்உலாம் தேவர் குலம் முழுது ஆளும்
குமரவேள் வள்ளி தன் மணாளன்
சேல்உலாம் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழல்கீழ் நின்ற
வேல்உலாம் தடக்கை வேந்தன் என்சேந்தன்
என்னும் என் மெல்லியல் இவளே.

முருகன் மீது காதல் கொண்ட இளமகள் ஒருத்தியின், காதல் மீதூறிய கலக்க மொழிகளைச் செவிலி எடுத்துரைப்பதாக இப்பதிகம் அமைந்துள்ளது.

திருப்பல்லாண்டு

ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள திருப்பல்லாண்டு 13 பாடல்களைக் கொண்டது. பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்தும் வாழ்த்தினைப் பல்லாண்டு என்று, முதற்குறிப்பால் வழங்கியுள்ளனர். வைணவத்தில் பல்லாண்டு கூறும் பாடல்கள் உண்டு. அவற்றைப் பின்பற்றிச் சைவத்திலும் பல்லாண்டு பாடும் வழக்கம் வந்திருக்கக் கூடும். திருப்பல்லாண்டு உரையாசிரியர்,

"இறைவன் என்றும் உள்ளவன் ஆதலின், வாழ்த்துவார் வாழ்த்தும் வாழ்த்தினானாதல், வைவார் வையும் வைவினானாதல் அவனுக்கு வருவது ஒன்று இல்லையாயினும், வெகுளியுற்றார்க்கு அவ்வெகுளி காரணமாக, அவனை வைதல் இயல்பாதல் போல, அன்புற்றார்க்கும் அவ்வன்பு காரணமாக, அவனை வாழ்த்தலும் இயல்பாதலின், அடைக்கும் தாழ் இல்லாத அவ்வன்பின் செயல், அவர் மாட்டு இயல்பானே வெளிப்படுவதாம்."

என இப்பதிகம் தோற்றம் கொண்டதற்கான காரணத்தை ஒருவாறு ஆராய்ந்து உரைத்துள்ளார்.

பல்லாண்டு - அழகிய தொடர்கள்

பல்லாண்டுப் பாடல்கள் யாவும் நிறைவில், பல்லாண்டு கூறுதுமே என ஒரேமாதிரியாக அமைந்துள்ளன. தில்லை அம்பலவன் சிறப்புரைத்தலே அதிகமாகப் பதிகத்துள் நிறைந்துள்ளது. சிவன்,

பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தன்

என்றும்,

அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்

என்றும்

சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம்
பயில வல்லான்

என்றும்

பாதகத்துக்குப் பரிசு வைத்தான்

என்றும் வரும் அழகிய தொடர்கள் திருப்பல்லாண்டில் இடம் பெற்றுள்ளன.

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய் அடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்குஆட்
செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

என்ற அழகிய பாடலில், இறைவனாகிய சிவன், என்றும் நிலை பேறுடையவன் என்பது தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

திருமந்திரம்

திருமூலதேவ நாயனாரின் திருமந்திரமாலை, சைவத் திருமுறைகளுள் பத்தாவதாக இடம் பெற்றுள்ளது. தமிழ்மொழியில், பெருஞ்சிறப்புக்கு உரிய முதன்மையான நூல்களைத் தொகுத்து உரைக்கும் ஒரு பழம்பாடல் உள்ளது.

தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் கோவைத்
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்.

என்ற பாடலில் திருமந்திரமும் இணைக்கப்பெற்றிருப்பது, இதன் சிறப்பிற்குச் சான்று கூறி நிற்கிறது. சைவ ஆகமங்களின் சாரமாகத் திகழும் இந்நூலை, தமிழில் எழுந்த, சைவ சமயஞ்சார்ந்த, ஒரு

கலைக்களஞ்சியம் என்றே கூறலாம். காரணாகமம், காமிகம், வீரம், சித்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களின் சாரமாக இந்நூலில் ஒன்பது தந்திரங்கள் அமைந்துள்ளன. தந்திரம் என்பது நூலின் உள்பிரிவினைக் குறிப்பது.

தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே

என்ற சிறப்புப் பாயிரப் பகுதி இதனை உறுதி செய்கிறது. இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டுள்ளது.

விநாயகர் காப்பு

திருமந்திரத்தின், முதல் தந்திரம் முதல் ஒன்பதாவது தந்திரம் வரையிலான ஒவ்வோர் தந்திரமும், ஒவ்வோர் சமய உண்மையை நுட்பமுற எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. முன்னதாக அமைந்துள்ள கடவுள் வாழ்த்தில், வேத ஆகமங்களின் சிறப்பு,திருமூலர் வரலாறு முதலியன விரித்துரைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் விநாயகர் காப்பு ஒன்றுடன் தொடங்குகிறது.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேனே

என்பது திருமந்திரத்தின் காப்புச் செய்யுள். கடவுள் வாழ்த்துப் பகுதியில், சிவபெருமானின் பெருமை பேசும் 50 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை

சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே

சிவனின் மேலான கருணைத் திறத்தைச் சுட்டிக்காட்டி, எனினும் மக்கள், அவன் கருணையை முழுவதும் உணர்ந்து, வழிபட்டு வாழ்வு பெற்றிலர் என்ற திருமூலரின் மனவருத்தம் இப்பாடலில் பதிவாகியுள்ளது.

வேத ஆகமச் சிறப்பு

இந்தியத் தத்துவச் சிந்தனைகளின் மூலநூல்களாகவும், முதல் நூல்களாகவும் திகழ்வன வேதங்கள். இவற்றின் சிறப்புரைக்கும் பகுதி ஒன்று பாயிரத்துள் அமைந்துள்ளது.

வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே

என்பதில், அறங்களின் சாரமாக வேதங்கள் அமைந்துள்ளன என்பதை ஆசிரியர் இனங்காட்டுகின்றார். ஆகமங்களின் சிறப்பும் திருமந்திரத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 10 பாடல்களில் ஆகமம் பற்றிய பல செய்திகள் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன. ஆகமம் இறைவன் அருளால் பிறந்தது என்பதும், அவற்றின் தொகை 28 என்பதும் ஒரு பாடலில் குறிக்கப்பட்டுள்ளது.

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே

ஆகமங்களில் தமிழில் எழுந்த ஆகமங்களும் உண்டு என்பதை, 'ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே' என்ற தொடரால் அறிய முடிகிறது.

திருமூலர் வரலாறு

திருமூலர் வரலாறு குறித்தும் பாயிரப் பகுதியில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருமூலர், பெரியபுராண நாயன்மார் வரிசையிலும் இடம் பெற்றுள்ளார். இவர் வரலாற்றைப் பெரியபுராணமும் எடுத்துரைக்கிறது. வடநாட்டிலிருந்து தென்னாடு வந்த முனிவர் ஒருவர், ஒரு மாடு மேய்க்கும் இளைஞன் உடலில், கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, மூலன் எனப் பெயர் பெற்றார். திருவாவடுதுறையில் யோகத்தில் பலகாலம் இருந்து, இத்திருமந்திரமாலையை உலகுக்கு வழங்கினார்.

சீருடையான் சிவன் ஆவடு தண்துறை
சீருடையாள் பதம் சேர்ந்திருந் தேனே

எனவும்,

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்

எனவும் வரும் பகுதிகள் வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன. இப்பகுதியில் திருமூலரே,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

என்று குறிப்பிட்டுள்ளது கருதத்தக்கது. தமிழில் ஆகம சாரங்களைத் தொகுத்தளிப்பதே அவர் வருகையின் நோக்கம் என்பது உறுதியாகிறது.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்

என்ற அரிய தொடர் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தந்திரங்கள்- உள்ளீட்டுச் செய்திகள்

திருமந்திரத்தின் முதல் தந்திரத்துள், உபதேசம், யாக்கை நிலையாமை, கொல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை முதலிய நல்லறங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் தந்திரத்துள், சிவனின் எட்டுவகை வீரச்செயல்கள், ஐந்தொழில்கள், சிவனையும் குருவையும் நிந்திப்பதால் வரும் துன்பங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் தந்திரத்தில், அரிய யோகக் கலைக் கூறுகளும், அட்டமாசித்திகளும் விளக்கப்பட்டுள்ளன.

நான்காம் தந்திரத்துள், மந்திரத்தன்மை மிக்க திரு அம்பலச் சக்கரம், நவகுண்டம், வயிரவி மந்திரம் முதலியன விளக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் தந்திரத்துள், இறைவனை சென்று அடைதற்கு உரிய நால் நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவும் சத்திநிபாதமும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

ஆறாம் தந்திரத்துள், குருதரிசனப் பயன், திருநீற்றின் சிறப்பு, துறவு முதலிய நிலை குறித்து விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

ஏழாம் தந்திரம் ஆறு ஆதாரங்கள், சிவபூசை, குரு பூசை, சமாதி அமைத்து வழிபடும் முறை, உயிர் இலக்கணம் என்பன குறித்த செய்திகளின் தொகுப்பாக அமைந்துள்ளது.

எட்டாம் தந்திரம், பத்தி நிலை, முத்தி நிலைகள் குறித்து விளக்கங்கள் தருகிறது.

ஒன்பதாம் தந்திரத்தில், எளிதில் பொருள் விளங்கிக்கொள்ள இயலாத, நுண்பொருள்களை விளக்கும் சூனிய சம்பாஷணை விளக்கப்பட்டுள்ளது.

திருமந்திரம் - அரிய தொடர்கள்

திருமந்திரம் சைவ சமயத்திற்கு மட்டும் உரிய ஒரு சமய நூலாக அமையாது, உலகத்தவர்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்ம ஈடேற்றத்தையும், மருத்துவக் கூறுகளையும் எடுத்துரைக்கும் பொது நூலாக அமைந்துள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அரிய பாடல் பகுதிகள், திருமந்திரத்தின் சிறப்புக்குக் கட்டியம் கூறி நிற்பன.

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
ஆர்க்கும் இடுமின்! அவர் இவர் என்னன்மின்

ஈசன் அடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்

பெரியார் உடன்கூடல் பேரின்ப மாமே
உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே
குருவே சிவம் எனக் கூறினன் நந்தி
மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்

இவை போன்ற நூற்றுக்கணக்கான அரிய தொடர்கள் திருமந்திரத்துள் இடம் பெற்றுள்ளன.

திருமந்திரத்தில் அன்பு

திருமந்திரம் ஆகமத்தின் சாரமாக அமைந்திருந்தாலும், அனைவரும் உணரும் எளிமையும், இனிமையும் உடைய பாடல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அன்பே சிவம் என்ற தொடரை, பலரும் அறிவர். மனிதர்கள், ஏனைய மனிதர்கள்பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய, கடவுள் சார்புடைய

மதங்களும், கடவுள் மறுப்புச் சமயங்களும்கூட அன்பினைப் பெரிதும் போற்றியே உரைக்கின்றன. திருவள்ளுவர் முதலிய அறநூலாசிரியர்களும் அன்பின் சிறப்பையும், இன்றியமையாமையையும் எடுத்துரைத்துள்ளனர். சைவர்களின் இறைவன் சிவன். அவன் யார்? அவன் இயல்பு எத்தகையது என்ற வினாக்களுக்குத் திருமூலர் தரும் விடை ஆழ்ந்த பொருட் சிறப்புடையது. அன்புதான் எங்கள் சிவன். சிவன் வேறு அன்பு வேறு என்பார் அறியாமைமிக்கவர்கள். இரண்டும் ஒன்றே என்று உணரும் உணர்வில் இறைமைப்பேறு வாய்க்கும்.

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

என்பது அன்பின் சிறப்புரைக்கும் அரிய பாடல்.

மரமும் யானையும்

உலகம் வேறு, இறைவன் வேறானவன் என்று கருதும் கருத்து, சமய நம்பிக்கை உடையவர்களிடமும் உள்ளது. குழந்தை, மரத்தால் செய்யப்பட்ட யானைப் பொம்மையைக் கண்டு யானை யானை என்று அஞ்சித் தாயிடம் தஞ்சம் அடைகிறது. தாயோ, இது யானை இல்லை, மரம் என்று கூறிக் குழந்தையின் அச்சம் நீக்குகிறாள். என்றால், குழந்தை கண்டது யானையா மரமா என்ற ஐயம் எழுகிறது. யானையாகக் கண்ட குழந்தைக்கு மரம் என்பது புலப்படவில்லை. மரம் என்ற தெளிவு பெற்ற தாய்க்கு யானை புலப்படவில்லை. இவற்றைப் போல் உலகத்தையும், உலகப் பொருள்களையும் இறைவனாகவே காண்பார்க்கு அவை புலப்படுவதில்லை. உலகமாகவே காண்பார்க்கு இறைமை புலனாவதில்லை. இவ்வழகிய உண்மையைத் திருமந்திரம் மிக அழகிய கவிதை ஒன்றில் வைத்து விளக்குகிறது.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதம்

எளிய இனிய எடுத்துக்காட்டுக்களால் அமைந்துள்ள இத்தகு. கவிதைகள் திருமந்திரத்தில் நிறைவாக இடம் பெற்றுள்ளன.

மனித நேயப் பதிவு

சைவம், மனித நேயத்தை வற்புறுத்தும் ஓர் அன்பு நெறி. சிற்றுயிர்கள் பாலும் கருணை காட்ட வேண்டும் என்று அது வற்புறுத்துகின்றது. உலகத்தையும், நுகர் பொருள்களையும், இறைவன், உயிர்கள் பெற்று இன்புறுவதற்கே படைத்தளித்தான். உயிர்களிடமிருந்து இறைவன் அன்பு ஒன்றைத் தவிர, வேறு எதையும் பெற விரும்புவதில்லை. ஆனால் சமயவாதிகள் பலரும், சடங்கு நெறியில் பற்றுக்கொண்டு நின்று, மனிதனின் பசிக்கு உணவிட விரும்பாது, இறைவனுக்குப் படையலிட்டு மகிழ்கின்றனர். இறைவன் மனிதன் அளிக்கும் உணவையும், படையலையும் உண்டு மகிழ்கின்றானா என்றால் இல்லை. இறைவன் கவனத்திலும், கணக்கிலும் அவனுக்குப் படைக்கப்படும் படையல் இடம்பெறுவதில்லை. அவன் கணக்கில் இடம் பெற விரும்பினால், பசித்திடுவோருக்கு உணவு அளியுங்கள். அதுவே, அவனைச் சென்றடையும் என்று அரிய பெரு நெறி காட்டுகிறார் திருமூலர்.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவர்க்கு அது ஆமே

நடமாடக் கோயில் நம்பர் என்பது, மனித உயிர்களைக் குறித்து வந்தது.

வாழ்வியல் உண்மைகள்

இறைவனை சென்று அடைதற்கு உரிய எளிய வழி, குருவை வழிபடுதலால் கிட்டும். பிறன்மனை நோக்காத பேராண்மையை ஆடவர் பெறல் வேண்டும். காக்கைத் தன் இனத்தைக் கூவி அழைத்துக் கலந்து உண்பது போல், சக மனிதர்களோடு கலந்து உண்ணல் வேண்டத்தக்கது. கற்றவர்களுக்கு மட்டுமே பேரின்பம் வாய்க்கும். கேள்விச் செல்வமே மனிதர்களுக்கு உற்ற துணை. கழிகாமமும் கள்ளுண்டலும் கீழோர் என்று அடையாளம் காட்டும். விரும்பியவாறு ஆண் அல்லது பெண் குழந்தை பெற்றுக்கொள்வதற்குரிய மூச்சுப்பயிற்சி முறை, குழந்தைகள் குருடாய், ஊமையாய், முடமாய்ப் பிறப்பதற்குரிய காரண விளக்கம். திருக்கோயில் வழிபாட்டின் இன்றியமையாமை முதலாய பல அரிய செய்திகளை வழங்கும் களஞ்சியமாகத் திருமந்திரம் அமைந்துள்ளது.

பதினோராம் திருமுறை

பதினொராம் திருமுறை, பன்னிரு ஆசிரியர்களால் பாடப்பெற்ற நாற்பது சிற்றிலக்கியங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. இதில், தேவார ஆசிரியர்கள் காலத்துக்கு முற்பட்ட நூல்களும் இணைக்கப்பட்டுள்ளன. ஒன்பதாம் திருமுறையில், முருகனைப் பற்றிய பதிகம் இணைக்கப்பட்டிருப்பதைப் போல், விநாயகர் வழிபாட்டு நூல்கள் சில, இத்திருமுறையில் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், சைவ அடியவர்களாகிய கண்ணப்பர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோர் மீது பாடப்பட்ட பதிகங்களும், சிற்றிலக்கியங்களும், இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. திருமுறைகள் பதினொன்றாகத் தொகுக்கப்பட்ட பின்னர், அடியார் சிறப்புரைக்கும் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகத் திருமுறைகளுள் இணைக்கப்படுவதற்கு, அடியவர்

இலக்கியங்களின் இணைப்பே வாயிலாக அமைந்திருக்க வேண்டும்.

திருமுகப் பாசுரம்

பதினொராம் திருமுறையில், முதலாவதாக இடம் பெற்றிருப்பது, மதிமலி புரிசை மாடக் கூடல் என்று தொடங்கும் ஒரு சீட்டுக்கவி பாடலாகும். இதனைத் திருமுகப் பாசுரம் என்று கூறுதல் வழக்கு. மதுரையில் வாழ்ந்த, பாணபத்திரன் என்பவனை ஆதரிக்குமாறு சிவபெருமான், சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிக்கொடுத்த பரிந்துரைக் கடிதமாகவே இது அமைந்துள்ளது. இதனைப் இப்பாடல் நிறைவில் இடம் பெற்றுள்ள,

பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன், தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

என்னும் நான்கு வரிகள் உறுதி செய்கின்றன. திருவாலவாயுடையார், தம்மைப் பற்றிக் கூறிக் கொள்ளும் அறிமுகப் பகுதி அழகானது.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான்

என்பது அவ்வறிமுகப் பகுதி. இவ்வரலாற்று உண்மையைச் சேக்கிழாரும் தம் பெரியபுராணத்துள் உறுதி செய்கிறார்.

அதிர்கழல் உதியர் வேந்தர்க்கு
  அருள்செய்த பெருமை யாலே
எதிரில் செல்வத்துக்கு ஏற்ற
  இருநிதி கொடுக்க என்று

மதிமலி புரிசை என்னும்
வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத்
திருமுகம் கொடுத்தார் காண.

காரைக்கால் அம்மையார்

பதினொராம் திருமுறையுள், இரண்டாவதாக இடம்பெற்றுள்ள பனுவல்கள் காரைக்கால் அம்மையார் அருளியன. இவரது நான்கு பனுவல்கள் இத்தொகுப்பில் உள்ளன. 1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், 2. மூத்த திருப்பதிகம், 3. திருவிரட்டை மணிமாலை, 4. அற்புதத் திருவந்தாதி என்பன அவை. அம்மையாரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம் திருத்தொண்டத் தொகையுள், பேயார் என்று குறித்துள்ளார். இவர் அருள் வரலாறு பெரியபுராணத்துள் விரித்துரைக்கப்பட்டுள்ளது. சிவபெருமானால், அம்மையே என்று அழைக்கப்பெற்ற பெருமைமிக்கவர். யாது வேண்டும் என்று சிவன் வினவியபோது, அம்மையார் உரைத்த மறுமொழிகள் பெரிதும் சிறப்புடையன.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது
அடியின்கீழ் இருக்க என்றார்

திருஞானசம்பந்தர் அம்மையார் வதிந்த மண்ணைக் காலால் மிதிக்கவும் அஞ்சியதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

மூத்த திருப்பதிகங்கள்

காரைக்கால் அம்மையார் பனுவல்களில், வடதிருஆலங்காட்டு இறைவன் மேல் பாடப்பெற்ற கொங்கை திரங்கி எனத் தொடங்கும் நட்டபாடைப் பண் அமைந்த பதிகமும், எட்டி இலவம் எனத் தொடங்கும் இந்தளப் பண் அமைந்த பதிகமும் மூத்த திருப்பதிகங்கள் எனப் போற்றப்படுகின்னறன. சிவனைப் பத்துப் பாடல்கள் கொண்ட தொகுதியால் தேவார ஆசிரியர்கள் மூவரும் பாடினர். இவற்றைத் தேவாரப் பதிகங்கள் என்பர். இவற்றுக்குக் காலத்தால் முற்பட்டன காரைக்கால் அம்மையார் பதிகங்கள். எனவே, இவரது பாடல் தொகுதியை மூத்த திருப்பதிகங்கள் என்று குறித்துள்ளனர். சமயத்துறையில் பண் ஒன்றிய பாடல்களாகத் தோன்றியன இப்பதிகங்களேயாகும். கொங்கை திரங்கி என்று தொடங்கும் அம்மையாரின் பதிகத்தின் ஒன்பதாகவது பாடலில், சப்தஸ்வரங்கள் எனக் கூறப்படும் ஏழு ஓசைகளுக்கும் தமிழில் பெயர் சூட்டப்பட்டுள்ளது. துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி ஓசை பண் கழுமப் பாடி என்பது அப்பாடல் பகுதி.

மணிமாலை - அந்தாதி

திரு இரட்டை மணிமாலை, கட்டளைக் கலித்துறையும் வெண்பாவும் அடுத்தடுத்து அமைய 20 செய்யுள்களால் அந்தாதித் தொடை அமையப் பாடப்படுவது. அம்மையாரின் திருவிரட்டை மணிமாலை, இவ்வகையில் அமைந்த முதல் நூலாகும். இதனை, ஆய்ந்த சீர் இரட்டை மாலை அந்தாதி என்று சேக்கிழார் குறிக்கிறார். கட்டளைக் கலித்துறை என்ற புதிய யாப்பும் இந்நூலிலேயே முதன் முதல் கையாளப்பட்டுள்ளது. அம்மையார், பேய் வடிவம் வேண்டிப் பெற்ற காலைப் பாடிய பனுவல் தொகுதியே, அற்புதத் திருவந்தாதி எனப்படுகிறது. இந்நூல் வெண்பா யாப்பில் அந்தாதித் தொடை அமைய 101 பாடல்களால் பாடப்பட்டுள்ளது.

பக்திக் கனிவும், சிவனின் அளப்பரும் கருணையும் இந்நூலுள் பெரிதும் பேசப்பட்டுள்ளன. அம்மையாரின் பக்திச் சிறப்பை,

இடர்களையா ரேனும் எமக்குஇரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பு அறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பு அறாது என்நெஞ்சு அவர்க்கு.

என்ற அரிய பாடல் எடுத்துக்காட்டுகின்றது. அம்மையாரின் வாழ்வும் வாக்கும் பின்வந்த நூலாசிரியர்களால் பலபடப் பாராட்டப்பட்டுள்ளன.

ஐயடிகள் காடவர் கோன் என்பவரால் பாடப்பபெற்ற சிறுநூல், க்ஷேத்திரத் திருவெண்பா என்பது. 24 வெண்பாக்களைக் கொண்டுள்ள இந்நூல், சிவத்தலம் ஒவ்வொன்றின் சிறப்பு உரைத்து நடையிடுகிறது. பலபாடல்கள் நிலையாமைக் குறிப்பு அமையப் பாடப்பட்டுள்ளன.

தொட்டுத் தடவித்துடிப் பொன்றும் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக்- கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழை மடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை

திருச்சிராப்பள்ளியை அடுத்த, தேவாரப்பாடல் பெற்ற திருநெடுங்களம் குறித்து இப்பாடல் எழுந்துள்ளது.

சேரமான் பெருமாள் நாயனார்

பெரியபுராண அடியவர்களில் ஒருவரும், சேரமன்னரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நண்பருமான, சேரமான் பெருமாள் பாடிய மூன்று பனுவல்கள் அடுத்துப் பதினொராம் திருமுறையுள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை, 1. பொன் வண்ணத்து அந்தாதி, 2. திருவாரூர் மும்மணிக்கோவை 3. திருக்கயிலாய ஞான உலா

என்பன. இவற்றுள் பொன்வண்ணத்து அந்தாதி தில்லையில் பாடப்பெற்றது. கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தது. 100 பாடல்களைக் கொண்டது. இந்நூலின் முதற்பாடல் பொன்வண்ணம் என்று தொடங்குவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த பாடல்கள் அடுத்தடுத்துவர, 30 பாடல்களால் திருவாரூர் இறைவன் மீது பாடப்பட்ட முதல் நூல், திருவாரூர் மும்மணிக்கோவை என்பது. தமிழில் எழுந்த முதல் உலா இலக்கியம், திருக்கயிலாய ஞான உலா என்பது. அதுபற்றி இந்நூல் ஆதி உலா என்று போற்றப்பட்டது. இந்நூல் கயிலையில் சிவன் முன்பு அரங்கேற்றப்பட்டதாகச் சேக்கிழார் குறித்துள்ளார். இந்நூலில் திருக்குறளும் குறள் கருத்துக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு என்னும் சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள்

என்ற பகுதி நோக்கத்தக்கது.

நக்கீர தேவநாயனார்

நக்கீர தேவநாயனார் என்பவர் பாடிய 9 சிறு நூல்கள் அடுத்து இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. 1. கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, 2. திரு ஈங்கோய் மலை எழுபது, 3. திருவெழுகூற்றிருக்கை, 4. பெருந்தேவபாணி , 5. கோபப் பிரசாதம், 6. காரெட்டு, 7. போற்றித் திருக்கலிவெண்பா, 8. திருமுருகாற்றுப்படை, 9. திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்பன அவை. இவரைச் சங்க கால நக்கீரர் என்றும், பின்வந்த வேறு ஒருவர் என்றும் ஆராய்ச்சியாளர் மாறுபட்டு உரைக்கின்றனர். சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படை இத்தொகுதியுள் இடம்பெற்றுள்ளது.

இந்நூல் பற்றிய செய்திகள் முன்னரே உரைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் திருக்கண்ணப்பதேவர் திருமறம் 158 அடிகளை உடையது.

> நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப
> அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப

என்ற அழகிய வரலாற்று வரிகள், இந்நூலுள்ளும் இடம் பெற்றுள்ளன. ஏனைய நூல்கள் சிவன் பெருமை பேசும் சிற்றிலக்கிய வகையில் அமைந்தன. அடுத்துக் கல்லாடர் என்பவரால் பாடப்பெற்ற 38 வரிகளை உடைய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற அதே பெயரை உடைய் சிற்றிலக்கியம் ஒன்றும் இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ளது.

மூத்த நாயனார்

கபிலதேவர் என்பவர் பாடிய, 1. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, 2. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, 3. சிவபெருமான் திருவந்தாதி என்ற மூன்று நூல்கள், பதினொராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. திருமுறைகளுள் இடம் பெற்றுள்ள விநாயகர் குறித்த முதற் சிற்றிலக்கியம், மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை.

> ***திருஆக்கும் செய்கருமம் கை கூட்டும் செஞ்சொல்***
> ***பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்***
> ***ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்***
> ***காதலால் கூப்புவர்தம் கை.***

என்ற விநாயகர் வணக்கப்பாடல், சைவப் பெருமக்களுக்கு நன்கு அறிமுகமான ஒன்று. இவ்வாறே பரணர் என்பவரால் 101 பாடல்களில் பாடப்பெற்ற சிவபெருமான் திருவந்தாதி என்ற நூலும், இத்தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்து இளம் பெருமானடிகள் பாடிய சிவபெருமான்

திருமும்மணிக்கோவை என்ற நூலும், அதிராவடிகள் பாடிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையும் இத்தொகுப்பில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன. பிள்ளையார் என்ற சொல் ஒருகாலத்தில் முருகனைக் குறித்து வழங்கப்பட்டது. எனவே, விநாயகர், மூத்த பிள்ளையார் என்று அழைக்கப்பட்டுள்ளார் என்று அறிய முடிகிறது.

பட்டினத்தடிகள்

அடுத்து, பட்டினத்தடிகள் பாடிய 5 நூல்கள் இத்திருமுறையுள் இணைக்கப்பட்டுள்ளன. அவை.1. கோயில் நான்மணிமாலை, 2.திருக்கழுமல மும்மணிக் கோவை, 3. திருவேகம்பமுடையார் திருவந்தாதி, 5.திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பன. இவற்றுள் கழுமலம் என்பது சீகாழித் தலத்தைக் குறிப்பது. உமையம்மை திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் அளித்தமையும், அவர் தோடுடைய செவியன் என்று தொடங்கித் தேவாரப் பாடல்கள் பாடிய திறத்தையும் இந்நூல் அழகுற எடுத்துரைக்கிறது. பட்டினத்தார் பாடியனவாகத் தனிப்பாடல்கள் சிலவும் உள்ளன. சித்தர் பாடல்கள் தொகுப்பிலும் பட்டினத்தார் பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. இவர் நூல்களில் இறைவன் அருளிப்பாடும், தமிழர் பண்பாடும் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

நம்பியாண்டார் நம்பிகள்

பதினொரு திருமுறைகளையும் தொகுத்து வழங்கிய நம்பியாண்டார் நம்பிகள் பாடிய 10 சிறு நூல்கள் இத்தொகுப்பின் நிறைவில் இடம் பெற்றுள்ளன. இவரது நூல்களுள் ஒன்று விநாயகர் மீதும், ஒன்று சிவன் மீதும், ஒன்று திருத்தொண்டத்தொகையின் விரிவாகவும், ஆறு நூல்கள் திருஞானசம்பந்தர் மீதும், நாற்பதாவது நூல் திருநாவுக்கரசர் மீதும் பாடப்பெற்றுள்ளன. கீழே தரப்பெற்றுள்ள பட்டியல், அவர் பாடிய

நூல்களின் பெயர்களை விளக்கும் நோக்கில் அமைகிறது.

1. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
2. கோயில் திருப்பண்ணியார் விருத்தம்
3. திருத்தொண்டர் திருவந்தாதி
4. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி
5. ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
6. ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை
7. ஆளுடையபிள்ளையார் திருவுலா மாலை
8. ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்
9. ஆளுடையபிள்ளையார் திருத்தொகை
10. திருநாவுக்கரசு நாயனார் திருஏகாதசமாலை

நம்பி - நூல்கள்

நம்பியாண்டார் நம்பிகள், திருநாரையூர் பொள்ளாப்பிள்ளையார் அருள்பெற்றவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுருக்கமாகத் தம் திருத்தொண்டத் தொகையுள் அடையாளம் காட்டிய சிவனடியார்கள் வரலாற்றை, ஓரளவு இனம் கண்டு, தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் விரித்துரைத்தவர். தேவார மூவர் மீதும் அளவற்ற அன்பும், பக்தியும் கொண்டவர். பெரியபுராண உருவாக்கத்திற்கு இவர் நூல்கள் பெருந்துணையாக நின்றன. விநாயகப்பெருமானை,

என்னை நினைந்து அடிமை கொண்டு என் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்

என இவர் போற்றுகின்றார். திருச்சண்பை விருத்தத்துள்,

ஆறு தேறும் சடையான் அருள்மேவே
வீறு தேறும் தமிழால் வழிகண்டவன்

எனவும், ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக் கோவையுள்,

என்றும் அடியவர் உள்ளத்து இருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்து
ஒன்றும் புலவர்கள் யாப்புக்கு உரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவசிகாமணிப் பொன்னடியே

எனவும் இவர் திருஞானசம்பந்தரைப் பெரிதும் போற்றி மகிழ்கிறவர். இவ்வாறான 40 பனுவல்களின் தொகுப்பாக பதினொராம் திருமுறை நிறைகிறது.

பன்னிரண்டாம் திருமுறை

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில், நிறைவாக அமைந்திருப்பது பெரியபுராணம். இதனைத் திருத்தொண்டர் புராணம் என்றும், திருத்தொண்டர் மாக்கதை என்றும் கூறுவர். இதன் ஆசிரியர் சேக்கிழார். சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு, பெரியபுராணம் ஒரு பெருங்காப்பியமாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு காண்டங்களையும், 13 சருக்கங்களையும், 4287 விருத்தப் பாக்களையும் இந்நூல் கொண்டுள்ளது. 63 தனியடியார்கள் வரலாறுகளும், 9 தொகையடியார்களது சிறப்புக்களும் இந்நூலுள் விரித்துரைக்கப்படுகின்றன. சமய,சமூக,பண்பாட்டு வளர்ச்சியில் இந்நூல் ஆற்றியிருக்கும் பெரும்பங்கு பெரிது.

நூலாசிரியர்-சேக்கிழார்

பெரியபுராண நூலாசிரியர் சேக்கிழார். தொண்டை நாட்டில் குன்றத்தூரில் பிறந்தவர். இவர் வேளாளர் குலத்தில், சேக்கிழார் குடியில் வந்தவர். இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்பது. இவர், அநபாயன், அபயன், திருநீற்றுச்சோழன் முதலிய

பட்டப்பெயர்களை உடைய, இரண்டாம் குலோத்துங்க சோழன் அவையில் முதல் அமைச்சராகத் திகழ்ந்தார். சோழன் இவருக்கு, உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தான். அக்காலத்தில் திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி என்ற இன்ப நூலில், சோழன் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான். மன்னனைச் சைவ நாட்டம் உடையவனாக மாற்றச் சிவன் அடியார் வரலாறுகளைச் சேக்கிழார் அவ்வப்போது எடுத்துரைத்து வந்தார். சோழன் அவற்றை விரும்பிக் கேட்டு, மகிழ்ந்து சைவ அடியவர்கள் வரலாற்றைத் தொகுத்து ஒரு காப்பியம் இயற்றித் தருமாறு சேக்கிழாரைக் கேட்டுக் கொண்டான்.

தொண்டர் சீர் பரவுவார்

சேக்கிழார், சோழமன்னனின் வேண்டுகோளை ஏற்றுத் தில்லைக்குச் சென்று நடராசப் பெருமானை வணங்கி நின்றார். தில்லை அம்பலவன், உலகெலாம் என்று சேக்கிழாருக்கு அடி எடுத்துக் கொடுத்தான்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

என்ற வாழ்த்தை முதலாக அமைத்துக்கொண்டு திருத்தொண்டர் புராணத்தை இயற்றினார். சோழன் முன்னிலையில் இந்நூல் தில்லையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. நிறைவில், சோழன் சேக்கிழாரையும், பெரியபுராணத்தையும் யானை மீது ஏற்றி, தானும் பின் இருந்து கவரி வீசி, நான்கு வீதிகளிலும் ஊர்வலமாக அழைத்துச் சென்று பெருமை சேர்த்தான். தொண்டர் சீர் பரவுவார் என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தான். சேக்கிழார் தில்லையிலேயே தவம் இருந்து, கூத்தப்பிரான் தாள் மலர்களில் கலந்தார். இவர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்பர்.

சேக்கிழார் புராணம்

சேக்கிழார் வரலாற்றையும், பெரியபுராணத் தோற்றத்தையும் விரித்துரைக்கும் செய்யுள் நூல் ஒன்று தமிழில் உள்ளது. இந்நூலுக்குச் சேக்கிழார் புராணம் என்று பெயர். இதனை, திருத்தொண்டர் புராண வரலாறு என்றும் கூறுவர். இதனைத் தில்லை உமாபதி சிவாசாரியார் என்பவர் இயற்றியதாகக் கூறுவர். இந்நூலுள் 103 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலில்,

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லை அவர் புராண கதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடி போற்றி

(சேக்கிழார் புராணம்-பாடல்.1)

என்ற பாடல், சேக்கிழார் வாழ்த்தாக அமைந்துள்ளது. சேக்கிழார் பெருமையையும், பெரியபுராணச் சிறப்புக்களையும் விரித்துரைக்கும் சில நூல்கள் பிற்காலத்தில் தோன்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று, சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்பது. இதன் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை . இவர் சேக்கிழாரைப்

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட
பாடிய கவி வலவ

என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்.

பெரிய புராணம்

தமிழில், பெருங்காப்பிய இலக்கணம் கூறும் சிறந்த நூல்கள் இல்லை. இருக்கும் ஒன்றிரண்டு நூல்களும், வட மொழிக்காப்பியப் போக்கைக் கருத்தில் கொண்டு

இயற்றப்பட்டுள்ளன. என்றாலும், பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் கொண்டதாகப் பெரியபுராணம் இயற்றப்பட்டுள்ளது. பெரியபுராணத்தின் முதல் நூல், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை என்பது முன்னரும் கூறப்பட்டது. எனவே, சிவனடியார் வரலாறுகளைத் தொகுத்துத் தந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையே காப்பியத் தலைவராகச் சேக்கிழார் கொண்டுள்ளார். காப்பியத்தின் முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்தும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறுகளை விரித்துரைத்து, இடையிடையே அவரால் போற்றி வணங்கப்பட்ட அடியவர்கள் வரலாறுகளையும் விளக்கி உரைத்து, மிக நுட்பமாக இப்பெருங்காப்பியத்தைச் சேக்கிழார் படைத்தளித்துள்ளார். காப்பியக் கதையைக் கயிலாயத்தில் தொடங்கி, மீண்டும் கயிலாயத்தில் கொண்டு போய் நிறைவிக்கும் அருமை, சேக்கிழாரின் காப்பியப் புனைவிற்குச் சான்று கூறி நிற்கிறது.

காப்பியப் பகுப்பு

பெரியபுராணம் காப்பிய இலக்கணங்களுக்கு ஏற்ப முதற்காண்டம், இரண்டாம் காண்டம் என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது. பெருங்காப்பியங்களின் உட்பிரிவு களுக்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. சேக்கிழார் சருக்கம் என்ற சொல்லைப் பயன் கொண்டுள்ளார். முதல் காண்டத்தில் 5 சருக்கங்களும், இரண்டாம் காண்டத்தில் 8 சருக்கங்களும் இடம் பெற்றுள்ளன. திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ள 11 பாடல்களின் தொடக்கமே சருக்கங்களுக்குப் பெயராகச் சூட்டப்பட்டுள்ளன. உதாரணமாகத் திருத்தொண்டத் தொகையின் முதற்பாடல், தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று தொடங்கியுள்ளதால், அப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியார் வரலாறுகளை விரித்துரைக்கும் பகுதிக்குத் தில்லைவாழ் அந்தணர் சருக்கம் என்றே ஆசிரியர் பெயர் சூட்டியுள்ளார். முதல் சருக்கமாகக் கயிலாயமலைச் சிறப்புரைக்கும், திருமலைச்

சருக்கத்தையும், இறுதியாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாயம் சென்றடைந்த செய்திகளைக் கூறும் வெள்ளானைச் சருக்கத்தையும் அமைத்துக்கொண்டு, திருத்தொண்டத்தொகைப் பாடல்களை முதன்மையாகக் கொண்ட 11 சருக்கங்களையும் இடையில் வைத்துச் சேக்கிழார் அற்புதமாகக் காப்பியக் கட்டமைப்பைச் செய்துள்ளார்.

யாப்பமைதி

சேக்கிழாரின் பெரியபுராணம் முழுவதும், அக்காலத்தில் பெருவழக்கில் இருந்த யாப்பு முறைகளையே பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. கீழ்வரும் பட்டியல் கொண்டு, பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள பல்வகை யாப்பு வகைகளையும், அந்தஅந்த யாப்பில் அமைந்துள்ள பாடல் தொகைகளையும் தெரிந்துகொள்ள முடியும்.

வ.எண்.	யாப்பு வகை	பாடல்தொகை
1.	அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	1805
2.	எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	75
3.	எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்	280
4.	தரவு கொச்சகக் கலிப்பா	1207
5.	கலி நிலைத்துறை	545
6.	கலி விருத்தம்	368
7.	வஞ்சி விருத்தம்	6
	கூடுதல் பாடல்கள்	4286

இதில் பெரியபுராணத்தின் நிறைவில் இணைக்கப்பட்டுள்ள வையம் நீடுக என்ற பாடல் சேர்க்கப்படவில்லை. மேற்கண்ட அட்டவணை சமயக்காப்பியம் பாடுவதற்கும், பக்திச் சுவையை நிலைநாட்டுவதற்கும் விருத்தப்பாக்களும், கலிப்பாக்களும் சிறந்த யாப்பு முறைகள் என்பதை அறிவிக்கிறது.

திருமலைச் சருக்கம்

பெரியபுராணத்தின் முதற்பகுதியாகிய திருமலைச் சருக்கம். 1. பாயிரம், 2. திருமலைச் சிறப்பு, 3. திருநாட்டுச் சிறப்பு, 4. திருநகரச் சிறப்பு, 5. திருக்கூட்டச் சிறப்பு, 6. தடுத்தாட்கொண்ட புராணம் என்ற ஆறு உட்பகுதிகளையும், 394 பாடல்களையும் கொண்டு நடையிடுகிறது. காப்புப் பகுதியில் முதல் இரண்டு பாடல்கள் தில்லைக் கூத்தனையும், எடுக்கும் மாக்கதை என்று தொடங்கும் மூன்றாவது பாடல் விநாயகனையும் வணங்குவதாக அமைந்துள்ளன. காப்புப் பகுதியில், அடியார் திருக்கூட்டம் விளக்கம் பெற ஒரு பாடலும், அவையடக்கப் பகுதியில் 5 பாடல்களும், நூல் பெயர் கூறும் பாடல் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

இங்கிதன் நாமம் கூறின்
இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள்
சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப்
புறஇருள் போக்குகின்ற
செங்கதிரவன் போலநீக்கும்
திருத்தொண்டர் புராணம் என்பாம்

(பெரியபுராணம்-10)

என்னும் பாடல் இந்நூல் பெயரைப் பதிவு செய்கிறது.

பெரியபுராணம் காப்பு

காப்புப் பகுதியில் விநாயகர் வாழ்த்தில், எடுக்கும் மாக்கதை என்ற ஒரு தொடர் வருகிறது. மா என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பெரிய என்பது பொருள். எனவே, மாக்கதை என்ற தொடருக்குப் பெருங்கதை என்று பொருள் கொண்டிருக்கலாம்.

முன்னரே, தமிழில் பெருங்கதை என்ற ஒரு நூல் இருப்பதால், இதனை வேறுபடுத்தி அறிவதற்குப் பெரிய புராணம் என்று இந்நூலை முன்னோர் அழைத்திருக்கலாம். அவையடக்கத்தில் அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் என்ற ஒரு தொடர் வருகிறது. பெருமையர் என்ற சொல் பெருமை மிக்கவர், பெரியார் என அழைக்கப்பட்டு, பெருமைமிக்க அடியார் வரலாறு என்ற பொருளில், பெரியபுராணம் என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். செயற்கரிய செயல் செய்தவர்களைத் திருவள்ளுவர், பெரியார் என்கிறார். நாயன்மார் வரலாற்றில் பலரும், செயற்கரிய செயல் செயதவரே ஆவர். சேக்கிழாரும் பல இடங்களில் அடியார் செயல்களைச் செயற்கரிய செயல் என்று குறிப்பிட்டுள்ளார். அதுபற்றியும் பெரியபுராணம் என்ற பெயர் அமைந்திருக்கலாம்.

திருமலைச் சிறப்பு

திருமலைச் சிறப்பில், கயிலாய மலையின் இயற்கை எழிலும், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருவோலக்கமும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. உபமன்யு முனிவர், சீடர்களுக்குச் சுந்தரர் வரலாறு உரைக்கும் போக்கில் காப்பியமும் இங்கேயே தொடங்கிவிடுகிறது. காப்பிய நாயகர் பெருமையை,

தம்பிரானைத் தன் உள்ளம் தழீ இயவன்
நம்பி யாரூரன் நாம் தொழும் தன்மையன் (29)

என்று உபமன்யு முனிவர் கூற்றாகச் சேக்கிழார் பதிவு செய்கிறார். ஒரு காதலால், தென்தமிழ்நாடு அடியவர் பெருமை அறிந்து மகிழும் பேறு பெற்றது என்பதனை,

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்
போதுவான் அவர்மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார் (35)

எனச் சேக்கிழார் காப்பிய நுட்பமும், நயமும் தோன்றக் குறித்துக் காட்டுகிறார்.

திருநகரச் சிறப்பு

பெருங்காப்பியங்களில், காப்பியத் தலைவன் பிறந்த நாட்டையும், நகரத்தையும் சிறப்பித்தல் மரபு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறந்த நாடு, திருமுனைப்பாடி நாடு. நகரம், திருநாவலூர். ஆனால் சேக்கிழார், அவற்றைப் புனைந்து பாடாது, சோழநாட்டையும், திருவாரூரையும் புனைந்து போற்றுகிறார். இதற்கான காரணம் தெளிவாகப் புலப்படவில்லை. தம்மை ஆதரித்துப் பெரியபுராணம் பாடச் செய்த சோழர்கள் பால் கொண்ட நன்றி உணர்ச்சியால் இவ்வாறு பாடியிருக்கலாம். அல்லது, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகையின் நோக்கமாக அமைந்த திருத்தொண்டத்தொகை பிறந்த ஊர், திருவாரூர் என்பதால் அதனையும், சோழநாட்டையும் சேக்கிழார் பாடியிருக்கலாம். இரண்டாவது காரணமே சேக்கிழாருக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும். நகரப் பெருமை கூறும் நகரச் சிறப்பு என்ற பகுதியில், மனுநீதிச்சோழன் வரலாற்றைச் சேக்கிழார் விரித்துப் பாடியுள்ளார். இதற்கான உண்மைக் காரணமும் தெரியவில்லை.

திருக்கூட்டச் சிறப்பு

முதற்சருக்கத்தில் இடம் பெற்றுள்ள திருக்கூட்டச் சிறப்பில், சைவ அடியார்களின் அளவற்ற பெருமைகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சைவ அடியார்கள், புறத்தூய்மையும், அகத் தூய்மையும் மிக்கவர்கள் என்பதை,

பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள் (141)

என்றும், அன்னார் இன்ப, துன்பங்களால் பாதிப்பு அடையாது, பொன் பொருள்களில் நாட்டம் இல்லாதவர்கள் என்பதனை,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் (143)

என்றும், அடியவர்தம் அகம் மற்றும் புறத்தூய்மைகளை,

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலது ஒன்றிலர்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ (144)

என்றும் சேக்கிழார் இனங்காட்டிப் பெருமை சேர்க்கிறார்.

தடுத்தாட்கொண்ட புராணம்

முதற்சருக்கத்தின் ஆறாவது பகுதி, தடுத்தாட்கொண்ட புராணம். பெரியபுராணத்தின் மிக உன்னதமான பகுதி இது என்று கூறலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதாரம் தொடங்கி, திருத்தொணடத்தொகை பாடப்படும் வரை, இப்பகுதி 203 பாடல்களில் நடையிடுகிறது. பெருங்காப்பியங்களில் இடம்பெற வேண்டிய பல பகுதிகள், இப்புராணப் பகுதியில் அற்புதமாக இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன. இயற்கை வருணனைகளும், அழகிய கற்பனைகளும் இங்கே இடம் பெற்றுள்ளன.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அவதாரம், திருவெண்ணெய்நல்லூர் அரசன் நரசிங்கமுனையரையன், சுந்தரரை அரண்மனையில் அன்பு பாராட்டி வளர்த்தமை, புத்தூர் சடங்கவி சிவாசாரியார் மகளை மணம் பேசியமை. திருமணத்தில் சிவபெருமான் முதிய வேதியராய் எழுந்தருளி ஓலை காட்டித் திருமணத்தைத் தடுத்துச் சுந்தரரை ஆட்கொண்டமை. திருவெண்ணெய்நல்லூர்ச் சிவாலயமாகிய திருவருட்துறையில் சிவபெருமான் மறைந்து, தம்மைப் பாடுமாறு பணித்தமை.

எவ்வாறு பாடுவது என்று சுந்தரர் திகைத்து நின்றபோது, பித்தா என்று அடி எடுத்துக் கொடுத்துச் சிவபெருமான் பாடுமாறு செய்தமை என்றெல்லாம் நிகழ்வுகள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

அன்பில் பெருகிய சிறப்பில்மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொல்தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்

என்ற அழகிய தமிழ்மொழியின் சிறப்புரைக்கும் இறைமை சார்ந்த மொழிகளும்,

முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்

என்ற திருவருட் குறிப்பு மொழிகளும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன,

பரவையார் திருமணம்

மேலும் தலயாத்திரை மேற்கொண்ட சுந்தரர், திருத்துறையூரில் தவநெறி அருளப்பெற்றதும், திருவதிகை எல்லைப் பகுதியில், சிவன் திருவடி சூட்டப் பெற்றதும், தில்லைச் சிற்றம்பலவனை வணங்கிப் பேரின்ப வெள்ளத்துள் திளைத்ததும், தோணிபுரத்தில்(சீகாழி) இறைவன் திருக்காட்சிக் காட்டக் கண்டு மகிழ்ந்ததும், திருவாரூரில் இறைவன் தம்மைச் சுந்தரருக்குத் தோழமையாகத் தந்ததும், சுந்தரர் தம்பிரான் தோழர் என அழைக்கப்பெற்றதும், முன்னைய இறைவன் குறிப்பால் திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்திருந்த பரவையாரைக் கண்டு, ஆரூர்ப் பெருமான் அருள் துணையோடு அவரை மணந்து மகிழ்ந்ததும், இப்பகுதியில் நிரல்பட விரித்துரைக்கப் பட்டுள்ளன. இன்பத்தில் திளைக்கும் போதும், அதிலிருந்து விடுபட்டு நீங்கி நிற்பதும், துன்பத்தில் துவளும்

போதும் அதனால் பாதிப்படையாது நெஞ்சுறுதி கொண்டு நிமிர்வதும் சிலருக்கே வாய்க்கும். பரவையாரோடு இன்பம் துய்த்த காலத்தும் சுந்தரர், அவ்வின்பத்தில் திளையாது, யோக நெறி நின்றார் என்ற அரிய குறிப்பு இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பரவை என்னும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலைஓங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார் (327)

முதல் நூல்

திருவாரூரில் வாழ்ந்து வரும் நாளில், திருக்கோயில் முன்பகுதியில் அமைந்திருந்த தேவாசிரியன் மண்டபத்தில், சிவன் அடியார் பலர் கூடியிருக்கக் கண்ட சுந்தரர், தாம் அன்னாருக்கு அடிமைபூண வேண்டும் என்று விரும்பினார். திருவாரூர் இறைவன், சிவன் அடியார்களின் பெருமைகளை அசரீரியாக எடுத்துரைத்தான்.

பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பர் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரை நீ அடைவாய் (342)

என்று, அடியவர் பெருமையை இறைவன் எடுத்துக் கூறக்கேட்ட சுந்தரர் மகிழ்ந்தார். இறைவன் அடியார் பெருமைகளை விரித்து நீ பாடுக என்று ஆணையிட்டு, தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று அடி எடுத்துக் கொடுத்து

அருளினார். சுந்தரர், சிவன் அருள் கட்டளையை ஏற்று 11 பாடல்களால், அடியவர் பெருமை கூறும் வரலாற்றுச் சிறப்புமிக்க, திருத்தொண்டத்தொகை என்ற பதிகத்தைப் பாடி வழங்கினார். அதில் முன்குறித்தவாறு 60 தனியடியார்கள் மற்றும் 9 தொகையடியார்கள் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. அவ்வடியார் வரலாற்றை இனி நான் விரித்துரைப்பேன் என்று கூறிச் சேக்கிழார், நாயன்மார் வரலாறுகளை இரண்டாவது சருக்கம் முதலாக விரித்துரை செய்துள்ளார்.

திருத்தொண்டத்தொகை- அமைப்பு

திருத்தொண்டத்தொகையில், ஆண் அடியார்கள் 58 பேரும், பெண் அடியார்கள் இருவரும் இடம் பெற்றுள்ளனர். சேக்கிழார், காப்பிய நாயகராகிய சுந்தரர், அவர் தந்தை சடையனார், தாயார் இசைஞானியார் ஆகிய மூவரையும் இணைத்து, நாயன்மார் தொகையை 63 ஆக உயர்த்தியுள்ளார். பெண் அடியவர்கள் மூவருள், இசைஞானியார் வரலாறு சுந்தரர் வரலாற்றுடன் இணைந்து வந்துவிடுகிறது. மங்கையர்க்கரசியார் வரலாறு திருஞானசம்பந்தர் வரலாற்றுள் விரித்துரைக்கப்பட்டுவிடுகிறது. எனவே, இவ்விருவர் வரலாறுகளும் தனியே மிகச்சுருக்கமாகவே பாடி அமைக்கப்பட்டுள்ளன. காரைக்காலம்மையார் வரலாறு ஒன்று மட்டுமே 66 பாடல்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. திருத்தொண்டத்தொகையில் இடம்பெறாது, அடியவர்கள் அருள் வரலாற்றில் இடம்பெற்றுள்ள திலகவதியார், திருவெண்காட்டு நங்கை, கமலவதி முதலாகிய பல பெண்களும் இந்நூலுள் பெரிதும் போற்றப்பட்டுள்ளனர். பெரிய புராணத்துள் இடம் பெற்றுள்ள மதிப்புமிக்க பெண்களைச் சேக்கிழார், அவள், வந்தாள் என்ற பெண்பால் விகுதிகளை விடுத்து, அவர், வந்தார் என்ற பலர்பால் விகுதிகளால் போற்றியிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

தொகை அடியார்கள்

இவர், இன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாத வேறு பலரையும், தம் காலத்துக்கு முன்பும், பின்பும், வாழ்ந்தவர்களையும், வரவிருப்பவர்களையும் போற்றும் நோக்கில் தொகையடியார் வணக்கத்தைச் சுந்தரர் மேற்கொண்டுள்ளார். வரலாற்று எல்லைக்குள் உட்படாதவர்களையும், வரலாற்றுப் பார்வையில் கிட்டாதவர்களையும், சிறப்பிக்கும் சுந்தரரின் இப்பண்பு, பெருஞ்சிறப்புக்கு உரியது. நால்வரில் ஒருவராகிய மாணிக்கவாசகர் பெயர், திருத்தொண்டத் தொகையில் இடம்பெறவில்லை. காரணம் அவர் சுந்தரர் காலத்துக்குப் பின்வந்தவராதல் வேண்டும். இவ்வாறான தொகையடியார்களை ஒரு அட்டவணையின் வாயிலாக அறிந்துகொள்வது பயனுடையதாக அமையும்.

வ.எண்.	தொகை அடியார்	பாடல் எண்.
1.	தில்லைவாழ் அந்தணர்	10
2.	பொய்யடிமை இல்லாத புலவர்	3
3.	பத்தராய்ப் பணிவார்கள்	8
4.	பரமனையே பாடுவார்கள்	2
5.	சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்	1
6.	திருவாரூர்ப் பிறந்தார்	2
7.	முப்போதும் திருமேனி தீண்டுவார்	3
8.	முழுநீறு பூசிய முனிவர்	6
9.	அப்பாலும் அடிச்சார்ந்தார்	2
	கூடுதல் பாடல்கள்	37

தனியடியார்கள்

பெரியபுராணப் பெண் அடியார்கள் மற்றும், தொகை அடியார்கள் அறிமுகத்திற்குப் பின்னர், ஆண் அடியவர்கள் வரலாறுகளைக் காணலாம். இரண்டாவது சருக்கம் தொடங்கிப் பின்வரும் சருக்கங்களில் 60 ஆண் அடியார்களின் வரலாறுகளும், திருத்தொண்டத்தொகை வரிசையில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழியில் அமைந்த பிற புராணங்கள் பலவும், வரலாற்று நோக்கில் அமைந்தன அன்று. சேக்கிழார் வரலாற்றுத் தரவுகளை நாடு முழுதும் சென்று நேரில் கண்டு, திரட்டி, முறைப்படுத்திக்கொண்டு, இந்நூலை ஒரு வரலாற்றுப் பெருங்காப்பியமாகவே படைத்துள்ளார். இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், செவிவழிச் செய்திகள் யாவும் அவரால் உற்றுநோக்கி அறியப்பட்டுள்ளன. நன்கு அறிந்து தெளிந்த உண்மைகளை மட்டுமே இவர் பதிவு செய்கிறார். கற்பனைப் பதிவுகளில் இவருக்கு நாட்டம் இருந்திருக்கவில்லை. பூகோள அறிவும், காலக்கணக்குகளும், நில இயல்புகளும், இயற்கை அமைப்புகளும் மிகத் துல்லியமாக இந்நூலுள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, பெரியபுராணத்தை ஒரு வரலாற்றுக் காப்பியமாகக் கொள்ள முடிகிறது.

நாயன்மார் - குலமரபு

திருஞானசம்பந்தர் அருள் வரலாறே, இந்நூலுள் அதிகப் பாடல்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. 4287 பாடல்களில், திருஞானசம்பந்தர் புராணம் மட்டுமே 1256 பாடல்களால் பாடப்பெற்றுள்ளது. திருநாவுக்கரசர் வரலாறு 429 பாடல்களால் நடையிடுகிறது. ஏனைய வரலாறுகள், கிடைத்திருக்கும் செய்திகளின் அளவிற்கு ஏற்ப விரித்தும், சுருக்கியும் பாடப்பெற்றுள்ளன. நாயன்மார்கள், அக்காலத்தில் நிலவிய பல்வேறு குலங்களையும், சாதிகளையும் சார்ந்தவர்கள். சைவம்

என்ற ஒரு பெரிய வட்டத்துள், சாதி வேறுபாடுகள் கருதாது, மனித குலத்தை ஒருங்கிணைக்கும் அரிய முயற்சி பெரியபுராணத்துள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடியவர்களுள் வேளாளர் 13, அந்தணர் 12, முடியரசர் 6, மரபு இன்னது என்று தெரியாதவர் 6, குறுநில மன்னர் 5, வணிகர் 5, ஆதிசைவர் 4, இடையர் 2, ஏனைய குலத்தோர் 10. இவர்கள் சோழநாடு, நடுநாடு, தொண்டை நாடு, பாண்டி நாடு, மலை நாடு, கோனாடு, மழ நாடு என்ற பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இன்ன நாட்டினர் என்ற குறிப்பு 9 அடியவர்களில் இல்லை.

தனி அடியார் - அட்டவணை

பெரியபுராண அடியவர்கள் வரலாற்றை விரித்துரைக்கும் வாய்ப்பு இப்பகுதியில் இல்லை. ஆயினும், அவர்கள் பெயர்கள் இன்னது என்று தெரிந்துகொள்வது நலம் பயக்கும். அகரவரிசையில், கீழ்க்கண்ட அட்டவணையில், அவர்கள் பெயர்கள் மட்டும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

1.அதிபத்தர்
2. அப்பூதியடிகள்
3. அமர்நீதிநாயனார்
4. அரிவாட்டாய நாயனார்
5. ஆனாய நாயனார்
6. இடங்கழி நாயனார்
7. இயற்பகை நாயனார்
8. இளையான்குடி மாறர்
9. உருத்திர பசுபதியார்
10. எறிபத்த நாயனார்
11. ஏயர்கோன் கலிக்காமர்
12. ஏனாதிநாத நாயனார்
13. ஐயடிகள் காடவர்கோன்
14. கணநாத நாயனார்
15. கணம்புல்ல நாயனார்
16. கண்ணப்ப நாயனார்
17. கலிக்கம்ப நாயனார்
18. கலிய நாயனார்
19. கழறிற்றறிவார்
20. கழற்சிங்க நாயனார்
21. காரி நாயனார்
22. காரைக்காலம்மையார்
23. குங்கிலியக் கலயர்
24. குலச்சிறை நாயனார்
25. கூற்றுவ நாயனார்
26. கோச்செங்கட் சோழர்

27. கோட்புலி நாயனார்
28. சடைய நாயனார்
29. சண்டேசுவர நாயனார்
30. சத்தி நாயனார்
31. சாக்கிய நாயனார்
32. சிறப்புலி நாயனார்
33. சிறுத்தொண்டநாயனார்
34. செருத்துணை நாயனார்
35. சோமாசி மாறர்
36. தண்டியடிகள்
37. திருக்குறிப்புத் தொண்டர்
38. திருஞானசம்பந்தர்
39. திருநாவுக்கரசர்
40. திருநாளைப் போவார்
41. திருநீலகண்டர்
42. திருநீலகண்டயாழ்ப்பாணர்
43. திருநீலநக்கர்
44. திருமூல நாயனார்
45. நமிநந்தியடிகள்
46. நரசிங்கமுனையரையர்
47. நின்றசீர் நெடுமாறர்
48. நேச நாயனார்
49. புகழ்ச்சோழநாயனார்
50. புகழ்த்துணை நாயனார்
51. பூசலார் நாயனார்
52. பெருமிழலைக்குறும்பர்
53. மானக்கஞ்சாற நாயனார்
54. முருக நாயனார்
55. முனையடுவார் நாயனார்
56. மூர்க்க நாயனார்
57. மூர்த்தி நாயனார்
58. மெய்ப்பொருள் நாயனார்
59. வாயிலார் நாயனார்
60. விறன்மிண்ட நாயனார்
61. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
62. சடைய நாயனார்
63. இசைஞானியார்

காப்பிய உள்ளீடு - நூல் செய்தோர்

பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள தனி அடியார்களுள் சிலர், சைவ சமயத்திற்கு அருந்தொண்டுகள் இயற்றியதோடு, தாமே சைவ சமயம் குறித்துத் தனிப்பாடல்களையும், பதிகங்களையும், சிற்றிலக்கியங் களையும் படைத்தளித்துள்ளனர். கழறிற்று அறிவார் என்ற பெயர் கொண்ட சேரமான் பெருமாள் நாயனார் 1. திருவாரூர் மும்மணிக்கோவை, 2. பொன் வண்ணத்தந்தாதி, 3. திரு உலாப்புறம் (திருக்கயிலாய ஞான உலா) என்ற நூல்களைப் படைத்தளித்துள்ளார். காரி நாயனார் என்பவரால் காரிக்கோவை என்ற ஒரு நூல்

படைத்தளிக்கப்பட்டதாகச் சேக்கிழார் குறித்துள்ளார். அந்நூல் இன்று கிடைக்கவில்லை. காரைக்கால் அம்மையார், 1. இரட்டை மாலை அந்தாதி (திரு இரட்டை மணிமாலை), 2. அற்புதத் திருவந்தாதி, 3.மூத்த திருப்பதிகம் முதலிய சிறு நூல்களை ஆக்கி அளித்துள்ளார். ஐயடிகள் காடவர்கோன் சேத்திரத் திருவெண்பா பாடியுள்ளார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய பதிகப் பாமாலைகள் குறித்து முன்னரே விளக்கப்பட்டுள்ளன. திருமூலர் திருமந்திர மாலை ஆக்கித் தந்துள்ளார். தம் காலத்துக்கு முற்பட்ட இந்நூல்கள் யாவற்றையும் நன்கு ஆராய்ந்து அறிந்தே சேக்கிழார், பெரியபுராணம் பாடியுள்ளார் என்பது நன்கு தெளிவாகிறது.

சைவ சமய உண்மைகள்

சைவ சமயம் தொடர்பான பல உண்மைகள் குறித்துப் பெரியபுராணம் விரிவான விளக்கங்களைத் தருகிறது. சைவ சமயத்தில், சிவலிங்க வழிபாடு தொன்மையானது. சிவலிங்கத் திருமேனியின் உண்மை குறித்துச் சேக்கிழார்,

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
(பெரிய.3648)

சிவலிங்கம் என்பது, உருவமும் அன்று. உருவம் அற்றதும் அன்று. அருவமும் உருவமும் கலந்த ஒரு வழிபாட்டுச் சின்னம் என்று சேக்கிழார் விளக்கம் தருகிறார். சைவத்தில் இறைவனை வீழ்ந்து வணங்கும் முறைகள் இரண்டு உண்டு. அவை.1. பஞ்சாங்க நமஸ்காரம், 2. அட்டாங்க நமஸ்காரம். இதில் பஞ்சாங்க நமஸ்காரம் என்பது,

மண்ணுற ஐந்து உறுப்பால் வணங்கி (270)

என்றும், அட்டாங்க நமஸ்காரம் என்பது,

அங்கம் மாநிலத்து எட்டுற வணங்கி (2856)

என்றும் சேக்கிழாரால் விளக்கப்பட்டுள்ளன. இரண்டு கால், இரண்டு கை, தலை என்பன ஐந்து உறுப்புகள். இத்துடன் மார்பு, இரண்டு காதுகள் தோய்வது எட்டு உறுப்புகள்.

சிவபெருமான்-அருள்திறம்

சைவ சமயக் காப்பியம் என்பதற்கு ஏற்பச் சிவபெருமானின் அடையாளங்களையும், அருட் செயல்களையும், வீரநிகழ்வுகளையும் சேக்கிழார், தம்நூலுள் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

தன்னை யார்க்கும் அறிவரியான் (11)

இன்ன தன்மையன் என்று அறியாச் சிவன் (23)

அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அரியான் (192)

அடியார் இடுக்கண் தரியாதார் (3483)

எவ்வுயிர்க்கும் தாயானான் (2385)

கருச்சுற்றில் அடையாமல் கைதருவார் (2294)

அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்ற பிரான் (4163)

தொல்உலகம் முழுவதும் அளித்து அழித்து
ஆக்கும் முதல்வர் (3444)

தேவரையும் மால் அயன்முதல் திருவின்மிக்கோர்
யாவரையும் வேறு அடிமையா உடைய எம்மான் (183)

முன்னாகி எப்பொருட்கும் முடிவாகி நின்றான் (1421)

முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான் (179)

புண்ணியப் பொருளாய் நின்றான் (385)

எனவரும் பெரியபுராணத் தொடர்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

வரலாற்றுக் காப்பியம்

பெரியபுராணம், ஒரு வரலாற்றுக் காப்பியம் என்பதற்கு ஏற்பச் சேக்கிழார், இந்நூலுள் பல வரலாற்றுச் செய்திகளை உள்ளவாறு பதிவு செய்துள்ளார். 1. ஆதித்த சோழன் தில்லை அம்பலத்திற்குப் பொன் வேய்ந்தமை, 2. இமயமலையில் சோழன் புலி இலச்சினை பொறித்தமை, 3. ஒரு காலத்தில், பெண்ணை ஆறு துறையூரின் தெற்கில் ஓடியது. 4. காஞ்சிபுரத்தைக் கரிகால் பெருவளத்தான் புதுக்கியது. 5. அகத்தியர் காவிரியை வரவழைத்தது. 6. இலக்குமி திருவாரூரில் வழிபட்டது. 7. உபமன்யு முனிவர், கண்ணனுக்குச் சிவதீட்சை செய்வித்தது. 8. உமை அம்மை காஞ்சிபுரத்தில் சிவபூசை செய்தது. 9. உமையம்மைக் காஞ்சியில் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தது. 10.சிவபூசை செய்து பரசுராமன் பரசு என்ற ஆயுதம் பெற்றது. இவ்வாறான வரலாற்றுப் பதிவுகள், மேலும் பல பெரியபுராணத்துள் இடம் பெற்றுள்ளன.

காப்பிய எழில் - உவமை அழகு

ஒரு பெருங்காப்பியத்திற்குக் கற்பனை, வருணனை, உவமை முதலிய அணிகள் மேலும் அழகு சேர்ப்பன. பக்திக் காப்பியம் என்பதால் சேக்கிழார், உவமைகளில் எல்லாம் பக்தி மணம் கமழக் காண்கிறோம். வஞ்சகத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டு, பொய் வேடம் தரித்து வந்தவனை,

மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கருப்பு வைத்து (473)

என்று உவமித்துக் காட்டுகிறார். சிவனடியார் வீரத்திற்கு முன் நிற்கமாட்டாது புறங்கொடுத்து, வஞ்சகப் பகைவன் ஓடுவதை,

கதிரோன் எழ மழுங்கிக்
கால்சாயும் காலை
மதிபோல் அழிந்து பொறா
மற்றவன் (615)

என உவமித்து மகிழ்கிறார். நல்ல அன்பு நிறைந்த பிள்ளையின் தந்தை, குணமற்றவனாக இருப்பதை விளக்கும் இடத்தில், பாம்பு மாணிக்கத்தையும் அளித்து, நஞ்சினையும் கக்கும் தன்மைபோல் என்று உவமிக்கிறார். இறைவனைக் கண்டு, கண்ணப்பர் விட்டு நீங்காத தன்மையை,

வங்கினைப் பற்றிப் போதா
வல்உடும்பு என்ன நீங்கான் (765)

என உடும்பின் தன்மையோடு ஒப்புமை காட்டுகிறார். இவ்வாறான உலகியல் கலந்த உவமைகள் பல, இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

கற்பனைப் புனைவு

பெரியபுராணத்தில், அழகிய கற்பனைகளும் நயமுற அமைந்துள்ளன. வேதியர்கள் கொழுந்துவிட்டு எரியும் வேள்வித் தீயில், மாவிலைகளைக் கொண்டு, நெய்யை முகந்து வார்த்து வேள்வி வேட்பர். திருஞானசம்பந்தர் அவதரித்த சீகாழியில், இயற்கையே வேள்வி செய்வதாகச் சேக்கிழார் கற்பனை செய்கிறார். மாமரங்கள் வயல்களின் ஓரங்களில் தழைத்துள்ளன. வயல்கள் எல்லாம் செந்தாமரைப் பூக்கள் மலர்ந்து கிடக்கும் காட்சி,அவற்றை வேள்விக் குண்டங்கள் போல் எண்ணச் செய்கின்றன. மரத்தில், மாங்கனிகள் முதிர்ந்து வெடித்து, அவற்றின் கொழுவிய சாறுகள் கீழே வழிகின்றன. அவை மாவிலைகளில் வீழ, மாவிலைகளின் நுனி வழியாக கனிச்சாறு கீழே தாரை தாரையாக இறங்க, இக்காட்சி, அவ்வூர் மரங்கள் எல்லாம் வேள்வி செய்வது போன்ற தோற்றத்தைத் தருகின்றன. மாம்பழச்சாறு, கெட்டிப்பட்டு இளகிய நெய்போலத் தோன்றும்

ஒப்புமை நினைவுகூரத்தக்கது.

பரந்த விளை வயற் செய்யபங்கயமாம்
பொங்கு எரியில்
வரம்பில் வளர் தேமாவின் கனிகிழிந்த
மது நறு நெய்
நிரந்தரம் நீள் இலைக் கடையால் ஒழுகுதலால்
நெடிது அவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும் தகைய என
மணந்துளதால் (1910)

என்பது மேற்குறித்த கற்பனை அமைந்த அழகிய பாடல்.

பெரியபுராணம் - சமூக நோக்கு

எந்த ஒரு காப்பியமும் சமூகப் பயன்பாடு கொண்டதாக அமைய வேண்டும். அது தோன்றிய காலத்தில் நிலவியிருந்த சமூக அநீதிகளைக் கண்டித்து எதிர் நீச்சல் அடிக்கும் துணிவு, காப்பியப் படைப்பாளிக்கு வேண்டும். அத்தகு காப்பியங்களே சமூகத்தில் நின்று நிலவும். சாதி பேதங்களும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், ஆண்டான், அடிமைச் சமூக அமைப்பும் நிலவியிருந்த காலம், சேக்கிழார் காலம். இயன்ற வரை, சமய மரபுகளுக்கு மாறுபடாமல், சமூகத்தை நெறிப்படுத்த அவர் அரிய முயற்சி மேற்கொண்டிருந்தமையை உணர முடிகிறது.

முடியாட்சிக் காலத்தில், மன்னனின் நியாயமற்ற அழைப்பை ஏற்க மறுத்து, நாமார்க்கும் குடியல்லோம் என்று வீறு கொள்ளும் உரிமை முழக்கம் அங்கே கேட்கிறது.

தவறு நிகழுமானால், அரசனின் பட்டத்து யானையையும், பாகனையும் கொல்ல முடியும் என்பதை எறிபத்தர் வீரத்தில் காண முடிகிறது. காந்தியடிகளுக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னரே உண்ணா நோன்பையும், தனி மனிதச் சத்யாக்கிரகத்தையும் நாவரசர் மேற்கொண்டமை தெரிகிறது.

கோயில் பூசை செய்யும் சிவாசாரிய மரபில் வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், கணிகையர் குலத்தில் வந்த பரவையாரைக் கலப்பு மணம் புரிகிறார். இறைவனும் இதற்குத் துணை நிற்கிறான்.

நந்தனார் வரலாறு அக்காலத்தில் ஆதிதிராவிடர்கள், சிவாலயங்களுக்குள் சென்று வழிபடத் தடை இருந்தமையை எடுத்துக்காட்டுகிறது. ஆனால், திருஞானசம்பந்தராகிய வேதியர், தம் தேவாரப் பனுவல்களுக்கு இசைகூட்டி யாழ் ஒலி எழுப்ப, திருநீலகண்டயாழ்ப்பாணர் என்ற, கீழ்க்குடியில் வந்த அன்பரைத் திருக்கோயில் கருவறைவரை அழைத்துச் செல்கிறார். திருநீலநக்கர் தம் இல்லத்தில், வேள்வி மண்டபத்தில், கணவன் மனைவியாகப் பாணர் தம்பதியர் இரவில் படுத்து உறங்க அனுமதிக்கிறார். வணிகர் மரபில் வந்த சிவநேசர், தம் மகள் பூம்பாவையை, வேதியர் குலத்து வந்த திருஞானசம்பந்தருக்கு மணம் முடிக்க விரும்பியிருந்தார் என்று தெரிகிறது. பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருந்த காலத்தில், உலகத்தார் பார்வையில், வாழ்வை இழந்தவராகத் தோற்றம் தந்த திலகவதியார், திருநீறு வழங்கித் தம்பியாரை மதமாற்றம் செய்து சைவத்திற்கு மீட்டுள்ளார். ஒரு மடாதிபதிக்கு உரிய உரிமை, ஒரு பெண்ணுக்குச் சேக்கிழாரால் வழங்கப்படுகிறது.

ஆட்சியாளர் திறம்

நாடாளும் மன்னர்கள், நெறி திறம்பாது ஆள வேண்டும் என்பது முதலமைச்சராக இருந்த சேக்கிழார் விருப்பமாக அமைந்திருக்கிறது. மனுநீதிச் சோழன் வரலாறு, நாடாள்வோருக்கு மனுநீதியினும் மேம்பட்ட நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. பசுவின் கன்று தேர்க்காலில் அடிபட்டு இறந்தமைக்குப் பிராயச்சித்தம் போதும் என்று அமைச்சர்கள் கூறினர். மன்னன் ஒப்பவில்லை. கன்றை இழந்த பசுவின் துயரை, நான் என் மகனை இழந்து நின்று பெறுவதே அரச நீதி என்று

மனுநீதிச் சோழன் கருதி, மகனைத் தேர்க்காலில் கிடத்தித் தேர் ஊர்ந்து நீதி செய்கிறான்.

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை

என்ற குறளுக்குப் பெரியபுராணத்தில் ஒரு சான்றாக மனுநீதிச்சோழன் வரலாறு அமைகிறது. தம் பட்டத்து யானை இழைத்த தவறுக்காக, அதனைக் கொன்றது போதாது, யானைக்கு உரியவனாகிய என்னையும் கொல்ல வேண்டும் என்று கூறிய புகழ்ச்சோழர், கற்பார் நெஞ்சில் இடம் பிடிக்கிறார். முடியாட்சிக் காலத்திலேயே, இத்தகைய அரசர் வரலாறுகளைச் சேக்கிழாரால் மட்டுமே பாட முடிந்திருக்கிறது.

பல்வகைச் சிறப்புக்கள்

பெரியபுராணம், பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாக அமைக்கப்பட்டிருந்த போதும், அது தனித்தன்மை உடையது என்பது இப்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்டது. இறைவனுக்கு இணையாக, இறையருள் பெற்று மனித குலத்திற்குத் தொண்டு செய்யும் மனிதர்களும், போற்றவும் வணங்கவும் பட வேண்டும் என்பதைப் பெரியபுராணம் வற்புறுத்துகிறது. சாதிகளால் பிரிவுண்டு பிளவுண்டு நின்ற மனித குலத்தை, ஒரு சமயத்தை மையப்படுத்தி, ஒன்று படுத்த இயலும் என்பதைப் பெரியபுராணம் இனம் காட்டுகிறது. முடியாட்சிக்கு எதிரான தனி மனித உரிமைப் போராட்டத்திற்கும், இங்கே கால்கோள் விழா நடத்தப்பட்டுள்ளது. இயன்றவரை, பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் உள்ளார்ந்த முயற்சியில் சேக்கிழார் ஈடுபட்டிருப்பது தெரிகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர்கள், தெய்வங்களோடு, திருக்கோயிலுக்குள் திருவுருவமாக எழுந்தருளிப் பெருமை பெற இயலும் என்பதை இந்நூல் துணிவுடன் பறை சாற்றுகிறது. தமிழர் வாழ்வில் இந்நூல் ஏற்படுத்தியிருக்கும் பெருமிதங்கள் நீள நினைந்து போற்றப்பட வேண்டுவன.

3. சைவத்தமிழ் இலக்கியங்கள்

தமிழில், சைவ சமயத்தைச் சார்ந்து எழுந்த சிற்றிலக்கியங்கள் ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேலாக உள்ளன. இவையாவும் பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர் பாடப்பட்டவை. வடமொழியாளர், இத்தகு சிற்றிலக்கியங்களைப் பிரபந்தங்கள் என்று கூறுவர். அவை 96 வகை என்பது அவர்கள் பகுப்பு. இவ்வகைச் சிற்றிலக்கியங்கள் சைவ சமயக் கடவுளர்களாகிய சிவன், உமை, முருகன், விநாயகர் ஆகியோர் மீது பாடப்பெற்றுள்ளன. பெரும்பாலான கவிஞர்கள், இக்கடவுளர்கள் பலர் மீதும், பேதம் இல்லாமல் நூல்கள் யாத்துள்ளனர். ஒரு சிலர் மட்டுமே முருகனையும், உமையையும் தனித்துப் பாடினர். அவர்களும், ஏனைய சைவ சமய இறையவர்களோடு முருகனுக்கும், உமைக்கும் உறவு முறைக் கற்பித்தே பாடியுள்ளனர். சிற்றிலக்கியத் தொகுதியில் சிவன் குறித்து எழுந்தனவே அதிகம். முருகன் குறித்தவை அடுத்த நிலையில் உள்ளன. உமை மற்றும் விநாயகர் குறித்து எழுந்தன குறைவாகவே எண்ணிக்கையில் காணப்படுகின்றன. பன்னிரு திருமுறைகளில் இடம் பெற்ற அருள்நூல்கள் குறித்து முன்னைய

இயல்களில் தெரிந்து தெளிந்ததால், எஞ்சிய இலக்கியங்கள் குறித்த பதிவுகள், சைவத் தமிழ் இலக்கியங்கள் என்ற தலைப்பில் விளக்கப்பெற்றுள்ளன.

சைவச் சிற்றிலக்கியங்கள்

சைவச் சிற்றிலக்கியங்கள், புதிய இலக்கிய வடிவங்களைத் தமிழ் மொழிக்குத் தந்துள்ளன. சைவச் சிற்றிலக்கிகயங்கள் பலவும் கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், அந்தாதி, சதகம், பரணி, பல்வேறு பாவகைகளில் எண்ணிக்கைக் குறித்து எழுந்த மாலைகள், பள்ளு, குறவஞ்சி என்ற தலைப்புக்களில் அமைந்துள்ளன. 10 பாடல்கள் கொண்ட பதிகங்களும் பாடப்பெற்றுள்ளன. ஒன்றிரண்டு வகைகளைத் தவிர, இவ்வகை இலக்கியங்களின் முதல் தோற்றம், சைவ சமயத்தைச் சார்ந்தே எழுந்துள்ளன. இது, சைவம் தமிழ்மொழிக்கு வழங்கிய உயரிய அருட்கொடையாகும். இவற்றைப் பாடிய கவிஞர்கள் நூற்றுக்கணக்கில் உள்ளனர். பலரும் புலமை நலத்துடன், இறையருள் பெற்றிருந்தனர். இவர்கள் வாழ்வில் இறையருளால் நிகழ்ந்த அற்புதங்கள் பல. அவை பாமரர்களையும் சைவத்தின்பால் ஈடுபாடு கொள்ள உதவின. சிலர் குறிக்கத்தக்க நூல்கள் ஒன்றும் பாடாது, அழகிய தனிப் பாடல்களை மட்டும் பாடிப் போயினர். சைவச் சிற்றிலக்கியங்கள் பலவும், திருமுறைகளுக்கு நிகராகச் சைவ மக்களால் போற்றப்பட்டு, இறையவர் சந்நிதிகளில் ஓதப்பட்டு வருகின்றன. பல, நம்பிக்கையூட்டும் பாராயண நூல்களாகத் திகழ்கின்றன.

ஔவையார்

சைவ சமயக் கடவுளர்கள் மீது, அழகிய தனிப் பாடல்களையும், சிற்றிலக்கியங்கள் சிலவற்றையும் பாடியளித்தவர் ஔவையார் என்ற மூதாட்டியார். இவர் சங்க காலத்தில் வாழ்ந்திருந்த ஔவையாரின் பெயரில், கி.பி.12 ஆம்

நூற்றாண்டுக்குப்பின் வாழ்ந்திருந்த அருட்கவிஞர். இவர் வாழ்வு மற்றும் வரலாறு குறித்த கற்பனைக் கதைகள் ஏராளம் உள்ளன. இவர் பாடியனவாகப் பலநூல்கள் கிடைத்துள்ளன. 1. விநாயகர் அகவல், 2. ஆத்திசூடி, 3. கொன்றை வேந்தன், 4. மூதுரை, 5. நல்வழி , 6. அசதிக் கோவை, 7. நான்மணிக் கோவை, 8. அருந்தமிழ் மாலை, 9. தரிசனப் பத்து, 10. ஔவை ஞானக்குறள் என்பன குறிக்கத்தக்கன. ஆத்தி சூடி முதலியன அறநூல்களாயினும், சைவ சமய வாழ்த்துக்கள் இவற்றில் இடம் பெற்றுள்ளன. சீதக்களப என்று தொடங்கும் விநாயகர் அகவல், தமிழ்ச் சைவர்கள் பலரின் பாராயண நூலாகத் திகழ்கிறது. இவர் பாடிய தனிப்பாடல்கள் தனி அழகு மிக்கன. இறைவன் பெருமையினும் மிக்கது, அவன் அருள் பெற்ற அடியவர் பெருமை என்பதை ஔவையார்,

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ குறுமுனி கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒரு தலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறையவர் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே

-ஔவையார் தனிப்பாடல்

என்ற அழகிய பாடலால் விளக்கிக் காட்டுகிறார். பெரியபுராணம் இவர் காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கில், இப்பாடல் உருவாகியிருக்கலாம்.

ஔவை - ஞானக்குறள்

குறள் யாப்பினும் சிறிதாக, ஆத்திசூடி என்ற ஒருவரிப் பாடல்களை அறிமுகப்படுத்தி வெற்றி கண்டவர் ஔவையார். அறம் உரைக்கத் திருவள்ளுவர் குறள் யாப்பைக் கைக்கொண்டார். சமயத்துறையில், உமாபதி சிவாசாரியார் தம் திருவருட்பயன் என்ற நூலைக் குறள் யாப்பில் படைத்து வெற்றி கண்டார். வள்ளுவர் காலத்திற்கும், உமாபதி சிவத்தின் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில், ஔவையார் வாழ்ந்திருக்கக் கூடும். சைவ சமயத் தத்துவம் மற்றும் உயர் ஞானங்களை எடுத்துரைக்க ஔவையார் குறள் யாப்பைக் கையாண்டு 310 குறட்பாக்களை இயற்றியுள்ளார். இவை ஔவைக் குறள் என்றும், ஞானக் குறள் என்றும் குறிக்கப்பட்டு வருகின்றன. 1. வீட்டு நெறிப்பால் 2. திருவருட் பால் 3. தன் பால் என மூன்று பகுதிகளாக இந்நூல் பிரிக்கப்பட்டுள்ளது. நிறைவில் அமைந்துள்ள 10 குறட்பாக்களை அறிஞர்கள் நூற்பயன் என்று குறித்துள்ளனர். தத்துவச் செறிவுமிக்க இந்நூல் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகோலும் சிறப்புமிக்கது. சிவமூர்த்தங்கள் ஐந்து இவை என்பதனை கீழ்வரும் பாடல் குறிக்கிறது.

மாயன் பிரமன் உருத்திரன் மகேசனோடு
ஆயும் சிவமூர்த்தி ஐந்து (அவ்வைக்குறள்-6)

சைவம் எடுத்துரைக்கும் அட்ட மூர்த்தங்களை,

மண்ணொடு நீர்அங்கி மதியொடு காற்று இரவி
விண் எச்ச மூர்த்தியொடு எட்டு (அ.கு. 9)

என விரித்துரைக்கிறார். இறைவன் திருவருள் கிடைக்கப் பெற்றால் யாவும் கைகூடும் என்பதனை,

எல்லாப் பொருளும் முடிக்கலாம் ஈசன்தாள்
தொல்லை அருள்பெற்றக் கால் (அ.கு.106)

இவ்வாறான இந்த ஞான நூல், தமிழ் மக்களால் இன்னும் நன்கு அறிந்து போற்றப்படவில்லை.

ஒட்டக்கூத்தர்

சைவச் சிற்றிலக்கியம் படைத்த பெருங்கவிஞர்களில் ஒருவர் ஒட்டக்கூத்தர். திருவாரூர் மாவட்டம் பூந்தோட்டத்திற்கு அருகில் உள்ள, கூத்தனூரில் இவர் வாழ்ந்திருந்தார். கலைமகள் அருள்பெற்றவர் இவர். அவ்வூரில் கலைமகளுக்கு என ஒரு தனிக்கோயில் அமைத்தார். இவர், சோழர் அவையில் தலைமைப் புலவராக வீற்றிருந்து மூவருலா, குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் எனச் சில நூல்களை இயற்றியுள்ளார். தமிழில் தோன்றிய முதல் பிள்ளைத் தமிழ் நூல் இதுவே என்பர் ஆராய்ச்சி அறிஞர்கள். இவர் சைவ சமயத்தின் மீது பெரும் பற்றுக் கொண்டிருந்தார். தக்கன் இயற்றிய யாகத்தில், வீரபத்திரக் கடவுள் தோன்றி அவன் யாகத்தை அழித்துத் தக்கனையும் தண்டித்த இறைவனின் வீரச் செயல்களை விரித்து இவர் செய்த நூல் , தக்கயாகப் பரணி என்பது. இந்நூல் நாற்சீரடிப் பாடல்களால் நடையிடுகிறது. இவர் இயற்றியனவாக இராமாயண உத்தரகாண்டம், ஈட்டி எழுபது, அண்டத்துப் பரணி முதலிய சில நூல்களும் கிடைத்துள்ளன. இவர் பாடியனவாகத் தனிப்பாடல்கள் சிலவும் உள்ளன. இவர் மறைந்தபோது ஔவையார் வருந்திப் பாடியதாக ஒரு தனிப்பாடல் கிடைத்துள்ளது. அது,

> நூற்று எண்பதின்காதம் நூங்கு நறுந்தமிழின்
> ஏற்றம் இனிஎன்னாய் இயலுமோ - போற்று
> புவிராசர் யாரும் புகழும்ஒட்டக் கூத்தர்
> கவிராசன் காட்சியில்லாக் கால் (தனிப்பாடல்)

என்பதாகும்.

பல்வகை நூல்கள் - நூலாசிரியர்கள்

முருகன் மீதும், சிவன் மீதும் சிறந்த சிற்றிலக்கியங்களைப் படைத்தளித்த மற்றொரு கவிவாணர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவர். இவர் தொண்டை நாட்டில், செங்கற்பட்டு நகரை அடுத்த, பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். சைவ வேளாளர் குலத்தினர். இவர் பாடிய நூல்கள் 1. திருக்கழுக்குன்றப் புராணம், 2. திருக்கழுக்குன்ற மாலை, 3. சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், 4. திருவாரூர் உலா, 5. சந்திரவாணன் கோவை மற்றும் பல தனிப் பாடல்கள். இவர் புலமைச் சிறப்பினை,

எட்டாயிரம் கோடி எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் (தனிப்பாடல்)

என்ற தனிப்பாடல் விளக்கி நிற்கிறது. பார்வை இல்லாமல், கேள்விச் செல்வத்தால் புலமை மீதுர நூல் படைத்த சான்றோர் இவர். இவர் இலங்கை சென்று, மன்னன் பரராசசேகரனைப் பாடிப் பெரும் பரிசில் பெற்றுத் திரும்பினார். இவர் கயத்தாற்று மன்னன் மீது ஒரு உலாப் பாடி அரங்கேற்றினார். அதன் சிறப்பில் மகிழ்ந்த புலவர் ஒருவர் இவரை,

ஒட்டக் கூத்தன் கவியும் ஓங்கிய கம்பன் கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டதே - அட்டதிக்கும்
வீசும்கவி வீரராகவனாம் வேளாளன்
பேசும் கவிகேட்ட பின் (தனிப்பாடல்)

என்று புகழந்துரைத்தார்.

அதிவீரராம பாண்டியர்

'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்ற பழமொழி ஒன்று உண்டு. வடமொழி நளன் வரலாற்றை இவர், நைடதம் என்ற பெயரில் பாடியுள்ளார். தென்காசிப் பகுதியை ஆண்ட அரசர்

இவர். இப்பகுதியில் இவர் ஒரு சிவாலயத்தையும் எழுப்பியுள்ளார். காசிநகரின் பெருமையை விரித்து இவர் காசிக்காண்டம் என்ற நூலை இயற்றியுள்ளார். மற்றும் கூர்ம புராணம், இலிங்க புராணம் என்பனவும் இவரால் இயற்றப்பட்டன. சிறுவர்களுக்கு அறம் உரைக்கும் நறுந்தொகை என்ற நூலை இவர் ஆக்கி அளித்தார். அந்நூல் இன்று வெற்றி வேற்கை என்று அழைக்கப்படுகிறது. கரிவலம் வந்த நல்லூரில் எழுந்தருளியிருக்கும் சிவன்மீது, இவர் பாடிய அரிய நூல் திருக்கருவை பதிற்றுப்பத் தந்தாதி என்பது. இதனைக் குட்டித் திருவாசகம் என்று அழைப்பர். அதில் வரும் ஒரு பாடல்,

சிந்தனை உனக்குத் தந்தேன் திருவருள் எனக்குத் தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன் மலரடி எனக்குத் தந்தாய்
பைந்துணர் உனக்குத் தந்தேன் பரகதி எனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா கருவையில் இருக்கும் தேவே,

இவ்வாறான அரிய பாடல்கள் பல இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

இவர் தமையனார் வரதுங்கராம பாண்டியர் என்பவர். அவர் பிரமோத்திர காண்டம் என்ற அரிய நூலைப் படைத்துள்ளார்.

அருணகிரிநாதர்

கந்தபுராணத் தோற்றத்தை ஒட்டி, முருகன் புகழ்பாடும் அரிய சந்தக் கவிதைகளைத் தந்தவர் அருணகிரிநாதர். இவர் திருமாலுக்கும் முருகனுக்கும் உறவுப் பாலம் அமைத்தவர். தேவார ஆசிரியர்களைப் போல் முருகன் உறையும் தலங்கள் தோறும் சென்று இவர் திருப்புகழ் பாடினார். அவை திருப்புகழ் பாடல் பெற்ற தலங்கள் என்ற சிறப்பைப் பெற்றன. ஆசிரியப் பாக்களே திருப்புகழில் அதிகம். வகையுளியும், வட சொற்கலப்பும் திருப்புகழில் மிகுதி. இவர் பாடல்கள், தன்னிரக்க உணர்வைத் தருவன. மங்கையர் மையலில் தாம் ஆட்பட்டுச் சுழன்றதை

விரிவாகக் கூறியுள்ளார். தமிழ் மக்கள் போற்றி வளர்த்த இசைச் சந்தங்களும், பா வண்ணங்களும் திருப்புகழில் நன்கு பயன்கொள்ளப்பட்டுள்ளன. தேவாரங்களைப் போல் திருப்புகழுக்குப் பண் அடைவுகள் வகுக்கப்படவில்லை. அறுபடை வீடுகளின் சிறப்பும், முருகனின் அருளிப்பாடுகளும், வீரச்செயல்களும், வள்ளி தேவானை மணமும் திருப்புகழில் நயமுறப் பேசப்பட்டுள்ளன.

திருப்புகழ்

திருப்புகழ் என்ற தொகுப்பில் 1324 தனிப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் அருணகிரிநாதர் இயற்றியனவாக, 1. திருவகுப்பு, 2. கந்தர் அந்தாதி, 3. கந்தர் அலங்காரம், 4. கந்தர் அநுபூதி, 5. வேல் விருத்தம், 6. மயில் விருத்தம், 7. சேவல் விருத்தம், 8. திருஎழு கூற்றிருக்கை என்ற எட்டுச் சிறு நூல்களும் கிடைத்துள்ளன. திருப்புகழ்த் தொகுப்பில், திருப்புகழ் சிறப்புப் பாயிரம் என்ற தலைப்பில் 16 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவை நூற்பெருமையும் நூலாசிரியர் சிறப்பும் பேசி நிற்கின்றன. முதலாவதாகக் கைத்தலம் நிறைகனி என்ற விநாயகர் வணக்கப்பாடல் அமைந்துள்ளது. நூலின் முதலில், முத்தைத் தரு என்று தொடங்கும் அரிய சந்தப்பாடல் இடம் பெற்றுள்ளது. நூல், 1. படை வீடுகள், 2. பஞ்சபூதத் தலங்கள், 3. பிற தலங்கள் என்ற வரிசையில் நடையிடுகிறது. நிறைவில் சிறு நூல்களும், கடைசியில் திருவெழு கூற்றிருக்கையும் அமைக்கப்பட்டுள்ளன. திருப்புகழ் பாடல் பெற்ற தலங்கள் 160. பிற தலங்களை இணைத்துப் பேசும் சேத்திரக் கோவைத் திருப்புகழ் ஒன்றும் தொகுப்பில் உள்ளது.

தனி நூல்கள்

தனி நூல்களுள் முதலாவது திருவகுப்பு. இதன்கண் சீர்பாத வகுப்பு முதலாகத் திருப்பரங்கிரி ஈறாக 25 வகுப்புக்களில் நீண்ட

பல சீர்கள் கொண்ட 25 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டாவதாகிய கந்தர் அந்தாதியில் காப்புப் பாடல்கள் இரண்டும், கட்டளைக் கலித்துறைகள் ஒரு நூறும் இடம் பெற்றுள்ளன. மூன்றாவது கந்தர் அலங்காரம். சிறந்த பாராயண நூல் இது. நூறு பாடல்கள் உள்ளன. முதற்கண் காப்புச் செய்யுள் ஒன்றும், நிறைவில் நூற்பயன் கூறும் ஏழு பாடல்களும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. நம் நிழலில் நாம் ஒதுங்க இயலாது. அதுபோல், நாம் ஈட்டிய செல்வம் நமக்கு உதவாது. இதனை உணர்ந்து ஈட்டிய பொருளை வறுமை உடையவர்களுக்கு வழங்குங்கள் என்று அருணகிரிநாதர் வற்புறுத்துகிறார்.

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி
வறிஞர்க்கு என்றும்
நொய்யில் பிளவளவேனும் பகிர்மின்கள்
உங்கட்கு இங்ஙன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின்
வெறுநிழல் போல்
கையில் பொருளும் உதவாது காணும்
கடை வழிக்கே (கந்தர் அலங்காரம்-18)

கந்தர் அனுபூதி

நான்காவதாக அமைவது 51 விருத்தப்பாக்களால் இயன்ற கந்தர் அனுபூதி. முதற்கண் தனியே ஒரு காப்புச் செய்யுளும் இதில் இடம் பெற்றுள்ளது. சித்தாந்தக் கருத்துக்கள் நிறைந்த இந்நூலும், ஒரு சிறந்த பாராயண நூலாகும். இந்நூலின் பெருஞ்சிறப்பைப் பின்வந்த தாயுமானார்,

கந்தர் அனுபூதி பெற்றுக் கந்தர் அனு பூதிசொன்ன
எந்தை அருள்நாடி இருக்கும்நாள் எந்நாளோ

(தாயுமானார் பாடல்கள் 1114)

எனப் பேசி வணக்கம் செய்கிறார். இந்நூலில் இடம் பெற்றிருக்கும் பாடல்கள், அறம் உரைப்பனவாகவும், முருகன் அருள் வேண்டலாகவும் அமைந்துள்ளன.

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே

(கந்தர் அனுபூதி 7)

பிற நூல்கள் - சிறு அறிமுகம்

அருணகிரிநாதரின் தனிச் சிற்றிலக்கியங்களில் ஐந்தாவதாகிய வேல் விருத்தம் பன்னிரு சீர் கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்கள் 10 கொண்டு அமைகிறது. முருகனின் கை வேலின் புகழ் கூறுவது இந்நூல். ஆறாவதாகிய மயில் விருத்தம் விநாயகர் காப்பு ஒன்றும், 11 ஆசிரிய விருத்தங்களும் கொண்டுள்ளது. முருகன் ஏறி வரும் மயிலின் அழகும் ஆற்றலும் கூறுவது இந்நூல் பாடல்கள். ஏழாவது சேவல் விருத்தம். இதிலும் விநாயகர் காப்பு ஒன்றும், 11 ஆசிரிய விருத்தங்களும் இடம் பெற்றுள்ளன. முருகனைச் சேவல் கொடியோன் எனக் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துக் குறித்துள்ளது. கொடியில் இடம் பெற்றிருக்கும் சேவலின் முன்னை வரலாறு, கந்த புராணத்துள்ளும் விரித்துரைக்கப் பட்டுள்ளது. அத்தகு சேவலின் திறம் உரைப்பது இச்சிறு நூல். நிறைவாகத் திரு ஏரகம் எனப்படும் சுவாமிமலைத் தலத்து முருகனைப் போற்றுவது, திருவெழு கூற்றிருக்கை என்ற எண் அலங்காரப் பாடல். இப்பாடல் ஒன்றை மட்டும் பாராயணம் செய்தால், ஏனைய திருப்புகழ்ப் பாக்கள் அனைத்தையும் பாராயணம் செய்த பலன் கிட்டும் என்பது முருகன் அடியவர்கள் நம்பிக்கை.

காளமேகப் புலவர் - முதலியோர்

காளமேகப் புலவர், சிறந்த ஆசு கவி பாடும் வல்லமை மிக்கவர். பிறரை ஏசும், எள்ளல் நிறைந்த வசை பாடுவதிலும் இவருக்கு விருப்பம் அதிகம். ஆசுகவியால் அகில உலகெங்கும் வீசு புகழ்க் காள மேகம் என்றும், வசை பாடக் காள மேகம் என்றும் வரும் பழம்பாடல் தொடர்கள், இவர் புலமைக்குச் சான்றாக அமைகின்றன. கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நந்திபுரத்தில் (நாதன்கோயில்) பிறந்தவர். இயற்பெயர் வரதன். வைணவ சமயத்தினர். காதல் காரணமாகச் சைவம் சார்ந்தார். திருக்கோயில் பணியாளர். திரு ஆனைக்கா அகிலாண்டேசுவரி அருள் பெற்றுக் கவிஞரானவர். இவர் பாடிய நூல்களுள் சிறந்தது திருவானைக்கா உலா என்பது. மேலும் சித்திர மடல், பரப்பிரம விளக்கம் என்னும் நூல்களையும், நூற்றுக்கும் மேற்பட்ட தனிப்பாடல்களையும் இவர் பாடியுள்ளார். இழிப்பது போல் புகழும் நிந்தாஸ்துதி பாடுவதிலும் இவர் வல்லவர். திருமலைராசன், விஜயநகரவேந்தனின் பிரதிநிதியாகத் திருமலைராசன்பட்டினத்தில் ஆண்டிருந்த காலத்தில் இவர், அவன் அரசவைப் புலவராக இருந்தவர். புலவர்கள் ஒருமுறை இவரை நோக்கிக் கங்கைக் குடத்தில் அடங்கும் என்று பாடுக எனச் சோதனை வைத்தனர். காளமேகம்,

> ***விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்***
> ***மண்ணுக் கடங்காமல் வந்தாலும் - பெண்ணை***
> ***இடத்திலே வைத்த இறைவர் சடாம***
> ***குடத்திலே கங்கை அடங்கும்*** (தனிப்பாடல்)

என்று அனைவரும் வியக்கப் பாடினார். சடா மகுடம் என்பதற்குச் சடையுடன் கூடிய தலை என்பது பொருள். இவர் அத் தொடரைச் சடாம+குடம் எனப் பிரித்துப் பாடிப் புலவர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

இரட்டையர்கள்

பலவகைப் பூக்களால் கட்டப்பட்ட பூச்சரத்தைக் கதம்பம் என்று கூறுவர். பலவகைப் பாக்களாலும், பாவகைகளாலும் பாடப்படும் ஒருவகைச் சிற்றிலக்கியம் கலம்பகம் என வழங்கப்பட்டது. முதல் கலம்பகம் நந்திக் கலம்பகம் என்பது. இவ்வாறான கலம்பகங்கள் பல, பிற்காலத்தில் தோன்றின. கலம்பகம் பாடுவதில் வல்லவர்கள் என்று இரண்டு கவிஞர்களை முன்னோர் மதிப்பிட்டு உரைத்தனர்.

கண்பாய கலம் பகத்திற்கு இரட்டையர்கள்

என்பது அப் பழம் தொடர். கலம்பகம் பாடுவதில் வல்லவர்களாகிய இரட்டையர்களால் பாடப்பெற்ற கலம்பகம், தில்லைக் கலம்பகம் என்பது. இவ்விருவருள் ஒருவர் முடவர் என்றும், மற்றவர் குருடர் என்றும் கூறப்படுகிறது. முதுசூரியர் இளஞ்சூரியர் என்பன அவர்தம் பெயர்கள். முடவரைக் குருடர் சுமந்து செல்வார். முடவர் வழி காட்டுவார். இவர்கள் சோழ நாட்டில் இலந்துறை என்ற ஊரினர். ஒரு பாட்டின் முதல் இரு அடியை ஒருவரும், பின் இரு அடியை மற்றவரும் பாடுவர். திருவாமாத்தூர்க் கலம்பகமும் இவர்களால் இயற்றப்பட்டது. காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் மீது, ஏகாம்பரநாதர் உலா என்ற நூலை இவர்கள் பாடினர். இந்நூல் 1110 அடிகளை உடையது. இவர்கள் இயற்றிய பிறிதொரு நூல், கச்சிக்கலம்பகம் என்பது. இவர்கள் பாடியனவாகச் சில தனிப் பாடல்களும் கிடைத்துள்ளன. காளமேகப்புலவர் இறந்த செய்தி அறிந்து இரட்டையர்கள்,

ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ்க் காளமேகமே - பூசுரா
விண்கொண்ட செந்தழலாய் வேகுதே ஐயையோ
மண்தின்ற பாணம் என்ற வாய்

என்று இரங்கிப் பாடி அவர் புலமையை வியந்து நின்றனர்.

இவர்கள், வக்கபாகை வரபதி ஆட்கொண்டான் என்ற மன்னன் காலத்தில் வாழ்ந்தவர்கள் என்று தெரிகிறது.

குமரகுருபர சுவாமிகள்

சைவச் சிற்றிலக்கியங்கள் படைத்தவர்களில் குமரகுருபரருக்குத் தனித்த ஓர் சிறப்பிடம் உண்டு. நெல்லை மாவட்டம் திருவைகுண்டம் நகரில் பிறந்தவர். பெற்றோர் சண்முகசிகாமணிக் கவிராயர், சிவகாமசுந்தரி. ஐந்து வயதில் திருச்செந்தூர் முருகன் அருள் பெற்று வாய் பேசும் திறம் பெற்றார். அக்காலை இவர் பாடிய நூலே கந்தர் கலிவெண்பா என்பது. இதனைக் குட்டிக் கந்தரபுராணம் என்பர். சிறந்த பாராயண நூல். இவரை, தருமபுரம் ஆதீனம் 4ஆவது குருமூர்த்திகள், மாசிலாமணி தேசிகர் சீடராக ஏற்றுக் கொண்டார். இவர் காசியில் சைவ மடம் ஒன்றை நிறுவினார். அது பிற்காலத்தில் திருப்பனந்தாளுக்கு இடம் பெயர்ந்தது. இவர் இந்தி மொழியிலும் வல்லமை பெற்றிருந்தார். இவர், 2.மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், 3. மதுரைக் கலம்பகம், 4.நீதிநெறி விளக்கம், 5. திருவாரூர் நான்மணி மாலை, 6. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், 7. சிதம்பர மும்மணிக் கோவை, 8. சிதம்பரச் செய்யுட்கோவை, 9. பண்டாரமும் மணிக்கோவை, 10. காசிக் கலம்பகம், 11. சகலகலாவல்லி மாலை என்ற பல்துறை நூல்களைப் படைத்துள்ளார். அளவற்ற தமிழ் அன்பும், பக்திச் சிறப்பும், இலக்கிய எழிலும், இலக்கண நுட்பமும் இவர் பாடல்களில் நிறைந்து நிற்கும்.

குமரகுருபரர் - நூல்கள்

பூமேவு செங்கமலப் புத்தேளும் என்று தொடங்கும் கந்தர் கலிவெண்பா 122 கண்ணிகளைக் கொண்டது. முருகப் பெருமானை இவர் பலப்படப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பர்அகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக் கொளியே (க.க.வெ.கண்ணி 58)

என்றும்,

வரும் அட்ட மூர்த்தமாம் வாழ்வே மெய்ஞ் ஞான்ம்
தரும் அட்ட யோகத் தவமே (க.க.வெ.கண்ணி.65)

என்றும் முருகன் கருணையையும், சிவனும் முருகனும் வேறல்லர் என்பதற்குரிய சான்றுகளையும் பதிவு செய்து மகிழ்கிறார். முருகனிடம்,

ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும் சீர்ப்
பேசும் இயல் பல்காப்பியத் தொகையும் - ஓசை
எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து... (க.க.வெ.க.118,19)

அருளுமாறு விண்ணப்பம் வைக்கிறார்.

75 முதல் 86 வரையிலான கண்ணிகளில், கந்தபுராணம் விரித்துரைக்கும் முருகன் திருவவதாரத்தைக் குமரகுருபரர் மிக அழகாகப் பதிவு செய்துள்ளார்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்த பெண்பால் பிள்ளைத் தமிழ் நூல்களுள் ஒன்று. ஒரு விநாயகர் காப்பினையும், பத்துப் பருவங்களையும், 100 பாடல்களையும் கொண்டு நடையிடுவது. திருமாலின் தமிழ் அன்பை,

பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே

என்று சிறப்பித்துப் போற்றுகிறார். மீனாட்சியம்மையை,

தென்னர்க்கும் அம்பொன்மலை மன்னர்க்கும்
ஒரு செல்வி

என்றும்,

ஆணிப்பொன்வில்லி புணர் மாணிக்க வல்லி

என்றும் பலபடப் பாராட்டிப் போற்றுகிறார். வருகைப் பருவத்தில் மீனாட்சியம்மையை அவர் போற்றி பரவும் தொடர்கள் நினைவு கூரத்தக்க சிறப்புடையன.

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறும்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து

எடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென்பிடியே ... (மீ.பி.தமிழ்-பாடல்.வருகை.9)

இவ்வாறான அரிய பாடல்களின் அணிவகுப்பாக இந்நூல் திகழ்கிறது.

நீதிநெறி விளக்கம்

குமரகுருபரரின் மதுரைக் கலம்பகம், காப்பு ஒன்றும், பாடல்கள் 102ம் கொண்டு அமைந்துள்ளது. மதுரைச் சொக்கநாதரின் பெருமைகளையும், திருவிளையாடல் புராண வரலாறுகளையும் இந்நூல் நயமுற எடுத்துரைக்கிறது. குமரகுருபரரின் அறமுறைக்கும் பேருள்ளத்தின் வெளிப்பாடாக நீதி நெறி விளக்கம் அமைகிறது. காப்பு அல்லாது 101 பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அழகிய வெண்பா யாப்பை ஆசிரியர் கையாண்டுள்ளார். திருக்குறள் மற்றும் தமக்கு முன்னே

தோன்றிய அறநூல்களின் சாரமாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. அழுக்காறு என்னும் பொறாமையை விட்டுவிட வேண்டும், என்று பிற அற நூலாசிரியர்கள் பாடினர். அது கடினம். இதனை உணர்ந்த குமரகுருபரர், பொறாமை எண்ணத்தை மடைமாற்றிக் கொண்டு உயர வழிகாட்டுகிறார். தம்மினும் ஏழைகளை நோக்கி, நாம் நன்றாக இருக்கிறோம் என்று மகிழ்ச்சி அடையுங்கள். செல்வர்களைப் பார்த்துக் கொள்ளும் பொறாமையை,நம்மினும் மிகக் கற்றவர்கள்பால் திருப்புங்கள். அவர்களைப் போல் கற்பதற்கு முயலுங்கள் என்று புதுப்பாதை வகுக்கிறார்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகம்மகிழ்க-தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று. (நீதிநெறிவிளக்கம்-14)

என்ற அரிய பாடல் நினைவுகூரத்தக்கது.

முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ்

நான்மணிமாலை என்பது வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம்,ஆசிரியப்பா என்ற நான்கு பாடல் வகைகளும் மாறி மாறி வர 40 பாடல்களால் நடையிடுவது. திருவாரூர் நான்மணிமாலையுள் காப்பு உட்பட 41 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் செல்வமுத்துக் குமாரசுவாமி மீது இவர் ஒரு பிள்ளைத்தமிழ் நூல் பாடியுள்ளார். ஆண்பால் பிள்ளைத் தமிழ் நூல்களுள் இது முதன்மையானது என்பர். விநாயகர் காப்பு உட்பட இந்நூலுள் 101 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. முருகனை இவர்

ஆனேறு உயர்த்திட்ட ஐயற்கும் அம்மைக்கும்
அருமருந்தாகி நின்ற

ஆதிப்பிரான்

(முத்துக்குமாரசாமிப்பிள்ளைத்தமிழ் செங்கீரை-5)

என்று குறிப்பிடுகிறார். சிவன் வைத்தியன், அம்மை மருத்துவச்சி, முருகனே மருந்து என்பது குறிப்பு. இந்நூலுள் அம்புலிப்பருவம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. செல்வ முத்துக்குமரன் அருளும் திறத்தை,

.... எவரெவர்கட்கும்

ஊன்கண் உளக் கண்ணதாம்
விழியாக முன்னின்று தண்ணளி சுரந்து அவர்கள்
வேண்டிய வரம் கொடுப்பான்

(அம்புலிப்பருவம்.6)

என்று பாராட்டி மகிழ்கிறார்.

அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தன்

என்றும்,

தென்கலைக்கும் பழைய வடகலைக்கும் தலைவ

என்றும் முருகனைப் போற்றிப் புகழ்கிறார்.

குமரகுருபரர் பிறநூல்கள்

சிதம்பரம் மும்மணிக்கோவை காப்பு உட்பட 31 பாடல்களைக் கொண்டு நடையிடுகிறது. தில்லை நகர்ச் சிறப்பும், நடராசப் பெருமானின் அருளிப்பாடும் மிக விரிவாக இந்நூலுள் பாடப்பெற்றுள்ளன. சிதம்பரம் செய்யுட் கோவை ஒரு புதிய முயற்சி. யாப்பருங்கலக்காரிகை என்ற நூலில் வரும் பாக்கள், பல்வேறு பாவகைகளுக்கு உரிய உதாரணப் பாடல்களாக இந்நூல் அமைந்து, தில்லைச் சிறப்புரைத்து நிறைகிறது. குமரகுருபரரின் யாப்பியல் புலமைக்கு இந்நூல் சான்றாகிறது. தம் குருநாதர் மாசிலாமணி தேசிகர் மீது, குமரகுருபரர் பாடிய 34 பாடல்களின் தொகுதி பண்டார மும்மணிக்கோவை என்பது. இது சைவ சித்தாந்தக் கருத்துரைக்கும் போக்கில் அமைந்துள்ளது.

குமரகுருபரர் இயற்றிய பிறிதொரு கலம்பக நூல் காசிக்கலம்பகம். காசி நகர்ச் சிறப்பும், கங்கைநதிச் சிறப்பும் 101 பாடல்களில் விரிக்கப்பட்டுள்ளன. 10 பாடல்கள் கொண்ட கலைமகள் துதி சகலகலாவல்லிமாலை. இவையன்றி, மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை என்ற மூன்று சிறு நூல்களும் குமரகுருபரரால் இயற்றப்பட்டது என்பர்.

சிவப்பிரகாச சுவாமிகள் - முதலியோர்

சைவ சமயச் சிற்றிலக்கிய ஆசிரியர்களுள், கற்பனைக் களஞ்சியம் என்று பாராட்டப்பெறும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் குறிக்கத்தக்க ஒருவர். இவர் வீரசைவ நெறி நின்றவர். எனினும், சைவத் திருக்கோயில்களையும், சைவ நாயன்மார்களையும் பெரிதும் போற்றிப் பாடியுள்ளார். இவர் நூல்களுள் பிரபு லிங்க லீலை முதலியன வீர சைவச் சார்புடையன. இவர் பாடிய நூல்கள் 25. அவற்றுள் சைவ சமயச் சார்புடையன பல. சோண சைல மாலை, நால்வர் நான்மணிமாலை, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, பழமலை அந்தாதி, நன்னெறி, திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கை உலா முதலியன குறிக்கத்தக்க சிறப்புடையன. இவர் பாடிய சோண சைல மாலை 100 பாடல்களைக் கொண்டது. சொற்சுவை, பொருட்சுவை மிக்கது. ஒவ்வொரு பாடலின் பின் இரண்டு அடிகளும் சோண சைலம் எனப்படும் திருவண்ணாமலை சிறப்புரைக்கும். முன் இரண்டு அடிகள் ஆசிரியர் தம் குறைநீக்க வேண்டுகோள் வைப்பதாக அமையும். ஒவ்வொரு பாடலும்,

சோண சைலனே கைலை நாயகனே

என்றே நிறைவடைகிறது. இந்நூலின் நிறைவுப் பாடல்,

சீரணி புகழும் கல்வியும் சிறந்த
செல்வமும் இல்லில் வாழ்பவர்க்குப்
பேரணிகலம் என் புதல்வரும் கதியும்
பெறத் துதிப்பவர்க்கு அருள்பவன்நீ
நேரணி கதியை மறந்தவர் கண்டு
நினைந்துற மிக்க பேரருளால்
தாரணி முழுதும் தோன்றிடும் சோண
சைலனே கைலைநா யகனே!

என அமைகிறது.

நால்வர் நான்மணிமாலை

நால்வர் பெருமக்கள் அருள் வரலாறுகளை, மிக நயமுற எடுத்துப் போற்றும் அரிய நூல், சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணிமாலை. 40 பாடல்களைக் கொண்டது. முன்னே குறள் யாப்பில் ஒரு காப்பு அமைந்துள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் என மாறிமாறி ஒவ்வொருவருக்கும் பத்து வீதம் பாடல்கள் அமைந்துள்ளன. நால்வர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள் பலவும் இவரால் பதிவு செய்யப் பெற்றுள்ளன. திருவாசகத்தின் சிறப்புரைக்கும் இவர், நூல் என்றால் அது திருவாசகமே என்றும், அதன் பொருள் என்றால் அது தில்லைக் கூத்தனே என்றும் உறுதிப்படக் கூறுகிறார்.

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல்வேய்த் தோள்இடத் தவனே

திருஞானசம்பந்தர் வாழ்வில் எலும்பு பெண்ணாயிற்று. திருநாவுக்கரசர் வாழ்வில் கல் கடலில் மிதந்தது.

சுந்தரமூர்த்திசுவாமிகள் வரலாற்றில் முதலை விழுங்கிய குழந்தை மீண்டும் உயிர் பெற்று வந்தான். இம்மூன்று அற்புதங்களில், எது சிறந்தது என்று சுந்தரரை இவர் வினாவும் பாடல் ஆழ்ந்த பொருள் நோக்கு உடையது.

போதம் உண்ட பிள்ளை என்பு
 பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர்
 கல்மிதப்ப உய்த்ததோ
வாய்திறந்து முதலை கக்க
 மகனைநீ அழைத்ததோ
யாதுநம்பி அரிது நன்று
 எனக்கு இயம்ப வேண்டுமே

இவ்வாறான அரிய பாடல்களால் நிறைவடைகிறது நால்வர் நான்மணிமாலை.

சிவப்பிரகாசர் - பிறநூல்கள்

சிவப்பிரகாசரின் திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி காப்பு ஒன்றும், நூல் 30ம் ஆகக் கட்டளைக் கலித்துறை யாப்பில் திருச்செந்தூர் முருகன் புகழ் உரைப்பது. நிரோட்டகம் என்பது இதழ்களின் முயற்சியால் பிறக்கும், குறிப்பிட்ட மெய், உயிர், உயிர்மெய் எழுத்துக்கள் செய்யுளில் வாராமல் பாடுவது. இந்நூல் பாடல்களைப் படிக்கும்போது, மேல் உதடும் கீழ் உதடும் ஒன்றொடு ஒன்று ஒட்டாது. இது ஒரு அரிய முயற்சியாக அமைந்துள்ளது. இந்நாளில் விருத்தாசலம் என்று வழங்கப்படும் நகர் அக்காலத்தில், திருமுதுகுன்றம் என்று வழங்கப்பட்டது. இந்நகர் இறைவன் பழமலை ஈசன் என அழைக்கப்படுகிறான். இப்பெருமான்மீது காப்பு ஒன்றும், கலித்துறை 100ம் கொண்டு, பழமலை அந்தாதி பாடப்பட்டுள்ளது. இவர் பாடிய அரிய அறநூல் நன்னெறி. 40 வெண்பாக்களால் ஆக்கப்பட்டது. தனியே ஒரு

காப்பும் இடம் பெற்றுள்ளது. இன்சொல்தான் யாவரையும் மகிழ்விக்கும். தண்மதி எழுந்தால்தான் கடல் மகிழ்ந்து பொங்கும். சுட்டெரிக்கும் சூரியன் கதிர்களால் கடல் கூட மகிழ்வதில்லை. கடுஞ்சொல்லால் மகிழ்வார் உலகில் எவரும் இல்லை என்பதை,

இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய் பொங்காது அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்

என்ற அழகிய வெண்பாவால் நிலைநாட்டுகிறார்.

சிவப்பிரகாசரின் திருவெங்கைக் கோவை 426 பாடல்களாலும், திருவெங்கைக் கலம்பகம் 100 பாடல்களாலும், திருவெங்கை உலா 419 கண்ணிகளினாலும் ஆக்கப்பெற்றுள்ளன.

படிக்காசுப் புலவர்

தொண்டை நாட்டில், களந்தை நகரில் பிறந்தவர் படிக்காசுப் புலவர். இராமநாதபுரம் சமஸ்தானப் புலவராகத் திகழ்ந்தவர். இவர், சீதக்காதி என்ற வள்ளலைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடியுள்ளார். தொண்டை மண்டல சதகம் என்ற நூல் இவரால் பாடப்பெற்றது. தொண்டை நாட்டுப் புலவர்கள் சிறப்புரைக்கும் ஒரு வரலாற்று நூல் என்று இதனைக் கூறலாம். இவர் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம், சிவந்தெழுந்த பல்லவன் உலா, உமைபாகர் பதிகம் முதலிய நூல்களை இயற்றியவர். பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் என்பவர் இவர் புலமையைப் புகழ்ந்து,

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும்; பரிந்து அவ்வேட்டைத்

தொட்டாலும் கைமணக்கும்; சொன்னாலும்
வாய் மணக்கும்; துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே
பாட்டில்உறு நளினந் தானே

என்ற பாடலால் போற்றியுள்ளார்.

தாயுமான சுவாமிகள்

தாயுமானார் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் மரபில் வந்தவர். திருநந்தி தேவர் மரபில் வந்த மௌனகுரு என்பவரிடம் இவர் உபதேசம் பெற்றவர். திருமண வாழ்வை மேற்கொண்டு பின் துறவு நெறி நின்றார். இவர் இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரத்தில் சமாதி கூடினார். இவர் காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இவர் பாடிய பாடல்கள் 1452. இவை பல தலைப்புகளில் பிரித்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. முதற்பாட்டின் தொடக்கமே பல உட்பிரிவுகளுக்குத் தலைப்பாக அமைந்துள்ளன. கண்ணிகள், கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் இவர் பாடல்களில் அதிகம். சைவ சித்தாந்தக் கருத்துகளும், எளிமையும், வடசொல் ஆட்சியும், சமய சமரச நோக்கும், முன்னோரைப் போற்றும் திறமும் இவர் பாடல்களில் காணப்படுகின்றன. இவரது பராபரக் கண்ணி பெரிதும் போற்றப்படுகிறது.

அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே (790)

என்றும்,

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே (856)

என்றும்

கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே (827)

என்றும் வரும் பராபரக்கண்ணி வரிகள் பெரிதும் சிறப்புமிக்கன.

குறவஞ்சி - பள்ளு

தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் இசையும் சந்தமும் மிக்க பாடல்கள் நிரம்பிய திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற அரிய நூலைத் திரிகூடராசப்பக் கவிராயர் என்பார் இயற்றியுள்ளார். திருக்குற்றாலத் தலபுராணமும் இவரால் இயற்றப்பட்டதே.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

என்ற அரிய பாடலும்,

தண்ணமுதுடன் பிறந்தாய் வெண்ணிலாவே அந்தத்
தண்ணளியை ஏன் மறந்தாய் வெண்ணிலாவே

என்று தொடங்கும் அரிய பாடலும் இவரால் பாடப்பெற்ற குறவஞ்சியின் சிறப்பிற்குச் சான்று கூறுவன. வயலோர மக்களின் வாழ்வை அழகுறச் சித்திரிக்கும் ஒருவகைச் சிற்றிலக்கியம் பள்ளு என்பது. தமிழில் எழுந்த பள்ளு இலக்கியங்களுள் சிறந்தது திருமுக்கூடல்பள்ளு என்ற இனிய நூல். இந்நூல் பள்ளு நாடகம் என்றும் அழைக்கப்பட்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி-மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே

என்று தொடங்கும் பாடல், தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறிமுகமான பாடல்களுள் ஒன்றாகும்.

ஆதீன அருளாளர்கள்

தமிழ்நாட்டுச் சைவத் திருமடங்களின் தலைவர்களுள் சிலரும், மடத்தைச் சார்ந்து வாழ்ந்த துறவியர்களும், சைவ சமயம் சார்ந்த சிற்றிலக்கியங்கள் பலவற்றைப் படைத்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திருவாவடுதுறையைச் சார்ந்த சிவாஞான முனிவர். இவர் சமயம், தத்துவம், இலக்கணம், கண்டனம், உரைநூல்கள் எனப் பல்வகை நூல்களை யாத்தவர்.

இவர் இயற்றிய சிற்றிலக்கியங்களுள் குளத்தூர் அமுதாம்பிகைபிள்ளைத் தமிழ், விநாயகர் பிள்ளைத் தமிழ், சோமேச வெண்பா என்பன குறிப்பிடத்தக்கன. தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த சமபந்த சரணாலயர் என்பவர் கந்தபுராணச் சுருக்கம் என்ற நூலைப் பாடியுள்ளார். இவ்வாதீனக் குரு முதல்வர் குருஞானசம்பந்தர் பாடியுள்ள சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா என்பன குறிப்பிடத்தக்க சிறப்புடையன. ஆதீனச் சார்பு நூல்கள் பண்டார சாத்திரங்கள் என்று கூறப்படுகின்றன.

இராமலிங்க சுவாமிகள்

வடலூர் இராமலிங்க சுவாமிகள் என்றும், திருவருட் பிரகாச வள்ளலார் என்றும் போற்றப்பட்ட அருளாளர் பாடிய பாடல்களைத் திருவருட்பா என்ற பெயரில் 6 திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர். இவர் பாடிய பாடல்களின் தொகை 6411. முதல் திருமுறையுள் திருவடிப் புகழ்ச்சி, மகாதேவ மாலை, வடிவுடை மாணிக்க மாலை, சிவநேச வெண்பா முதலிய சிறு நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் திருமுறையுள் 103 பகுதிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பதிகங்கள் மட்டும் 85 உள்ளன. இவற்றுள் 51 பதிகங்கள் திருவொற்றியூரைப் பற்றியன. மேலும் தில்லை, திருமுல்லைவாயில், புள்ளிருக்கு வேளூர், திருவண்ணாமலை, திருவாரூர்ப் பதிகங்களும் இத்திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. மூன்றாம் திருமுறையுள் 19 பகுதிகள் இடம் பெற்றுள்ளன. நான்காம் திருமுறை 12 நூற் பகுதிகளைக் கொண்டுள்ளது. 238 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பலவும் தில்லையுள் பாடப்பெற்றன. பல பகுதிகள் மாலை என்ற பெயரில் அமைந்துள்ளன. நால்வர் பெருமக்களைப் போற்றிப் பாடிய நான்கு மாலைகளும் இப்பகுதியிலேயே இடம் பெற்றுள்ளன. ஐந்தாம் திருமுறை 56 பகுதிகளையும் 604 பாடல்களையும் கொண்டது. இவற்றை முருகன் பாசுரங்கள் என்றும், திருத்தணிகைப் பகுதி என்றும் கூறுவர். ஆறாவது திருமுறை பெரும் சிறப்புடையது. அடிகளாரின், சாதி மத பேதமற்ற மனிதகுல நேயத்தையும், ஆன்மநேய ஒருமைப்பாட்டையும்,

அவர் நிறுவிய சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியையும் விளக்கும் அரிய பாடல்கள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

வள்ளலார் - பாடல்கள்

வள்ளலாரின் கவிதைகள் எளிய இனிய தமிழில் அமைந்தவை. சந்த அழகு நிரம்பியவை. ஓரிருமுறை படித்தாலே நினைவில் நிற்கும் இயல்புடையவை. உயிர் இரக்கமும், அன்பு உணர்வும், மனிதகுல நேயமும் பொதிந்து கிடப்பவை.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்

என்ற அவரது கருணைப் பெருக்கும்,

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

என்ற அவரது இறை இலக்கணமும், பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற அவரது உலகவர்க்கான அறிவுரையும்,

கருணை இலா ஆட்சிக் கடுகி ஒழிக
அருள்நிறைந்த சன்மார்க்கர் ஆள்க

என்ற அவரது உளக் குமுறல்களும்,

சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்

என்ற அவரது சமூகம் சார்ந்த சினமும் பெரிதும் சிறப்புடையன. வள்ளலார் கவிதைகள் தமிழ் இலக்கிய வளத்திற்கு மேலும் சிறப்புச் சேர்ப்பன.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை

பிற்காலக் கம்பர் என்று போற்றப்படுபவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. இவர் திருவாவடுதுறையிலும், மயிலாடுதுறையிலும் தங்கியிருந்து அரிய பெரிய சைவ நூல்கள் பலவற்றைப் படைத்தளித்தார். பல மாணாக்கர்களுக்கு இலக்கண இலக்கியப் பாடங்களைக் கற்பித்தார்.

பல தலங்களுக்குப் பெருங்காப்பிய அழகோடு இவரால் தலபுராணங்கள் இயற்றப்பட்டன. ஒரு நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் இவரால் இயற்றப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுச் சைவத் திருத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவன், உமை, முருகன், விநாயகர் முதலிய கடவுளர் மேல் இச்சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றுள்ளன. சேக்கிழார் பிள்ளைத் தமிழ், திருக்குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ், திருநாகைக்காரோணப் புராணம், திருவாரூர் தியாகராஜ லீலை, திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழ், துறைசைக் கலம்பகம், மாயூரப் புராணம் முதலியன இவர் இயற்றிய நூல்களுள் சில. இவர் இயற்றிய தல புராணங்களுள் சில அடுத்துவரும் பகுதியில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

தமிழுக்கு அணி

மேற்குறித்த சைவத்தமிழ் இலக்கியங்கள் அல்லாது சிவன், உமை, முருகன், விநாயகன் முதலிய கடவுளர் மீது பாடப்பெற்ற ஏராளமான சிற்றிலக்கியங்களும், தனிப்பாடல்களும் தமிழில் உள்ளன. அவற்றை எல்லாம் அறிமுகப்படுத்த இப்பகுதியில் போதிய வாய்ப்பு அமையவில்லை. அம்மை குறித்த நூல்களுள் அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதி சிறப்புடையது. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து, பாம்பன் சுவாமிகள், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆகியோர் பாடிய முருகன் பற்றிய சிற்றிலக்கியங்கள் யாவும் சிறப்புடையன. தமிழ்மொழி வளர்ச்சியில் சைவத் தமிழ் இலக்கியங்கள் வகிக்கும் சிறப்பிடத்தை ஒருவாறு இப்பகுதி இனங்காட்டுகிறது. சைவச் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை நம்மை பிரமிக்க வைக்கின்றன. சமயம் சார்ந்து மொழி வளர்ச்சி பெற்ற வரலாற்றை இதைப் போல் வேறு மொழிகளில் காண இயலவில்லை. யாப்பியல், சந்தம், புத்திலக்கிய வடிவங்கள், சமூக நலம் குறித்த பல்துறைச் சைவ இலக்கியங்கள் தமிழ்மொழிக்கு அழகு சேர்த்துள்ளன.

4. புராணத் தமிழ் இலக்கியங்கள்

சைவ சமய இலக்கிய வகைகளுள் ஒன்று தலபுராணங்கள். ஸ்தலம் என்ற வடசொல் தமிழில், தலம் என்று திரிந்து வழங்கி வருகிறது. தலம் என்ற சொல்லுக்கு இடம் என்பது பொருள். என்றாலும், சமயத்துறையில் இச்சொல்லுக்கு இறைவன் எழுந்தருளியுள்ள இடம் என்றே பொருள் கொள்ளப்பட்டுவருகிறது. தலயாத்திரை, தல விசேடம், தல விருட்சம் என்ற தொடர்களில் இப்பொருள் அமைந்திருத்தலைக் காணலாம். இவற்றைப்போல், இறைவன் எழுந்தருளி அருள் வழங்கும் ஓர் ஊரின், பழைய வரலாறு கூறும் நூலைச் சைவர்கள் தலபுராணம் என்று கூறுவர். தேவார மூவர்களால் பாடப்பெற்ற தலங்கள் பிற்காலத்தில் பெருஞ்சிறப்புப் பெற்றன. அவ்வாறே, திருவாசகப் பாடல் பெற்ற தலங்களும் சிறந்தன. புலமை நலம் மிக்க சைவக் கவிஞர்கள், இத்தகு தலங்களின் பெருமை பேசும் அழகிய நூல்களை இயற்றினர். சமயத்துறையைச் சார்ந்த மக்களின் நம்பிக்கைகளை, மேலும் வளர்த்து வளம் பெறச் செய்ய, இந்நூல்கள் பெரிதும் துணை நின்றன. இத்தகு தல புராணங்கள், பெரிய அளவில் சிவனைக் குறித்தே எழுந்தன. முருகத் தலங்கள் குறித்து மிகச் சிலவே பாடப்பெற்றுள்ளன. உமை, விநாயகர் தலங்கள் தனியே புராணங்களைப் பெறவில்லை. இத்தகு தல

புராணங்கள் குறித்த ஒரு சிறு அறிமுகமாகவே இப்பகுதி அமைகிறது. தலபுராணங்களுள் பல, மிகுந்த இலக்கியத் தரமும், சுவையும் மிக்கனவாக அமைந்துள்ளன.

தல புராணங்கள்

சமய வாழ்க்கை என்பது, அளவற்ற நம்பிக்கையைப் பற்றுக்கோடாகக் கொண்டு அமைவது. சிறப்புமிக்க இறைவன் அருள் வெளிப்பட்ட தலங்களும், அடியவர்கள் துன்பநீக்கம் பெற்று மகிழ்ந்த தலங்களும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. பயண வசதிகள் இல்லாத காலங்களிலும், மக்கள் நெடுந்தூரம் பயணம் செய்து இத்தகு தலங்களை வழிபட்டு மகிழ்ந்தனர். தாங்கள் வாழும் ஊரில் ஒரு சிவாலயம் இருக்கவும், அங்கே சென்று வழிபடாது, குறிப்பிட்ட தலங்களை நாடிச்செல்லும் போக்கு உருவாயிற்று. எல்லாத் தலத்திலும் இருக்கும் இறைவன் ஒருவனே. எங்கே வேண்டுமானாலும், உண்மையான அன்பு பூண்டு, ஈடுபாட்டுடன் வழிபட்டால் இறைவன் அருளைப் பெற முடியும் என்ற எண்ணம் வளர்ச்சி பெறாத காலத்தில், அவ்வப் பகுதியில் வாழ்ந்த சமய அறிஞர்கள், தத்தம் ஊர் குறித்த சிறப்புக்களைப் புராணங்களாக எழுதி வெளியிட்டு மக்களை ஈர்க்க முற்பட்டனர். தலப்பெருமை, எழுந்தருளியுள்ள இறைவன் (மூர்த்தி) அருளிப்பாடு, துன்பத்தையும் நோய்களையும் நீக்கி நலமளிக்க வல்ல நீர்நிலைகள் (தீர்த்தம்) ஆகியவற்றின் சிறப்புக்களை இத்தகு நூல்கள் விரித்துரைத்தன. வரலாற்று நிகழ்வுகள், செவிவழிச் செய்திகள் இவற்றோடு, சில கற்பனைக் கூறுகளையும் கலந்து இயற்றப்பட்ட தல புராணங்கள், மக்களை உள்ளூர் ஆலயத்தின் பெருமையை உணர்ந்து வழிபடத் தடம் அமைத்தன. பெரும் புலமைமிக்க கவிஞர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டகாலை, பெருங்காப்பியங்களுக்கு இணையாகத் தலபுராணங்கள் சிறப்புப் பெற்றன. சமய நம்பிக்கை பெருகவும்,

தத்துவக் கூறுகள் விளக்கம் பெறவும், தலபுராணங்கள் பெரிதும் துணை நின்றன.

தலங்களின் சிறப்புக்கள்

குறிப்பிட்ட சில தலங்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. சிவத்தலங்கள் பல்வேறு சிறப்புக்களை உள்ளடக்கிப் பலவாறாகப் பாகுபடுத்தப்பட்டன. எண்ணிக்கையிட்டுத் தனித்துச் சுட்டப்பட்டன. 1. தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் 2. திருவாசகப் பாடல்பெற்ற தலங்கள் 3. திருவிசைப்பாப் பாடல்பெற்ற தலங்கள் 4. திருப்புகழ்ப் பாடல் பெற்ற தலங்கள் 5. சிவன் திருவிளையாடல் நிகழ்த்திய தலங்கள் 6. அட்ட வீரட்டத் தலங்கள் 7. சப்த விடங்கத் தலங்கள் 8. பஞ்ச பூதத் தலங்கள் 9. முத்தித் தலங்கள் 10.நாயன்மார் வாழ்வியல் அற்புதம் நிகழ்ந்த தலங்கள் 11.புராண வரலாற்று நிகழ்வு குறித்த தலங்கள் 12.மகரிஷிகளும், மாமுனிவர்களும் வழிபட்ட தலங்கள் 13.குறித்த நோய் தீர்க்கும் தலங்கள் 14.சித்த மூர்த்திகள் வாழ்ந்த தலங்கள் என்றெல்லாம் சிவத்தலங்களும், முருகத்தலங்களும், தனி எடுத்து முன் நிறுத்தப்பட்டன. இவற்றை எல்லாம் தலபுராணங்கள் உள்வாங்கிக்கொண்டு இலக்கிய எழிலோடு கிளைத்தன. இத்தகு தலபுராணங்கள் தமிழ் மொழியில், இருநூற்றுக்கும் மேலாக உள்ளன. எனினும் இவை சேக்கிழாரின் பெரியபுராணத்தைப் போல் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டு அமைந்தில.

முப்பெரும் புராணங்கள்

தமிழ் மொழியில் எழுந்த புராணங்களுள், மூன்றினை மட்டும் வேறு பிரித்துச் சிவபெருமானின் மூன்று கண்களோடும் ஒப்பிட்டு உரைத்தனர். இவற்றை முப்பெரும் புராணம் என்பது மரபு. சேக்கிழாரின் பெரியபுராணத்தைச் சிவனின் வலக்கண் என்று போற்றுவர். பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடல்

புராணத்தைச் சிவனின் இடக்கண்ணுடன் ஒப்புமை கூறுவர். கச்சியப்ப சிவாசாரியரின் கந்தபுராணத்தைச் சிவனின் நெற்றிக்கண்ணுடன் இணைத்துப் பேசுவர். இவற்றுள் மதுரைத் தல புராணமாகப் போற்றப்படுவது திருவிளையாடல்புராணம். ஒரு நகரத்தில் சிவபெருமான், தம் அடியவர்களோடும், சிற்றுயிர்களோடும் நிகழ்த்திய விளையாட்டு நிகழ்வுகளை இந்நூல் அழகுடன் விரித்துரைத்து ஒரு பெருங்காப்பியமாக உயர்ந்துள்ளது. இறைவனும் அடியவர்களும் ஒருவர்பால் ஒருவர் அருளும் அன்பும் பூண்டு ஒழுகிய திறம், பெரியபுராணத்திலும் உண்டு. திருவிளையாடல் புராணத்திலும் உண்டு. எனினும் இவற்றிடையே சிறிது வேறுபாடு உண்டு. பெரியபுராணம், செயற்கரிய செயல் செய்த மானுடர்கள், இறைவனை மண்ணின்பால் ஈர்த்த வரலாறுகளின் தொகுதி. இதில் அடியவர் உறைப்பு மிகுந்து காணப்படும். திருவிளையாடல் புராணம், சிவபெருமான் அடியவர்கள் பாலும், சிற்றுயிர்கள் பாலும் கொண்ட அளப்பரிய அன்பால், கருணை மிகுந்து, தாமே மண்ணுலகில் வந்து அருள்செய்த வரலாறுகளைக் கூறுவது. இதில் இறைவனின் கருணை வெளிப்பாடு மிகுந்து காணப்படும்.

திருவிளையாடற்புராணம்

இந்தியத் தொன்நகரங்களுள் ஒன்று மதுரை. சிவராஜதானியாக விளங்கும் சிறப்புமிக்க நகரம் இது. திட்டமிட்ட நகர் அமைப்பு இங்கே காணப்படுகிறது. மூன்றாவது தமிழ்ச்சங்கம் இங்கே நிலவியிருந்ததாக இறையனார் களவியல் என்ற நூல் உரையில் குறிப்புக்கள் உள்ளன. வியாசர் பாரதத்தில் மதுரையை ஆண்ட பாண்டியர் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. தமிழ் தொன்னூல்களான பரிபாடல், திருமுருகாற்றுப்படை முதலியவற்றில் மதுரை குறிக்கப்பட்டுள்ளது. அறுபடை வீடுகளுள் திருப்பரங் குன்றமும், பழமுதிர்சோலையும் இந்நகரைச் சார்ந்து அமைந்துள்ளன. மதுரைத் திருக்கோயில் மிகப் பெரியது.

அழகிய கட்டுமானம் கொண்டது. அற்புதச் சிற்பங்கள் நிறைந்தது. இத்தலத்து இறைவி அங்கயற்கண் அம்மை. மீனாட்சி என்பதே பெருவழக்கு. இறைவன் ஆலவாய் அழகன். சோமசுந்தரர், சுந்தரேசுவரர் என்பன வேறு பெயர்கள். தில்லையைப் போல் இந்நகர் குறித்து எழுந்த சமய இலக்கியங்கள் பலவாகும். சமயாசாரியர் நால்வராலும் பாடப்பெற்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புடையது. இத்தலத்தில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களை அறுபத்து நான்கு என்று குறித்துள்ளனர்.

மதுரை இலக்கியங்கள்

மதுரையில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்கள் குறித்துப் பலநூல்கள் தோற்றம் கொண்டன. செல்வி நகர் பெரும் பற்றப்புலியூர் நம்பி என்பார், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் என்ற நூல் ஒன்றைப் பாடியுள்ளார். வீமநாத பண்டிதர், கடம்பவன புராணம் என்ற பெயரில் ஒரு புராண நூல் மதுரையைக் குறித்துப் பாடியுள்ளார். மதுரைக்குக் கடம்பவனம் என்பதும் ஒரு பெயர். இந்நூலுள் இடம் பெற்றுள்ள லீலா சங்கிரக அத்தியாயம் என்ற பகுதியில், மதுரைத் திருவிளையாடல்கள் யாவும் சுருக்கமாகப் பாடப்பெற்றுள்ளன. அனதாரியப்பர் என்பவர் மதுரைத் திருவிளையாடல்களைத் திரட்டிச் சுந்தர பாண்டியம் என்ற அழகிய நூலை இயற்றியுள்ளார். வீரபத்திரக் கம்பர் என்பவர் திருவிளையாடல் பயகர மாலை என்ற பெயரில் ஒரு நூல் பாடி வழங்கியுள்ளார். வடமொழியிலும் மதுரைத் திருவிளையாடல் புராணம் விரித்துரைக்கும் ஆலாசிய மான்யம் என்ற நூல் ஒன்று உள்ளது. இதன் தமிழ் மொழிபெயர்ப்பு என்றே பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம் கூறப்படுகிறது. என்றாலும், கம்பனைப் போல், வடமொழிச் சாயல் இன்றி, பரஞ்சோதிமுனிவர், தமிழ் நலம் சிறக்க முதல் நூலாகவே திருவிளையாடற் புராணத்தைப் பாடி வழங்கியுள்ளார்.

பரஞ்சோதி முனிவர்

சோழ வளநாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க பழம் பகுதிகளுள் ஒன்று திருமறைக்காடு. வேதாரண்யம் என்று வடமொழியாளர் இந்நகரை அழைத்தனர். இந்நகரில், சுத்த சைவ வேளாளர் மரபில், மீனாட்சி சுந்தர தேசிகர் என்பாரின் மகனாகப் பரஞ்சோதி முனிவர் பிறந்தார். மதுரையில் சற்குருவை அடைந்தார். அவரிடம் ஞானோபதேசம் பெற்றுச் சைவ சந்நியாசம் பூண்டார். மதுரை அருள்மிகு மீனாட்சியம்மை இவர் கனவில் தோன்றி, மதுரையில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களைப் பாடுமாறு பணித்தார். சத்தியாய் என்ற மங்கலமொழியில் தொடங்கி, 64 திருவிளையாடல்களையும் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களாக 3363 செய்யுள்களில் பெருங்காப்பியமாகத் திருவிளையாடற்புராணத்தைப் பரஞ்சோதி முனிவர் பாடி, அருள்மிகு சொக்கநாதர் சந்நிதியில் அரங்கேற்றம் செய்தார். மேலும், இவரால் மதுரை அறுபத்துநான்கு திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்து அந்தாதி, வேதாரணிய புராணம் என்பனவும் பாடப்பெற்றுள்ளன. வேதாரண்யத்திற்கு அருகில், பரஞ்சோதிபுரம் என்ற ஒரு சிற்றூர் உள்ளது. அங்குள்ள சிவாலயத்தில் இம்முனிவரின் திருவுருவச்சிலை ஒன்று உள்ளது. சேது புராணம் பாடிய நிரம்ப அழகிய தேசிகர், அதிவீரராமபாண்டியர், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் ஆகியோருடன் இவர் வரலாற்றை இணைத்துக் கூறுவர். இவர் காலம் இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகத் தெரிகிறது.

திருவிளையாடற் புராணம் - வாழ்த்து

திருவிளையாடற்புராணம், அழகிய விநாயகர் காப்புச் செய்யுள் ஒன்றுடன் தொடங்குகின்றது.

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே (காப்பு)

சிவனே, சக்தியாகவும் சிவமாகவும் பிரிந்து நின்று முத்திப்பேறு. அருளும் முதல்வனாகத் திகழ்கின்றான் என்பது பாடல் கருத்து. சைவ சமய நூல்கள் பலவும், இம்மை மறுமை இன்பங்களுக்கு மட்டும் வழிகாட்டுவனவாக அமையாது, உலக நலம் குறித்த உயர் சிந்தனைகளையும் கொண்டு இலங்குவன. வேதங்கள் சிறக்க வேண்டும்; மேகங்கள் கருணை கூர்ந்து மழை வளம் தருதல் வேண்டும்; உலகெலாம் பல வளங்களும் பெருக வேண்டும்; அறங்கள் எங்கணும் பரவிடல் வேண்டும்; உயிர்க் குலங்களுக்கெல்லாம் இன்பம் சிறத்தல் வேண்டும்; மன்னன் செங்கோல் ஆட்சி சிறத்தல் வேண்டும் என்றெல்லாம் பரஞ்சோதி முனிவரும் வாழ்த்தி மகிழ்கிறார்.

மல்குக வேத வேள்வி
வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும்
பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட்கு எல்லாம்
நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலகம் எல்லாம்
புரவலன் செங்கோல் வாழ்க (வாழ்த்து)

இத்தகு அரிய பாடல்கள், சைவம், சமூக நலநாட்டமிக்க மாபெரும் விரிவு கொண்டிருந்தமையை உறுதி செய்கின்றன.

நூற்பயன் கூறல்

முதற்கண் நிற்கும் மதுரைக் காண்டம் தொடங்கப் படுவதற்கு முன்னதாகவே, காப்பிய உறுப்புகள் பலவும் முன்னே

வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. காப்பு, வாழ்த்து, நூற்பயன், கடவுள் வாழ்த்து, பாயிரம், அவையடக்கம், திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கயிலாயச் சிறப்பு, புராண வரலாறு, தல விசேடம், தீர்த்த விசேடம், மூர்த்தி விசேடம், பதிகம் எனப்பல பகுதிகள் 343 செய்யுள்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இந்நூலைப் படித்தாலும், படிக்கக் கேட்டாலும் என்னென்ன இன்பங்கள் வந்து சேரும் என்று நூற்பயன் கூறும் பாடல் பட்டியல் இட்டுச் செல்கிறது. 1. சங்க நிதி, பதுமநிதி செல்வம் ஓங்கும். 2. நன்மக்கட்பேறு வாய்க்கும். 3. பகை ஒழியும். 4. திருமணம் கைகூடும். 5.நோய்கள் அணுகாது. 6. நீண்ட வாழ்நாள் அமையும் 7. தேவர் உலக வாழ்வு கூடும். 8. சிவன்தாள் மலர்களில் சேர்ப்பிக்கும்.

சமயம், மக்களுக்கு நம்பிக்கையூட்டும் மாபெரும் அமைப்பாகும். இந்த நம்பிக்கையே சமய வாழ்வில் அடித்தளம். இத்தகு அறிவிப்புகள் மனித மன உறுதியை வளர்ப்பதோடு, துன்பங்களை எதிர்கொள்ளும் வலிமையையும் வழங்கவல்லன.

மாணிக்கவாசகர் அருள் வரலாறு

முதற்கண்ணதாகிய மதுரைக் காண்டம், இந்திரன் பழி தீர்த்த படலம் முதலாக, வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம் ஈறாக 18 படலங்களைக் கொண்டு அமைந்துள்ளது. இரண்டாவதாகிய கூடற்காண்டத்தில் 30 படலங்களும், மூன்றாவதாகிய திருவாலவாய்க் காண்டத்தில் 16 படலங்களும் இடம் பெற்றுள்ளன. பெரியபுராண வரலாற்றில் விரித்துரைக்கப்பட்ட, திருஞானசம்பந்தர் வரலாற்றில் காணப்படும் மதுரை நிகழ்வுகள், 63 ஆவது படலமாகிய சமணரைக் கழுவேற்றிய படலத்தால் அழகுற விரித்துரைக்கப்படுகிறது. நால்வர் பெருமக்களுள் ஒருவராகிய மாணிக்கவாசகர் வரலாறு, சேக்கிழாரின் பெரியபுராணத்தில் இடம் பெறவில்லை. காரணம், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருத்தொண்டத்தொகையில்

மாணிக்கவாசகர் பெயர் குறிக்கப்படவில்லை. இந்தக் குறை நீங்கத் திருவிளையாடற்புராணத்தில் மிக விரிவாக, மாணிக்கவாசகர் அருள் வரலாற்றை, 1. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம், 2. நரி பரியாகிய படலம், 3. பரி நரியாகிய படலம், 4. மண் சுமந்த படலம் என்ற நான்கு படலங்கள் வாயிலாக ஆசிரியர் விரித்துரைத்துள்ளார். மாணிக்கவாசகரின் முழுமையான வரலாற்றை உணர்ந்து கொள்வதற்குத் திருவிளையாடற் புராணமே நமக்குத் துணை நிற்கிறது. சேக்கிழாரின் பெரியபுராணத்தை இவர் நன்கு கற்றறிந்துள்ளார் என்பதை,

> **அன்றுசிறுத் தொண்டர்இடும் பிள்ளைக் கறியமுதும்**
> **மென்று சுவைதெரிந்த வேடனிட்ட ஊனும்போல்**
> **நன்றுநரை யாட்டியிடு பிட்டு நயந்தருந்தி**
> **என்றுமடி யார்க்கு எளிவந்தாய் எந்தாயே,** (ம.சு.ப.85)

என்ற பாடல் எடுத்துரைக்கிறது. மாணிக்கம் விற்ற படலத்தில் இவர் நவரத்தினங்களின் வகைகளையும், நரி பரியாகிய படலத்தில் பல்வேறு குதிரைகளின் இலக்கணங்களையும் விரித்துரைக்கும் பகுதி, இவர் உலகியல் அறிவுக்கும், பல்துறைப் புலமைக்கும் சான்று கூறி நிற்கின்றன.

தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்

பரஞ்சோதி முனிவரின் இத்திருவிளையாடற் புராணத்தில் இடம் பெற்றுள்ள, தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம் அனைவரையும் எளிதில் கவரும் தன்மை கொண்டது. கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி என்று தொடங்கும் ஒரு குறுந்தொகை அகப்பாடலை அடிப்படையாகக் கொண்டு, மிக அற்புதமாக ஆசிரியர் இக்கதையை நடத்துகிறார். கற்பனையும், வருணனையும் சிறந்திலங்கும் பகுதி இது. செவ்வந்திப் பூவும், மகிழம்பூவும் முதிர்ந்து செடியிலிருந்து தரையில் வீழ்ந்தன. அப்போதும் அவற்றிடையே சிறிதளவு தேன் தங்கியிருந்தது.

வண்டுகள், அதன்கண் நின்ற தேனை நாடிவந்து சுவைத்து மகிழ்ந்தன. இந்தக் காட்சி நற்குலத்தில் பிறந்தோர், வறுமைக் காலத்திலும், தம்மை நாடி வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாது வழங்கும் பண்பினை நினைப்பிப்பதாக அமைந்துள்ளது என்று பாடுகிறார். பல மலர்களிலும் தோய்ந்து அவற்றின் மணங்களை எல்லாம் திரட்டிக் கொண்டு வரும் தென்றலை,

அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல் இயங்கும் அன்றே

(த.பொ.ப.19)

என்று ஒப்புமைகாட்டி மகிழ்விக்கிறார். திருமணம் மேற்கொள்ளாத இளைஞர்கள், இறைவன் திருமேனி தீண்டிப் பூசிக்கத் தகுதி உடையவர்கள் அல்லர் என்ற ஆகமநூற் கருத்தை ஆசிரியர் இப்பகுதியில் நினைவூட்டுகிறார். நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சாதித்த நக்கீரர் வரலாறு இப்பகுதியில் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

ஆசிரியரின் தமிழ்க் காதல்

தமிழ் வளர்த்த மதுரையில், செந்தமிழ்ச் சொக்கன் திருவிளையாடல்களை விரித்துரைக்கும் இந்நூலுள் பரஞ்சோதி முனிவர், தமிழ்மொழியின் பெருமையைப் பலபட எடுத்துரைத்து மகிழ்கிறார். சிவபெருமானே, சங்கத்தில் இடம் பெற்று ஆராய்ந்த சிறப்புடையது தமிழ்மொழி. இதனை, இலக்கண எல்லைகள் கூட இல்லாத உலக மொழிகளுள் ஒன்றாக எண்ணுதல் பொருந்தாது. இதனைத் தனித்து நிறுத்திப் போற்ற வேண்டும் என்பது ஆசிரியரின் உள்ளமாகிறது.

கண்ணுதற் பெருங் கடவுளும்
கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த
இப்பசுந்தமிழ் ஏனை

மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா
எண்ணவும் படுமோ (தி.பு.57)

இத்தமிழ் மீது கொண்ட காதலால்தான் சிவபெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகப் பரவை நாச்சியார் பால் தூது நடந்தான். முதலை வாய்ப்புகுந்த மகன் உயிர் பிழைத்து மீளவும் இத்தமிழே காரணமாக அமைந்தது. மயிலாப்பூரில் இறந்த பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பிலிருந்து, மீண்டும் ஒரு மகள் உயிர்பெற்று எழுவதற்குத் திருஞானசம்பந்தரின் தமிழே காரணமாயிற்று. வேதங்கள் பூசித்து அடைந்திருந்த திருமறைக்காட்டுச் சிவாலயக் கோபுர வாயில் கதவைத் திருநாவுக்கரசரின் தமிழே திறக்கச் செய்தது. இத்தகு ஆற்றல், தமிழைத் தவிர பிறமொழிகளுக்கு உண்டா என ஆசிரியர் வினாத் தொடுக்கிறார்.

தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும்
எலும்பு பெண் உருவாக்
கண்டதும், மறைக்கதவினைத்
திறந்ததும், கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச்
சொற்களோ சாற்றீர் (தி.பு.58)

இவ்வாறான, தமிழ்மொழியின் சிறப்புரைக்கும் பகுதிகள் இந்நூலுள் பல காணக் கிடைக்கின்றன.

ஓர் அற்புதக் கற்பனை

சைவ சித்தாந்தச் சாத்திர நூல்கள் பலவும், இந்த உலகத்தை ஓர் ஆண் மகனின் (புருடன்) வடிவமாக உருவகித்து

உரைக்கின்றன. அவ்வாறு உரைக்கும்போது உடல் உறுப்புக்களுள் பலவற்றையும் ஒவ்வோர் சிவத்தலத்துடன் ஒப்பிட்டு உரைக்கும் அரிய பகுதி ஒன்று திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம், 6ஆவது படலமாகிய வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம் என்ற பகுதியில், இரண்டு பாடல்களில், பரஞ்சோதி முனிவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவை. 1. திருவாரூர்-மூலதாரம், 2. திருஆனைக்கா-குய்யம் (மறைவிடம் -கொப்பூழ்), 3. திருஅண்ணாமலை-மணிபூரகம், 4. திருத்தில்லை-இதயம், 5. திருக்காளத்தி-கண்டம்(கழுத்து), 6. காசி-புருவமத்தி, 7. திருக்கயிலை-பிரமரந்திரம், 8. மதுரை- துவாத சாந்தம்

திருவளர் ஆரூர் மூலம்
திருவானைக் காவே குய்யம்
மருவளர் பொழில்சூழ் அண்ணா
மலைமணி பூரம் நீவிர்
இருவரும் கண்ட மன்றம்
இதயமாம்; திருக்கா ளத்தி
பொருவரும் கண்ட மாகும்
புருவ மத்தியமாம் காசி ***(வெ.தி.ப.5)***

பிறைதவழ் கயிலைக் குன்றம்
பிரமரந் திரமாம் வேதம்
அறைதரு துவாத சாந்தம்
மதுரை... (வெ.தி.ப.6)

எனவரும் பாடல் பகுதி இவ்வழகிய உருவகத்தைத் தாங்கி நிற்கிறது.

கந்தபுராணம்

சைவ சமயத்தின் முப்பெரும் புராணங்களுள் ஒன்று கந்தபுராணம். இதனைக் காஞ்சி குமர கோட்டத்து

முருகப்பெருமான் திருக்கோயிலில் அர்ச்சகராக இருந்த, கச்சியப்ப சிவாசாரியார் இயற்றினார். வடமொழியில் வழங்கும் ஸ்காந்தம் என்ற நூலைத் தழுவியே இந்நூல் இயற்றப்பெற்றது என்பர். என்றாலும், தமிழில் எழுந்த முதல் நூல் போலவே கந்தபுராணம் அமைந்துள்ளது. இந்நூல் 1. உற்பத்திக் காண்டம், 2. அசுர காண்டம், 3. மகேந்திர காண்டம், 4. யுத்த காண்டம், 5. தேவகாண்டம், 6. தட்ச காண்டம் என்ற ஆறு காண்டங்களைக் கொண்டுள்ளது. 10,346 விருத்தப் பாக்களால் இந்நூல் நடையிட்டு நிறைகிறது. கந்தபுராணத்தின் தொடக்கத்தில் இடம் பெற்றுள்ள திகட சக்கர என்ற தொடக்கம் கொண்ட காப்புச் செய்யுளை, முருகப் பெருமானே அடி எடுத்துக் கொடுத்துப் பாடச் செய்ததாக நூல் வரலாறு கூறுகிறது.

சமூக நல நாட்டம்

'கந்தபுராணத்தில் இல்லாதது எந்த புராணத்திலும் இல்லை' என்று ஒரு பழமொழி வழங்கி வருகிறது. இந்நூலின் காப்புப் பகுதியில் அமைந்துள்ள வாழ்த்துப் பாடல், உலக நலம் வேண்டி அமைக்கப்பட்டுள்ளது. இறைமை நூல் பாட வந்த சைவ நூலாசிரியர்கள் அனைவருக்கும் சமூக நலநாட்டம் மிக்கிருந்ததை இப்பாடல் இனம் காட்டுகிறது.

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்

மழை பொழிந்து மாநிலம் வளம் சிறக்கவும், நல்லாட்சி நாட்டில் நிலவவும், உயிர்க்குலம் நலம் பெற்று வாழவும், நால் வேதங்கள்

சுட்டும் அறங்கள் சிறக்கவும், வேள்விகள் சிறந்து இன்பம் கொழிக்கவும் வேண்டி வாழ்த்தும் ஆசிரியர், நிறைவாகவே சைவநீதி உலகெங்கும் விளங்க வேண்டும் என்று விரும்புகிறார். சைவ சமயம் என்று சுட்டாது, சைவ நீதி என்று சுட்டியது ஆழ்ந்த பொருள் நோக்குக் கொண்டது.

சிறந்த வாழ்த்து

முருகப் பெருமான் வாழ்த்தாக, நூல் நிறைவில் காணப்படும் வாழ்த்து, சைவ மரபில் பெரிதும் போற்றிக் கொண்டாடப்பட்டு வருகிறது. சைவ-சமய விழாக்களின் நிறைவில், பெரும்பாலும் இசைக்கப்படும் சிறந்த வாழ்த்தாக இப்பாடல் அமைகிறது. முருகனையும், அவன் படைகளையும், தேவியர்களையும் வாழ்த்தும் ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியார் நிறைவாகச் சீர் அடியார்களுக்கும் வாழ்த்துரைக்கிறார்.

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்

ஒரு வகையில் இவ்வாழ்த்து, கந்தபுராணச் செய்திகளின் அழகிய திரட்சியாகவும் அமைந்துள்ளது.

சிவ-முருக வழிபாடுகள் ஒருங்கிணைப்பு

தமிழகத்தில் நிலவியிருந்த அறுவகை வழிபாட்டு நெறிகளை வடமொழியாளர், ஷண்மதங்கள் என்பர். இவற்றுள் வைணவம் நீங்கலாக ஏனைய சமயங்கள் யாவும், ஒரு நெறியாக

சைவம் என உருப்பெற்றன. என்றாலும், ஒரு காலத்தில் முருக வழிபாட்டு நெறியினர், குமரனே முழுமுதற் கடவுள் என்று கொண்டு, சிவநெறியோடு ஒன்று கலப்பதில் தயக்கம் காட்டினர். உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன் என்று பாடல்களும் எழுந்தன. திருமுருகாற்றுப்படையிலேயே, சிவநெறி, உமை வழிபாட்டு நெறி, முருக வழிபாட்டு நெறி ஒன்று கலந்தன. என்றாலும், இக்கலப்பை முழுமையாக ஏற்கத் தயங்கிய முருக அடியார்களைத் தெளிவடையச் செய்து, சிவ வழிபாடும், முருக வழிபாடும் ஒன்றே என்பதை நிலைநாட்டினார் கச்சியப்பர். சைவ சமய வரலாற்றில், இவரைப் போல் வைணவத்தையும்-சைவத்தையும் நெருங்கி வர முருக வழிபாட்டை முன்னிறுத்தியவர் அருணகிரிநாதர். கச்சியப்பர் முயற்சி மட்டுமே வெற்றி பெற்றது.

கச்சியப்பர் கூற்று

சிவனும் முருகனும் ஒருவரே என்பதைக் கச்சியப்பர் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாயப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய

என்று கவிக் கூற்றாகப் புராணம் பாடிய கச்சியப்பர், சிவபெருமான் கூற்றாகவும் இதனை உறுதி செய்கிறார்.

சிவபெருமான் விடை

உமையம்மை சிவபிரானிடம், முருகன் பரத்துவம் குறித்து

விளக்கியருளுமாறு வேண்டுகின்றார். அப்போது சிவபெருமான் பதில் கூறியதில், முருகன் நம்மோடு பேதமற்றவன் என்ற விளக்கம் அமைகிறது. நம் சத்தியின் ஒரு கூறே முருகன். எம்மைப்போல் உலகத்து உயிர்கள் அனைத்திலும் முருகனும் பேதமின்றிக் கலந்து நிற்கிறான். குழந்தை போல் தோன்றினும் எல்லாம் அறிந்தவன். போற்றி நிற்கும் அடியார்களுக்கு எம்மைப் போல் முருகனும் சிறப்புகள், ஞானம், வீடு பேறு எல்லாம் வழங்க வல்லவன். சிவபெருமானின் விடையைக் கச்சியப்பர்,

ஆதலின் நமது சத்தி
அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போல்
பிரிவிலன் யாண்டும் நின்றான்.
ஏதமில் குழவி போல்வான்
யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க்கு அருள வல்லான்

என அழகுற எடுத்துரைத்துச் சிவநெறிக்கும், முருகன் நெறிக்கும் அன்புப் பாலம் அமைக்கிறார்.

வீரவாகு தேவர் விளக்கம்

கந்த புராணத்தில் வரும் நவ வீரர்களில் முதலாமவர் வீரவாகு. முருகன், வீரவாகுவைச் சூரபதுமனிடம் தூது அனுப்புகிறார். முருகனைச் சூரன் சிறுபிள்ளை என்று இகழ்ந்து பேசுகிறான். அக்காலை, வீரவாகு சூரனுக்கு, முருகன் - சிவனே என்பதைக் காரண-காரிய முறையில் எடுத்துரைக்கிறார்.

ஈசனே அவன் ஆடலால்
மதலை ஆயினன் காண்

ஆசிலா அவன் அறுமுகத்து
உண்மையால் அறி நீ
பேசில் ஆங்கவன் பரனொடு
பேதகன் அல்லன்
தேசுலா அகன்மணியிடைக்
கதிர்வரு திறம்போல்

மாணிக்க மணியும், அதன்கண் தோன்றும் ஒளியும் போல் சிவனும்- முருகனும் வேறுபட்டவர்கள் அல்லர் என்பதைக் கச்சியப்பர் வீரவாகு தேவர் கூற்றாக வைத்து மீண்டும் உறுதி செய்கிறார்.

பெருங்காப்பியம்

கந்தபுராணம், காப்பிய இலக்கணங்கள் யாவும் நிறைந்த ஒரு முழுமையான பெருங்காப்பியம். முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட தமிழ்ப் பெருங்காப்பியம் . செய்யுள் நடை, காப்பியப் போக்கு, பாத்திரப் புனைவு, நீதி உரைத்தல் என்பனவற்றில் இராம காதையோடு பெரிதும் ஒத்து நடையிடுகிறது கந்தபுராணம். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் ஒடுக்க வல்ல ஆற்றல், இறைவனின் ஞானத்திற்கு மட்டுமே உண்டு என்பதைத் தத்துவ வடிவில் விளக்குவது. முருகன் வேலே ஞானமாகக் குறிக்கப்படுகிறது. கம்பீரமான செய்யுள் நடை: தேர்ந்தெடுத்த சொல்லாட்சிகள்: அணிகளின் கோலங்கள் யாவற்றொடும் பக்திச் சிறப்பைக் கலந்து தரும் உயர் நூல் கந்தபுராணம்.

தமிழருக்குக் கொடை

நூற்றுக்கணக்கான கிளைக் கதைகள் இந்நூலுள், தக்க இடங்களில் இணைக்கப்பட்டுள்ளன. வள்ளியம்மை திருமணப் படலம், தமிழ்க் காதல் நெறி நின்று பாடப்பட்டுள்ளது. முருக

விரதங்கள் பலவும் இந்நூலுள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அறநெறிகளையும், உயர்ந்த நீதி மொழிகளையும் கச்சியப்பர் கந்தபுராணத்தில் இடையிடையே இடம்பெறச் செய்துள்ளார். சைவநெறி நிற்பவர்கள், கந்தர் சஷ்டி முதலாய விரத நாள்களில், கந்தபுராணத்தைப் பாராயண நூலாகக் கொண்டு ஓதி வருகின்றனர். வீரசோழியம் என்ற இலக்கண நூல் தோன்றிய காலத்திற்குப் பிற்பட்ட நூல் கந்த புராணம். ஆராய்ச்சியாளர்கள், இந்நூலை பதினோராவது நூற்றாண்டின் இறுதியில் அல்லது, பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ந்து உரைத்துள்ளனர். சைவ சமயம் தமிழுக்கு அளித்த சிறந்த கொடைகளுள் ஒன்று கச்சியப்பரின் கந்தபுராணம்.

கோயிற்புராணம்

தமிழ்நாட்டுச் சைவப் பெருமக்களால், முதன்மைத் தலமாகக் கருதத்தக்கது தில்லை. இத்தலத்திற்குக் கோயில், மன்று, பொது, சிற்றம்பலம், புலியூர், பெரும்பற்றப் புலியூர் முதலாக வேறுபல பெயர்களும் வழங்கி வருகின்றன. தில்லை குறித்த தல புராணங்கள் பல உள்ளன. அவற்றுள் முதன்மையாகக் கருதப்படுவது, தில்லைத் தீட்சிதர்களுள் ஒருவரும், சைவ சந்தானாசாரியருள் நான்காமவருமாகிய, உமாபதி சிவாசாரியரால் இயற்றப்பட்ட கோயில் புராணமே ஆகும். இந்நூல், ஐந்து சருக்கங்களைக் கொண்ட, செய்யுள் நடையில் அமைந்த சிறப்புடையது. விநாயகர் காப்பு ஒன்றும், பாயிரத்தின் முதலில் நூல் வரலாறு குறித்த பாடல் ஒன்றும் காணப்படுகிறது.

பூங்கமலத்து அயனும் மலர்ப்
புண்டரிகக் கண்ணானும்
தாங்குபல புவனமும் மேல்
அகலமுமாய் அகலாத

ஓங்கும் ஒளி வெளியே நின்று
உலகுதொழ நடமாடும்
தேம்கமழும் பொழில் தில்லைத்
திருச்சிற்றம் பலம் போற்றி (நூல் வரலாறு)

என்பது அப்பாடல். இந்நூலுள், 1. பாயிரம், 2. வியாக்கிரபாதச் சருக்கம், 3. பதஞ்சலிச் சருக்கம், 4. நடராசச் சருக்கம், 5.இரணிய வன்மச் சருக்கம், 6. திருவிழாச் சருக்கம் என்ற பகுதிகள் அமைந்துள்ளன.

பாயிரப் பகுதி

பாயிரப் பகுதியில் தில்லைக்குப் பொன் வேய்ந்தவன். சூரிய குலத்தில் வந்த அனபாய சோழன் என்பவன் என்றும், அவனுக்குத் திருநீற்றுச் சோழன் என்ற பெயரும் உண்டு என்றும் குறிக்கப்பட்டுள்ளன. தில்லையில் சிவபெருமான் அநாதியான நிலையை மேற்கொண்டுள்ளான். 1. ஞானமாகிய ஒளி, 2. பஞ்சகிருத்தியம், 3. ஆன்மாக்கள், 4. பஞ்சபாசம், 5. திருவெண்ணீறு, 6. அஞ்செழுத்து ஆகிய ஆறும் அநாதியாகிய பொருள்கள் என்று பாயிரம் குறிப்பிடுகிறது. நடராசப் பெருமான் இத்தில்லைத் திருத்தலத்தில் தனது ஆனந்த நடனத்தை, வியாக்கிரபாத முனிவருக்கும், பதஞ்சலி முனிவருக்கும் காட்டியருளி, மேல் இரணியவன்மனுக்கும் புலப்படுத்திய வரலாற்றுச் செய்திகளே இந்நூலுள் விரித்துரைக்கப்படுவனவாக ஆசிரியர் பாயிரப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

தில்லைத் தல வரலாறு

முதலாவதாகிய வியாக்கிரபாதச் சருக்கத்தில், மத்தியந்த முனிவரின் குமாரராகிய வியாக்கிரபாத முனிவருக்கு, தில்லைச் சிற்றம்பலவன் திருக்கூத்துக் காட்சிக் காட்டியருளிய திறம் விரித்துரைக்கப்பட்டுள்ளது. சிவபூசைக்குரிய மலர்களைப் பறிக்க

மரம் ஏறும்போது வழுக்காமல் நிற்கப் புலிக் கால்களையும் கைகளையும் வேண்டிப் பெற்றவர் இவர். பூக்களைப் பழுதின்றி எடுப்பதற்குக் கைகளின் நக இடுக்கில் கண்களையும் பெற்றவர். இவர் வசிட்ட முனிவரின் தங்கையை மணந்தவர். இவர் குமாரரே உபமன்யு முனிவர். ஒரு தைப் பூசத்துடன் கூடிய வியாழக்கிழமை சித்தயோக நாளில், பதஞ்சலி முனிவரும், இவரும் இறைவன் ஆனந்த நடனத்தைக் கண்டு மகிழ்ந்தனர். ஆதி சேடனே பதஞ்சலி முனிவராக அவதரித்துத் திருநடம் காணப்பெற்றார் என இரண்டாம் சருக்கம் பேசுகிறது. நடராசச் சருக்கத்தில் இறைவன் ஆனந்தத் தாண்டவம் காட்டியருளிய சிறப்பு விரித்துரைக்கப்பட்டுள்ளது. இரணியவன்மச் சருக்கத்தில் கௌட தேசத்து அரசன் சிங்கவன்மன் என்பவன், சிதம்பரம் வந்து, சிவகங்கைத் தீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கி, இரணிய வன்மன் என்ற பெயர் பெற்ற வரலாறு அடுத்துப் பேசப்படுகிறது. இவன் இயற்றிய தில்லைத் திருப்பணிகள் இப்பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன. சைவ சித்தாந்த நுண்பொருள்களை ஆசிரியர் இப்பகுதியில் விரித்துரைத்துள்ளார்.

நடராசர் அபிடேக நாள்கள்

நிறைவாக அமைந்துள்ள திருவிழாச் சருக்கத்தில், தில்லையில் ஆண்டு முழுவதும் நடைபெறும் விழாக்களைப் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. வசந்தவிழா, நீர் விளையாட்டு விழா, பவித்திர விழா, தீப விழா, திருவாதிரை விழா, பூச விழா, ஆனி உத்திர விழா, மாசி விழா முதலியன எப்போது, எவ்வாறு நிகழ்த்தப்பட்டு வந்தன என்பதை ஆசிரியர் இனங்காட்டியுள்ளார். நடராசப் பெருமானுக்கு, ஆண்டுக்கு அபிடேக நாள்கள் ஆறு மட்டுமே. இந்நூல் மார்கழித் திருவாதிரை அபிடேகத்தை விடியற்கால அபிடேகமாகவும், மாசி சதுர்த்தசி அபிடேகத்தைக் காலசந்தியாகவும், சித்திரைத் திருவோண அபிடேகத்தை உச்சிக்

காலமாகவும், ஆனி உத்திர அபிடேகத்தை திரு அந்திக் காப்பாகவும், ஆவணி மாத சதுர்த்தசி அபிடேகத்தை இரண்டாங்காலமாகவும், புரட்டாசிச் சதுர்த்தசி அபிடேகத்தை அர்த்தசாமமாகவும், தேவர்கள் பார்வையில் அடையாளப்படுத்துகிறது. இதனை,

சித்திரையில் ஓணமுதல் சீர்ஆனி உத்திரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும் - பத்தி
மாசி சுரி கன்னி மருவு சதுர்த்தசி மன்றுள்
ஈசர் அபிடேக தின மாம்

என்ற பாடல் அறிவித்து நிற்கிறது. தில்லையில் மட்டுமே ஏழுகால பூசைகள் நடைபெற்று வருகின்றன. இத்தலவிருட்சம் தில்லை மரம். இத்தலம் குறித்த வேறு புராணங்கள் மூன்று உள்ளன. தில்லையில் ஐந்து சபைகள் உள்ளன. இத்தலத்தில் நடராசப் பெருமானுக்குப் பின்னுள்ள இரகசியத்தானம் அருவம், நடராசப் பெருமான் உருவம், படிகலிங்கம் அருவுருவம், இத்தலத்துக்குரிய ஆகமம் மகுடாகமம். இச்செய்திகள் யாவும் கோயிற்புராணத்துள் காணப்படுகின்றன. நிறைவில்,

மழை வழங்குக; மன்னவன் ஓங்குக;
பிழைஇல் பல்வளம் எல்லாம் பிறங்குக
தழைக அஞ்செழுத்து ஓசை தரைஎலாம்;
பழைய வைதிக சைவம் பரக்கவே(வாழ்த்து)

என்ற அரிய வாழ்த்துடன் நூல் நிறைகிறது.

காஞ்சிப் புராணம்

தமிழ் நாட்டின் தொன் நகரங்களுள் ஒன்று காஞ்சிபுரம். தொண்டை நாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்த காஞ்சிபுரம், சிவராஜதானியாகவும் விளங்கியிருந்தது. சைவமும், வைணவமும் இந்நகரில் தழைத்து ஓங்கின. தமிழ்நாட்டு

நகரங்களிலேயே, அதிகமான திருக்கோயில்கள் அமைந்த நகரம் இதுவேயாகும். தென்தமிழிலும், வடமொழியிலும் பெரும்புலமை பெற்று விளங்கிய அறிஞர் பெருமக்கள் வாழ்ந்திருந்த பெருமைமிக்கது காஞ்சிபுரம். சிறப்புமிக்க இத்தலம் குறித்துத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த மாதவச் சிவஞானயோகிகள், காஞ்சிப்புராணம் என்ற அரிய நூல் ஒன்றை யாத்தளித்தார். மூவர் முதலிகளும், காரைக்கால் அம்மையாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் முதலிய அருளாளர்களின் பெருமை பேசி நிற்கும் சேக்கிழாரின் பெரியபுராணத்தைப் போல், சைவ நுண்பொருள் உரைக்கும் சைவ சிந்தாந்தத்திற்கு ஒளியூட்டி நிற்பது காஞ்சிப்புராணம். பிறர் வரைந்த தலபுராணங்கள், ஒரு தலத்தில் அமைந்திருக்கும் ஒரு சிவாலயத்தின் சிறப்புரைப்பதாகவே அமைந்திருக்கக் காஞ்சிப்புராணம், காஞ்சி நகரில் உள்ள அனைத்துச் சிவாலயங்களின் சிறப்புரைக்கும் பெருங்காப்பியமாக அமைந்துள்ளது. அனைத்து சிவாலயங்களுக்கும் அம்மை காமாட்சியே என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் வடநூல் ஒன்றின் மொழிபெயர்ப்பு என்று கூறப்பட்டாலும் முதல் நூலாகவே கருதத்தக்க சிறப்புடையது. இந்நூலின் பிற்பகுதியைச் சிவஞானசுவாமிகளின் மாணாக்கர் கச்சியப்ப முனிவர் எழுதினார் என்பர்.

நூல் அமைப்பும் அழகும்

காஞ்சிபுராணம் மிக நுட்பமுற அமைக்கப் பட்டுள்ளது. முதற்கண் நாட்டு நகரப் படலங்கள் அழகொழுகப் பாடப்பெற்றுள்ளன. தொண்டை நாடும், காஞ்சிபுரமும் பெருமிதத்துடன் புனையப்பெற்றுள்ளன. தல வரலாறுகளை ஆசிரியர் சிவஞான முனிவர், காஞ்சி நகரின் கிழக்குத்திசையில் அமைந்துள்ளதும், திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றதுமாகிய திருநெறிக் காரைக்காடு என்ற திருத்தலத்தில் தொடங்குகின்றார். முறைப்படி அதிலிருந்து வலமாகச் சென்று, நகரில் இடம்

பெற்றுள்ள சிவாலயங்களின் வரலாறுகளை வரிசை குலையாது கூறிச் செல்கிறார். முடிவில், காஞ்சிக்குச் சிறப்புச் சேர்க்கும் திருஏகம்பத்தின் பெருமை பேச்கிறார். அதன்பின்னர், காமாட்சி அம்மை தழுவக்குழைந்த அருள் வரலாற்றை அமைக்கிறார். பின்னர், அம்மையின் திருமணம் புனைகிறார். தொடர்ந்து, காஞ்சி நகரில் நிகழ்ந்த அற்புதங்களைப் பேசிக் காட்டுகிறார். தொடர்ந்து இப்புராணம் கேட்டலின் பயன் நல்லொழுக்க நெறிநிற்றலே ஆதலால், அவ்வொழுக்கச் சிறப்பு உரைக்கிறார். அவ்வொழுக்கத்திற்குப் பயனும், இறைவன் திருவடிப் பேற்றிற்குச் சிறந்த சாதனமும் சிவபுண்ணியமே யாதலின் அதனை நிறைவாகப் பேசி நூலை நிறைவு செய்கிறார்.

ஆசிரியர் பன்முகப் புலமை

காஞ்சியில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு திருக்கோயிலுக்கும், ஒவ்வோர் படலம் அமைத்துக் கதை நடத்துகிறார் சிவஞானசுவாமிகள். மிகச் சுருங்கிய வரலாறு உடைய தலமாக இருந்தால் அதனை, அடுத்து அமைந்துள்ள விரிவான வரலாறு உடைய தலம் குறித்த படலத்தில், ஒன்றிரண்டு செய்யுள்களால் இணைத்துக் கொள்கிறார். புராணத்தில் எங்கும் ஒரு தொய்வு தோன்றாது, சிறிய வரலாறு கொண்ட படலங்களில் இடையிடையே முக்கியமான பொருள் ஒன்றை இணைத்துப் பயனும் சுவையும் கூட்டுகின்றார். 13 செய்யுட்களைக் கொண்டுள்ள சத்ததானப் படலத்துள் பசு தருமம் மற்றும் சிவ தருமங்களின் இயல்பு உரைத்து அழகுறுத்துகிறார். 7 செய்யுட்களை மட்டுமே கொண்டுள்ள பணாதரேசப் படலத்துள் பெரியார் சால்பே வேண்டத்தக்கது என்பதை நயமுற இணைக்கிறார். 11 செய்யுள்களாலாகிய முப்புராரி கோட்டப் படலத்துள், உபாயச் சரியை மற்றும் உண்மைச் சரியை முதலியவற்றின் இயல்புரைத்துச் சிறப்பிக்கிறார். வடமொழிப் பயிற்சியால் ஆசிரியர் உபநிடதங்கள், சிவாகமங்கள், புராணங்கள்

ஆகியவற்றுள் காணக் கிடக்கும் சைவ நெறி முறைகளை எல்லாம் இப்புராணத்துள் இணைத்துத் தமிழ்ச் சைவப் பெருமக்களுக்குப் பேருபகாரியாகத் திகழ்கின்றார். அரிய உபநிடத வாக்கியங்களும், புராண வசனங்களும் அழகு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இந்நூலுள் இணைக்கப் பட்டுள்ளன. பல அரிய வடசொற்களுக்குச் சொல் மூலங்களும், பொருள் நுட்பமும் கண்டு காட்டுகிறார்.

நால்வர் துதி

நால்வர் பெருமக்கள் பால் சிவஞானயோகிகள் கொண்டிருந்த அளப்பரிய ஈடுபாட்டினை நூல் முழுவதும் காணமுடிகிறது. பெரியபுராண நாயன்மார் வரலாறுகளில் பலவற்றைத் தக்க இடங்களில் இணைத்து மகிழ்கிறார். சைவ சித்தாந்த நுண்பொருள்களைக் கதை நடத்தும் போக்கில் எளிய இனிய உவமைகளில் அழகுறப் பதிவு செய்து நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். திருநாவுக்கரசரை இவர் போற்றும் துதிப்பாடல் பெரிதும் சிறப்புடையது.

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவாரத் திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும்
துதித்து வாழ்வாம் (பாயிரம்-11)

என்ற அரிய பாடலைப் போற்றாத சைவர் இலர். இதைப்போல் சுந்தரமூர்த்தி சுவாமிகளை,

ஒரு மணத்தைச் சிதைவித்து வல்வழக்கிட்டு ஆட்கொண்ட
உவனைக் கொண்டே

இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாளன்
எல்லாம் உய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகை விரித்த
பேரருளின் பெருமான் என்றும்
திருமணக் கோலப் பெருமாள் மறைப்பெருமாள் எமது
குலதெய்வ மாமால்.

எனக் குலதெய்வமாகவே போற்றி நெகிழ்கிறார்.

ஒழுக்க விதிகள் கூறுதல்

காஞ்சிப்புராணத்துள் அமைந்துள்ள ஒழுக்கப்படலம் வடமொழி, தென்மொழி அறநூல்களின் சாரமாக அமைக்கப்பட்டுள்ளது. துறவிகளின் ஒழுக்கநெறி, பிரமச்சாரிகள் மேற்கொள்ளவேண்டிய நித்திய கருமங்கள், இல்லறத்தாரின் கடமைகள், வாழ்வில் செய்யக்கூடாது என விலக்கப்பட்ட தீமைகள், மனைவி உடன் வரக் காட்டில் வாழும், வானப்பிரத்த நிலையினர் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு முறைகள் எனப் பலவும் இப்பகுதியில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கண்டு மகிழலாம்.

இல்லறநெறி நிற்பவர்கள் தாம் உண்ணும் முன்பாகத் துறவுநெறியில் வாழும் அதிதிகளை உண்பிக்க வேண்டும். அடுத்து, இல்லத்தில் நோயுற்றவர் இருப்பின் அவர்களுக்கு உரியவாறு உணவு வழங்குதல் வேண்டும். அடுத்துக் கருவுற்ற பெண்களை உண்ணச் செய்தல் வேண்டும். அடுத்துக் குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும். பின்னர் இல்லத்தில் மூத்த, பெற்றோர் முதலியவர்களுக்கு உணவிட வேண்டும். கடைசியாகத் தம் உற்றார் உறவினரோடு உடனிருந்து உண்டு மகிழ வேண்டும். இவற்றை எல்லாம் உள்ளடக்கி,

நீத்தவர்க்கு ஐயமும் நேர்ந்து, நோயினர்
வாய்த்தவெஞ் சூல்முதிர் மகளிர், பிள்ளைகள்,
மூத்துறு கிழவரை முந்த ஊட்டிப் பின்
ஏத்துறு கிளைஞரோடு உண்டல் ஏயுமால் (ஒ.ப.28)

என்ற பாடல் அமைந்துள்ளது.

சிவபுண்ணியச் செயல்கள்

நிறைவாக அமைந்துள்ள சிவபுண்ணியப் படலம், சைவநெறி வாழ்ந்து, இறைவன் தாள் மலர்களைச் சேர்வார்க்குச் சைவ ஒழுங்குகளை வகை செய்து நிற்கிறது. காஞ்சியம் பகுதியில் இயற்றப்பட வேண்டிய, சிவபுண்ணியச் செயல்களை விரித்துரைக்கிறது. சிவாலயங்களில் பல்வேறு இறையவர் திருமேனிகளை எழுந்தருளச் செய்வார் பெறும் புண்ணியப்பேறு, முதற்கண் விரித்துரைக்கப்படுகிறது. தொடர்ந்து, சிவாலயம் எடுப்பார் பெறும் புண்ணியப்பேறு பேசப்படுகிறது. திருக்கோயில்களைத் திருப்பணி செய்வார்க்கு அமையும் புண்ணியங்கள் வகுத்துரைக்கப் படுகின்றன. எந்தெந்த மலர்களில், எந்தெந்த இறையவர்கள் எழுந்தருளியுள்ளனர் என்பது பேசப்படுகிறது. கலிகாலத்தில் மகிழ்வுடன் வாழ்வதற்கு உரிய நகர், காஞ்சியே என்பது வற்புறுத்தப்படுகிறது. இவ்வாறான பல புண்ணியப் பேறுகளை விளக்கிக் காஞ்சிபுராணம் நிறைவடைகிறது. உருத்திராக்கம் மற்றும் வெண்ணீறு அணிந்து, காலையும் மாலையும் சிவாலயம் சென்று, சிவன் தாள் மலர்களை வணங்கி, சிவன் அடியார்களைப் பூசித்து, அன்னார்க்குத் தொண்டு செய்து, காஞ்சியில் வாழ்ந்திருப்பாராகிய தூயவர்களுக்கு, அன்னை காமாட்சி உடன் அமர் ஏகம்பப் பெருமான் கருணை மிகக் கொண்டு வீடு பேறு அருளுவான்.

காஞ்சி நகரில் வாழ வேண்டுதல்

காஞ்சி என் ஊர் அன்று. அங்கே சென்று வாழப் பொருள் வசதியும் இல்லை. உற்றார் உறவினரும் எனக்குக் காஞ்சியில் எவரும் இலர். தொழில் செய்து பிழைக்கும் அறிவாற்றலும்கூட என்னிடம் இல்லை என்று ஒருவன், சிவஞானசுவாமிகளிடம் தன் நிலைமையை எடுத்துரைத்து, நான் எவ்வாறு காஞ்சியில் வாழ்ந்திருந்து வழிபட்டு உய்ய இயலும் என்று கேட்டிருக்க வேண்டும். சற்றே சினம் கலந்து எள்ளல் சுவையோடு,

கழுதை மேய்த் தாயினும், மற்றும் காழ்படும்
இழிதொழில் இயற்றியும், இரந்து உண்டாயினும்
ஒழிவறு பக்தியின் உறுதி யாளராய்
வழுவறு காஞ்சியில் வதிதல் வேண்டுமால்

(சி.பு.ப.101)

என்று வழிகாட்டி நிற்கிறார்.

தணிகைப் புராணம்

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்களில், பாடப்பெற்ற சிவதலபுராணங்களைப் போல், முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் முருகத்தலங்கள் மீதும், சில தல புராணங்கள் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள் சிறந்ததும், இலக்கியச் செறிவு மிக்கதும், புலவோர்க்கு இன்பம் தருவதுமாகிய ஒன்று தணிகைப்புராணம் என்பது. இதன் ஆசிரியர் கவிராட்சசர் என்று அழைக்கப்படும் கச்சியப்ப முனிவர் என்பவர். இவர் தொண்டடை நன்னாட்டுத் திருத்தணிகையில், சைவ வேளாளர் மரபில் பிறந்தவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் துறவு மேற்கொண்டார். மாதவச் சிவஞானசுவாமிகளின் மாணவர். விரைந்து கவிபாடும் வல்லமை மிக்கவர். திருவானைக்கா புராணம், பேரூர்ப் புராணம், திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி,

விநாயகபுராணம், சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ், காஞ்சிப் புராணம் இரண்டாம் காண்டம், கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடு தூது, பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கர தேசிகரந்தாதி முதலிய நூல்களும் இவரால் இயற்றப்பட்டன. இவர் காஞ்சிபுரத்தில் கி.பி.1790 இல் மறைந்தார். பிற்காலத்தில் சிறந்த இயற்றமிழ் ஆசிரியர்களாக விளங்கிய விசாகப்பெருமாள் அய்யர், சரவணப் பெருமாள் அய்யர் ஆகியோரின் தந்தை கந்தப்பையர், கச்சியப்ப முனிவரின் தலைமாணாக்கருள் ஒருவர்.

புராணக் கட்டமைப்பு

கந்தபுராணத்திற்கு நிகராகக் கற்றவர்களால் போற்றப்படும் தணிகைப் புராணம் 3161 செய்யுட்களைக் கொண்டுள்ளது. சிவன் மற்றும் முருகன் பெருமை பேசுவது. இந்நூலுள் திருத்தணிகை, சீபூரணகிரி, கணிகவெற்பு, மூலாத்திரி, கற்பசித்து, தணிகை, பிரணவார்த்த மாநகரம், இந்திர நகர், நாரதப் பிரியம் எனப் பல பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்து எழுந்தருளியுள்ள ஆபத்சகாய விநாயகர், வீராட்டகாசம் சிவலிங்கம், குமாரலிங்கம், பிரமதேவர் வழிபட்ட லிங்கம், அகத்திய லிங்கம், இந்திரன், திருமால், ஆதிசேடன், இராமன், நாரதர் முதலியோர் வழிபட்ட லிங்கம் முதலிய தெய்வங்களை ஆசிரியர் இந்நூலுள் போற்றிப் பாடியுள்ளார். 64 சிவத்தலங்கள் இவை எனத் தணிகைப் புராணம் இனங்காட்டுகிறது. இவற்றைப் போல் முருகத் தலங்கள் 64 ம் குறிக்கப்பட்டுள்ளன. அரிய துதிப்பாடல்கள் ஏராளம் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இடையிடையே பேசப்பட்டுள்ளன. சங்க இலக்கியச் செய்திகளும், திருக்குறட் கருத்துக்களும் ஆசிரியரால் பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன.

நாட்டு - நகரப் படலங்கள்

திருநாட்டுப் படலத்துள் தொண்டை நன்னாட்டைக் கச்சியப்ப முனிவர் பல அரிய தொடர்களால் புகழ்ந்து போற்றியுள்ளார்.

முட்டறு பாலிநாடு முச்சகத்து உயர்ந்த தொன்றே (1)

நலங்கெழு துறக்க விண்ணை நக்கது தொண்டை நாடு (2)

திருவினர் தக்கோர் சாலச் செறிந்தது தொண்டை நாடு (4)

இவற்றைப் போல் தொண்டை நாட்டின் வளத்திற்குக் காரணமான பாலி என்ற பெயருடைய பாலாற்றை,

காந்தளம் போது வேய்ந்து
களிமயில் கடாவிப் பல்பூ
வேய்ந்தமென் குழல் கொம்பு அன்னார்
வெறியயர் களத்துச் சார்ந்து
வாய்ந்த இங்குலிகச் சேற்றின்
வயங்குதன் உருவம் தோற்றிப்
போந்து உலாய்ச் சிலம்பில் செவ்வேள்
போன்றது பாலி நீத்தம் (திருநாட்டுப்படலம்.18)

எனப் பாடுகிறார். சிவந்த பொருள்களோடு தோய்ந்து பாலாறு செந்நிறம் பெற்றுப் பாய்வது, சிவந்த நிறமுடைய செவ்வேள் நிறத்தை நினைப்பிப்பதாகப் பாடுகிறார். நகரப் படலத்துள் திருத்தணிகைச் சிறப்புக்கள் பலபடப் பேசப்பட்டுள்ளன.

பொருவில் வள்ளியோடு ஆடிடமாகிய
புகழ்த்தணிகை (திருநகரப்படலம்.1)

என்றும், தணிகை மலையை,

அறுமுகன் அரசாளும்
நங்கள் காவியங்கிரி (4)

என்றும் புகழ்ந்து போற்றுகின்றார்.

வாழ்த்துரைத்தல்

தணிகைப் புராணத்துள் அமைந்துள்ள களவுப் படலம், ஒரு நூலுக்குள் அமைந்துள்ள ஒரு அகப்பொருள்கோவை இலக்கியமாக அமைக்கப் பட்டுள்ளது. கோவைத்துறைகள் பலவும் இப்பகுதியில் எடுத்தாளப்பட்டுள்ளன. வள்ளி நாயகித் திருமணப்படலம் கந்தபுராணத்துள் இடம் பெற்றுள்ள வள்ளியம்மை திருமணப் படலத்தைப் பெரிதும் ஒத்தும், சிறிது வேறுபட்டும் அமைக்கப்பட்டுள்ளது. திருமண நிகழ்வுளும் சடங்குகளும் இப்பகுதியில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. நிறைவாக,

மறை ஒலிடும் தணிகை வள்ளல்
அருள் உருவம் வாழி வாழி
பிறை ஏர் நுதல் முகத்துப்
பேர் அமைத்தோள் மாதரார் வாழி வாழி
பேரமைத் தோள் மாதர்ப்
பிணைந்து உலவும் பேர் அருட்கண்
வாரம் இலேன் மாட்டும் வழங்கும்
அவன் கருணை வாழி வாழி

(நாதன் அருள்பெறு படலம்.73)

என்ற வாழ்த்து ஒன்றும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

ஒரு தனி மனிதன், ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ முடியும் என்பதை, 19 ஆம் நூற்றாண்டில் நிறுவிக் காட்டிய பெருந்தமிழ் அறிஞர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. பிற்காலக் கம்பர் என்று இவரைத் திறனாய்வாளர்கள் போற்றுவர். படித்தல், பாடம் சொல்லுதல், நூல்கள் யாத்தல் என்பனவற்றையே வாழ்வாகக் கொண்டிருந்த இவர் இயற்றிய தல புராணங்கள் பல.

19 ஆம் நூற்றாண்டு வரை தல புராணம் பாடப்பெறாத சிவதலத்தில் வாழ்ந்திருந்த சைவ அன்பர்களும், பெருஞ்செல்வர்களும் இவரைத் தம் ஊருக்கு அழைத்துச் சென்று, பெருஞ்சிறப்புகள் செய்து, தம் ஊருக்குத் தலபுராணங்கள் ஆக்கித் தருமாறு வேண்டிப் பெற்றனர். தமிழ்மொழியில் இவரே அதிக எண்ணிக்கையிலான தலபுராணங்களைப் பாடியவர். நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களும் இவரால் பாடப்பெற்றுள்ளன. இவர் பாடிய திருநாகைக் காரோணபுராணமும், மாயூரப் புராணமும் பெருங்காப்பியங்களாகப் போற்றப்படும் சிறப்புமிக்கன.

பெருமித வாழ்வு

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, பாண்டிய நாட்டில் வாழ்ந்திருந்த மரபு வழித் தமிழ்ப் புலவர் சிதம்பரம்பிள்ளை என்பார் மகவாக, சோழநாட்டுக் காவிரித் தென்கரைச் சிற்றூர் எண்ணெயூரில் பிறந்தார். கி.பி.1815 இல் பிறந்த இவர், தம் தந்தையரிடமே தமிழ்க் கற்றுச் சிறந்தார். இளவயதிலேயே காவேரி என்ற நற்குண நங்கையை மனைவியாக அடைந்து, திருச்சிராப்பள்ளியில் குடியேறினார். சென்னை சென்று, காஞ்சிபுரம் சபாபதி முதலியார் முதலியோரிடம் பாடம் கேட்டுப் புலமை வளம் பெற்றார். திருச்சிராப்பள்ளியில் தம்மை நாடி வந்த ஆர்வலர்களுக்குத் தமிழ்க் கற்பித்தார். திருவாவடுதுறை சென்று 15 ஆவது குருமகா சந்நிதானமாக விளங்கிய அம்பலவாண தேசிகரிடம் ஞான நூல்களைக் கற்றறிந்தார். பிற்காலத்தே இவரிடம் தியாகராசச் செட்டியார், உ.வே.சாமிநாத ஐயர், குலாம் காதர் நாவலர், சவுரிராயலு நாயக்கர் முதலிய பெரும்புலவர்கள் பாடம் கேட்டுச் சிறந்தனர்.

மாயூரப் புராணம்

அக்காலத்தில் சீகாழியில், முனிசீப்பாகப் பணியாற்றிய வேதநாயகர் என்பவரோடு மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு நட்பு

மலர்ந்தது. பின் மயிலாடுதுறையில் நெடுநாள் தங்கியிருந்து மாணாக்கர்களுக்குத் தமிழ்க் கற்பித்தார். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் இவருக்கு மகாவித்துவான் என்ற பட்டம் அளித்துப் பாராட்டினார். மயிலாடுதுறையில் தங்கியிருந்தபோது அன்பர்கள் வேண்டுகோளை ஏற்று இவர், மாயூரப் புராணம் பாடி அரங்கேற்றினார். நந்தனார் சரித்திரக் கீர்த்தனை இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதியார் இவர் காலத்தில் வாழ்ந்தவர். இவர் 1876 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவர் விரிவான வாழ்க்கை வரலாற்றை, மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் என்ற தலைப்பில், உ.வே.சாமிநாத ஐயர் உரைநடையில் ஒரு நூல் வெளியிட்டார். இவர் இயற்றிய மாயூரப்புராணம் 1895 செய்யுட்களால் அமைந்துள்ளது. 64 படலங்கள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

மாயூரத் தலச் சிறப்புகள்

மயிலாடுதுறை என்ற பழம் பெயர் கொண்ட நகரம் பிற்காலத்தில் மாயூரம் என்று மருவியது. காவிரி வடகரைப் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று. இறைவர் மாயூரநாதர். அம்மை அம்சொல்நாயகி. அபயாம்பிகை என்பதே பெருவழக்கு. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியுள்ள தலம். அருணகிரியாரின் திருப்புகழும் இத்தலத்திற்கு உண்டு. கிருஷ்ண ஐயர் என்பார் பாடிய அபயாம்பிகைச் சதகம் என்ற நூல், அம்மை அருள்திறம் உரைக்கும் நயம் மிக்கது. ஐப்பசி மாதம் முழுவதும் இத்தலத்தில் துலா உற்சவம் நடைபெறும். மாதக் கடைசி நாளில் நடைபெறும் கடைமுகம் என்ற நீராட்டுப் பெருஞ்சிறப்பு மிக்கது. மயிலாடுதுறையைச் சூழப் பாடல்பெற்ற சிவத்தலங்கள் பல உள்ளன. இத்திருக்கோயில் பெருமை குறித்து அமைந்த தலபுராணமே மாயூரப்புராணம் என்பது. முன்னதாகிய வாழ்த்துப் பகுதியில் 25 விருத்தப்பாக்கள் இடம் பெற்றுள்ளன. வடமொழியில் நிலவியிருந்த மாயூர மான்மியம் என்ற நூலையே

தாம் தமிழில் செய்துள்ளதாக ஆசிரியர் குறித்துள்ளார். அவையடக்கப்பகுதியில் 9 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன.

அவையடக்கம்

உமையம்மை மயில் உருக்கொண்டு சிவபெருமானைப் பூசித்த தலம் இது. காகம் ஒன்றும் ஒருகால் சிவபெருமானை அன்புடன் பூசித்துப் பேறு பெற்றது என்பது புராண வரலாறு. அவையடக்கத்தில் இவற்றை நினைவுகூரும் ஆசிரியர், மயிலின் பூசையை ஏற்றருளிய மாயூரநாதப் பெருமான், காகத்தின் பூசையையும் ஏற்றருளிய கருணையாளன் என்பதால், பெருங்கவிஞர்களின் பாமாலைகளைச் சூட்டிக்கொண்டு மகிழ்ந்த பெருமானுக்கு என் புன்கவியும் ஏற்புடையதாகவே அமையும் என்று அமைதிகாட்டுகிறார்.

தண்ணிய இமயப் பச்சை
மயில்செய் பூசனை தழீஇய
புண்ணிய முதல்வன் காக
பூசையும் தழீஇய வாற்றால்
எண்ணிய பெரியோர் செய்யும்
இனியபா ஏற்ற லோடு
கண்ணிய ஞானம் இல்லேன்
பாடலும் கைக்கொள் வானால் (அவையடக்கம்.4)

சோழநாட்டின் ஐந்திணை வளம் கூற விரும்பும் ஆசிரியருக்கு, இப்பகுதியில் மலைகள் அதிகம் இல்லையே என்ற ஏக்கம் மிகுகிறது. எனினும், வேறுவகையில் தம் கற்பனைத் திறத்தால் அதனை ஈடு செய்கிறார். சோழநாட்டில் திரிசிராமலை (திருச்சி மலைக்கோட்டை), எறும்பியூர் (திருவெறும்பூர்), வாட்போக்கி மலை, சுவாமிமலை என்பன உள்ளமையால் இங்கே குறிஞ்சி வளமும் உண்டு என்று நயம்பட உரைக்கிறார்.

ஆசிரியர் - புலமை நலம்

பூக்களில் தாமரை, புருடர்களில் திருமால், சோலைகளில் கற்பகம், கலைகளில் ஞானம், பசுக்களில் காராம் பசு, அறங்களில் இல்லறம், நாக்களில் உண்மை பேசும் நா சிறப்புறுதல் போல, நாடுகளில் சோழ வளநாடு சிறந்துளது என்று பெருமை பேசுகிறார். திருஞானசம்பந்தரின் தேவாரப் பாமழையால், புறச் சமயங்களாகிய சமண பௌத்த மதங்கள் ஒழிந்தன. அதைப்போல் சோழ நாட்டில் பெய்த வான் மழையால், வேனில் வெப்பம் என்ற பகை ஒடுங்கியது என்று நயம் பேசுகிறார். மாயூரம் நகரில் கருப்பங்காடுகளும், மாஞ்சோலைகளும் செறிந்திலங்கும் திறம் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அடியவர் கூட்டங்களுடன் கலந்திருத்தலை நினைவூட்டுவதாகச் சமய வரலாற்று நலம் காட்டுகிறார். காசி, குரு சேத்திரம் முதலான தலங்களிலும் மாயூரம் மேம்பட்ட தலம் என்பதனை,

வளம் மலி சிறப்பு வாய்ந்த
மாயூரத் தலத்தை மேவி
உளம் நெகிழ்தர வசித்தல் உற
வலஞ்சூழ்தல், இன்னும்
பளகறு தானம் ஆதி பண்ணுதல்
இவைவல் லார்க்குத்
தளர்வுபட்டு ஓடியும் எப்பாதகங்களும்
சலித்து மாதோ (தலவிசேடப்படலம்.68)

என்ற பாடலால் நிலைநாட்டுகின்றார்.

தொன்னூல் பயிற்சி

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் புலமை மாட்சி, வியப்பூட்டும் பெருமிதம் மிக்கது. சங்க நூல்கள், காப்பியங்கள், அறநூல்கள், சித்தாந்தச் சாத்திரங்கள், பேருரைகள், சிற்றிலக்கியங்கள் என, அவர் கல்லாத

தொன்னூல்களே இல்லை என்பதை அவர் நூல்களால் அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள ஆய்ச்சியர் குரவை என்ற பகுதியில் முல்லை நில மகளிர் திருமாலைப் புகழ்ந்து பாடுகின்றனர். அவற்றுள் ஒன்று மடம் தாழும் நெஞ்சத்து என்று தொடங்குவது. அதன் நிறைவில்,

நடந்தானை ஏத்தாத நாளென்ன நாவே
நாராயணா என்னா நா என்ன நாவே

என்றவரிகள் அமைந்துள்ளன. ஆசிரியர் இதனைக் கருத்தில் கொண்டு முருகவேளைப் புகழ்ந்து, அவ்வாறே ஒரு பாடல் செய்கிறார்.

கடியேறு மலரோனைக் கடுஞ்சிறையில் வைத்துப்
படியாதி எவ்வுலகும் படைத்தருளும் பிரானை
முடியாத முதலோனை மூவர் பெருமானை
வடிவேலன் தனைப்பேசா வாய்என்ன வாயே
வள்ளி மணவாளனைப் பேசா வாய் என்ன வாயே

(-அகத்தியர் பூசைப்படலம்.22)

இத்தகு புலமை நலம் மிகுந்த ஏராளமான பாடல்களால் மாயூரப்புராணம் நடையிடுகிறது. தொல் இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சிக் கொண்டு, எழில் மிக்க சிற்றிலக்கியங்களையும், தல புராணங்களையும் படைத்தளித்த, வீறு கொண்ட புலமைவளம், பிள்ளை அவர்கள் காலத்திற்குப் பின் வறண்டு போய்விட்டமை நம் தவக்குறைவேயாகும்.

வேறு சில தலபுராணங்கள்

இவ்வாறே, சைவ மக்களின் பிரார்த்தனைத் தலங்களுள் ஒன்றாகிய புள்ளிருக்குவேளூர்க் (வைத்தீஸ்வரன்கோயில்) குறித்த தலபுராணம் ஒன்றைக் காத்திருப்பு, வடுகநாத தேசிகர் என்பார் இயற்றியுள்ளார். 1133 பாடல்களால் இந்நூல் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட சீகாழித் தலபுராணம் அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்டுள்ளது.

அட்டவீரட்டத் தலங்களுள், மன்மத தகனம் நிறைவுற்ற திருக்குறுக்கை மற்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உடல் நோய் நீங்கிய திருத்துருத்தி (குத்தாலம்) தலபுராணங்கள் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் பாடப்பெற்றுள்ளன. இவ்வாறான தல புராணங்கள் பலப்பல, சைவத் திருக்கோயில்களைச் சார்ந்து கி.பி.17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்தன. இவை அரிய வரலாற்றுப் பதிவுகளாகவும், புலமை மிடுக்குடனும் அமைந்து, தமிழ் மொழிக்கு அணிகலன்களாகத் திகழ்கின்றன. இவை குறித்த முறையான ஆய்வுகள் வருங்காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். அக்காலை, இவற்றின் சிறப்பும், சைவ இலக்கிய வரலாற்றில் இவை பெறும் சிறப்பிடமும் உலகவருக்குத் தெரிய வரும் என்பது உறுதி.

சைவமும் தமிழும்

சைவ இலக்கியங்கள் குறித்த இந்த ஆய்வில், தல புராணங்கள் குறித்த ஒரு சிறு அறிமுகமாகவே இப்பகுதி அமைகிறது. புலமை நலம் மிக்கச் சைவப் பெருங்கவிஞர்கள் தங்கள் அளப்பரிய புலமைத்திறத்தைத் தாம் பாடிய தல புராணங்களுள் பதிவு செய்துள்ளனர். தமிழ்த் தொன்னூல்களுள் விளக்கம் காணப்படாத பல, புதிர்களுக்கு இவர்கள் விளக்கம் கண்டு காட்டியுள்ளனர். தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருங்காப்பியங்கள் அதிகம் காணப்படாமை, ஒரு வறுமை நிலைமையேயாகும். இந்த நிலை மாறத் தலபுராணங்களுக்கு ஒளியூட்டி, அவற்றைப் பெருங்காப்பியங்களாகத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்வித்தல் வேண்டும். இராமாயணம், மகாபாரதம், சிந்தாமணி, பெருங்கதை என்றெல்லாம் கதைக் கரு வடபுலத்திலிருந்து இறக்குமதி செய்யப்பெற்றன. தமிழ் மண்ணில் கால்கொண்டு எழுந்த பெருங்காப்பியங்கள் மிகச் சிலவே. இந்த நிலைமை மாற, இருப்பவைகளை ஒளியூட்டி வெளிக்கொணர்வது தமிழ் மொழிக்குச் செய்யும் அரிய தொண்டாகக் கருதப்படும்.

மேற்கோள் பாடல்கள்

	ப.எ.
அங்கங்கே	134
அங்கமெலாம்	41
அஞ்சன மேனி	59
அஞ்சுமுகம்	11
அஞ்சுவது	36
அடர்த்து எழு	18
அணி முகங்கள்	19
அணியும் அமிழ்தும்	52
அண்டப் பகுதியின்	50
அதிர்கழல்	66
அமரி குமரி	15
அம்மையே அப்பா	51
அரி அரன்	17
அருட்பெரும்	122
அருந்தும் விடம்	52
அருவமும் உருவு	139
அறிவினான்	96
அன்பில் பெருகிய	83
அன்பு சிவம்	63
அன்று சிறு	133
அன்னம் வைகும்	47
ஆசு கவியால்	110
ஆசு முதல்	111
ஆணிப்பொன்	112
ஆதரிப்போர்க்கு	111
ஆதலின் நமது	140
ஆரம் கண்டிகை	82
ஆறிரு தடந்தோள்	138

	ப.எ.
ஆறுதேறும்	73
ஆற்றுவெள்ளம்	120
ஆனேறு	114
ஆனைத்தோல்	16
இங்கிதன்	79
இடர்களையா	69
இடையறா	148
இல்லக விளக்கது	37
இல்லாரை	70
இறவாத இன்ப அன்பு	67
இறை நிலம்	24
இன்சொலால்	118
ஈசனே அவன்	141
ஈசன் அடியார்	45
ஈறாய் முதல்	32
உணர்ந்தார்க்கு	52
உலகெலாம்	75
உற்றார் ஆருளரோ	37
உன்னை ஒழிய	11
எட்டாயிரம் கோடி	103
எந்தையார்	41
எரியினிடை	28
எல்லாப் பொருளும்	100
எவரெவர்கட்கும்	114
என்றும் அடியவர்	74
என்னை நினைந்து	73
ஐந்து கரத்தனை	58
ஒட்டக்கூத்தன்	103
ஒருமணத்தை	149

கடியேறு	159
கண்ணுதற்பெரும்	134
கதிரோன் எழ	93
கந்தர் அனுபூதி	107
கருணை இலா	122
கழுதை மேய்த்து	151
கற்றவர்கள்	43
கனியினும்	38
காணாத	90
காந்தளம்போது	153
குழவித் திங்கள்	14
கெடுவாய்	107
கேடும் ஆக்கமும்	82
கொங்குதேர்	21
கொடிநிலை	7
கொய்யுலாம்	37
சங்கமும் சக்கரமும்	17
சடையாய்	33
சத்தியாய்	131
சரவணப் பூம்	19
சலம் பூவொடு	36
சாதியும் மதமும்	123
சித்திரையில்	145
சிந்தனை உனக்கு	104
சிந்திப்பரியன	37
சீரணி புகழும்	116
சீருடையாள்	60
சீர்கெழு செந்திலும்	19
சொல்லிய	49
ஞாலம் உய்ய	45
தண்ணமுதுடன்	120
தண்ணிய இமய	157
தந்திரம் ஒன்பது	58
தந்தையார்	33
தம்பிரானை	80
தம்மையே	46
தலைவராம்	40
தாமரை புரையும்	13
திருஆக்கும்	71
திருவளர் ஆரூர்	136
தில்லைவாழ்	76
தீயினும் வெய்யன்	58
துஞ்சலும்	34
தென்தமிழ்	45
தென்னர்க்கும்	112
தென்னாடுடைய	50
தேவர் குறளும்	57
தொடுக்கும் கடவுள்	112
தொட்டுத் தடவி	69
தொண்டர் நாதனை	135
தொல்லை	49
தொழுது தூமலர்	38
நடந்தானை	159
நந்தி அருளாலே	60
நளி இரும் பரப்பின்	13
நற்றவா	46
நன்பாட்டு	41
நாய்வயின்	52
நிலைபெறுமாறு	42
நில்லு கண்ணப்ப	71
நினைந்து உருகும்	41
நீத்தவர்க்கு	150
நீலமேனி	8
நூற்று எண்பது	101
பக்திச்சுவை	76
படமாடக்கோயில்	64

பண்ணின்	43
பண்பால்	66
பரந்தவிளை	94
பழமறைகள்	112
பாணியும் தூக்கும்	10
பாரிரும் பௌவம்	18
பிறவா யாக்கை	14
பிறைதவழ்	136
புல்லாகி	49
பூங்கமலத்து	142
பெரியது கேட்கின்	99
பெரியானை	41
பெருகலாம் தவம்	38
பெருநீர் வையை	22
பெருமையால்	84
பொருளாய் என்ன	52
போதம் உண்ட	117
போற்றி அருளுக	50
மல்குக	131
மட்டாரும்	118
மண்ணுலகில்	47
மண்ணோடு	100
மதிமலிபுரிசை	66
மதியின் வெண்தோடு	15
மந்திரமும்	41
மரத்தை	64
மழை வழங்குக	145
மறங்கடை	8
மறை ஓலிடும்	154
மாதவம் செய்த	45,80
மாலுலா மனம்	55
மாயன் பிரமன்	100
மாயோன் மேய	6
மால்வரை	10
மிண்டு மனத்தவர்	57
முன்பு எனை	83
முன்னம் அவனுடைய	42
மூப்பான்	52
மூவா அமரரும்	9
மூவிரண் டேனும்	39
மைபொதி	92
யாஅம் இரப்பவை	12
யாவர்க்குமாம்	5
யானே பொய்	50
யான்பெற்ற	60
வங்கினன	93
வடமொழியும்	41
வருதிகிரி	19
வரும் அட்ட	111
வழுக்கி வீழினும்	47
வளம்மலி	158
வாடிய பயிரை	122
வாழ்த்த வாயும்	38
வாழ்வாவது	47
வானரங்கள்	120
வான்முகில் வழாது	137
விண்ணுக் கடங்காமல்	108
விறகில் தீயினன்	39
விற்றுக்கொள்வீர்	47
விளையாததோர்	31
வெள்ளேறு	40
வேதத்தை விட்ட	59
வையிற் கதிர்	106

சைவமும் தமிழும்

செந்தமிழ்வாரிதி,

முனைவர் இரா. செல்வக்கணபதி

வெளியீடு

தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை

சென்னை 90